ராணி முத்து

# சுபா

ரூ.6



# ஒப்பனை முகங்கள்

# கள்ளித் திருவிழா



பஞ்சாப் சன்டிகர் நகருக்கு அருகே பஞ்ச்குலா என்ற இடத்தில் ஆசியாவின் மிகப் பெரிய கள்ளித் தோட்டம் இருக்கிறது. 7 ஏக்கரில் அமைந்துள்ள இதில் 2,500–க்கும் அதிகமான கள்ளிச்செடிகளும், சாறு நிறைந்த வேறு சில செடிகளும் உள்ளன.

இவற்றில் பல சிவப்பு மற்றும் செம்மஞ்சள் நிறத்தில் உள்ளன. மருத்துவ குணம் கொண்ட இச்செடிகளை ஆய்வு செய்வதற்காக யுனானி மற்றும் ஆயுர்வேத நிபுணர்கள் இங்கு அடிக்கடி வந்து செல்கின்றனர்.

மார்ச் மாதத்தில் இங்கு தேசிய கள்ளித் திருவிழா நடக்கிறது. பொதுவாக கள்ளிச் செடிகள் பல ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பூக்கும். ஆனால், இங்கு சில கள்ளிகள் ஆண்டுதோறும் பூக்கின்றன.



– ராஜிராதா,
பெங்களூர்.



# ஒப்பனை முகங்கள்





## சுபா

**1**

உங்களைத்தானே!

நீங்கள் எவ்வளவோ வேலைகளுக்கு நடுவில் இருப்பீர்கள்.

'பிஸி'யாக இருப்பீர்கள். காலையில்

எழுந்தவுடன் காப்பி சாப்பிட்டு, பேப்பர் படிக்கக்கூட நேரம் இல்லாமல் உங்கள் குழந்தைகள் இரண்டையும் (அரசாங்கம் சொல்கிறபடிதானே பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள்?) எழுப்பி பல் தேய்க்க வைத்து, குடிக்க ஏதாவது கொடுத்து, குளிப்பாட்டி, 'ஹோம் ஒர்க்' எல்லாம் செய்து முடித்தாகிவிட்டதா என்று பார்த்து, யூனிபார்ம் மாட்டி, பெல்ட் தேடி சலித்து மனைவியைத் திட்டிக் கடைசியில் அதை பீரோவில் உங்கள் சட்டைக்குக் கீழிருந்து எடுத்து அணிவித்து, அவற்றின் வாயில் இட்லியோ, தயிர் சாதமோ திணித்து– பூட்ஸ் அணிவித்து ஸ்கூட்டரில் ஏற்றி ஸ்கூலில் விட்டு வந்த பின் பாத்ரூமில் பாய்ந்து, குளித்து, வெளிவந்து சவரம் செய்யாமல் போனதற்காக உங்களையே நீங்கள் சபித்துக்கொண்டு, இனி 'ஷேவ்' செய்ய நேரமில்லையென்ற உண்மை புரிந்து– பாண்ட் மாட்டி, சட்டை அணிந்து– தட்டில் விழுந்ததை சாப்பிட்டு மகா டென்ஷனுடன் ஆபீசை நோக்கிப் போகிறவராக இருப்பீர்கள்.இல்லாவிட்டால் ஆபீஸ் போகும் பெண்ணாக இருப்பீர்கள்.

அலுவலகம் போகும் பெண்களைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். அவர்களுடைய தேடல்கள், ஏமாற்றங்கள், சந்தோஷங்கள், துக்கங்கள் எல்லாமே எனக்குத் தெரியும்.

இதற்குமேல் பெரியோரே, தாய்மார்களே என்று என்னுடைய விளிப்பை இன்னும் ஐந்து பக்கங்களுக்கு நீட்டிக்கொண்டே போகும் உத்தேசம் எனக்கு இல்லை. காரணம், நீங்கள் என்னை ஒதுக்கிவிட்டுப் போய்விடுவீர்கள். நேராக நான் ஆரம்பித்துவிடுகிறேன். தயவுசெய்து கேளுங்கள்.

ஏன் கேட்க வேண்டும் என்ற எதிர்க்கேள்வி உங்கள் மனதில் தோன்றும். உண்மை. சில காலத்திற்கு முன் இப்படிப்பட்ட ஒரு முன்னுரையோடு என்னிடம் யாராவது பேச வந்திருந்தால் நான் ஒரு நாலணா அல்லது எட்டணாவை வீசி எறிந்துவிட்டு விலகிப் போயிருப்பேன். யாரோ சொல்வதை நான் ஏன் கேட்க வேண்டும் என்று எனக்குள்ளும் தோன்றி இருக்கும்.

ஆனால்–



தயவுசெய்து, தயவுசெய்து என்னை அப்படி ஒதுக்கிவிட்டுப் போய்விடாதீர்கள் சார் அல்லது மேடம் அல்லது தோழி அல்லது தோழா. எனக்கு சமூகத்தில் ஒரு கடமை இருப்பதாக நினைக்கிறேன். காலையில் போகும்போது நடுப்பாதையில் இருக்கும் கல் மேல் இடித்துக்கொண்டால் வலிக்கும். அடுத்தவருக்கு அப்படி ஒரு வலி ஏற்படக்கூடாது என்று கல்லை எடுத்து ஓரமாகப் போட்டுவிட்டுப் போகிறவர்கள்கூட, இந்தச் சமூகக் கடமை காரணமாகத்தான் அப்படி செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதே போன்ற ஒரு சமூகக் கடமைதான் இப்போது என்னையும் சொல்லத் தூண்டுகிறது.

சொல்கிறேன்.

தேள் மேல் கை வைத்தால் கொட்டும். அப்புறம் இருபத்து நான்கு மணி நேரத்துக்கு உடம்பில் விண் விண் என்ற உணர்வு இருந்துகொண்டே இருக்கும் என்று யாராவது சொன்னால் நீங்கள் நம்புகிறீர்கள்தானே? தேளிடம் இருந்து விலகி இருக்கிறீர்கள்தானே?

ஆம்.

ஏன் அப்படி? ஒரு கசப்பான அனுபவம் வேண்டாம் என்றுதானே? இல்லாவிட்டால் 'தேள் கொட்டினால் எப்படி இருக்கும்? என்று தெரிந்துகொள்ளாமல் எப்படி மற்றவர்கள் சொல்வதை நம்புவது?' எனக் கேள்வி கேட்கும் ஆசாமியா நீங்கள்? எனக்குத் தெரிந்து அப்படி யாரும் இல்லை. நீங்களும் நான் சொல்வதைக் கேட்டுக்கொள்கிற மனோபாவத்துடன்தான் இருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது.

ச்ரி. நன்றி.

மற்றவர்களின் அனுபவங்கள்தான் நமக்குப் பாடங்கள் என்று ஒத்துக்கொள்கிறவர் நீங்கள். என் அனுபவத்தைச் சொல்கிறேன். எனது இன்றைய நிலைக்கு, முடிவுக்கு என்ன காரணம் என்பதைச் சொல்கிறேன். நாளைக்கு என் நிலை உங்களுக்கு வரும்போது (அப்படி எதுவும் வரக்கூடாது) நீங்கள் தயாராக இருப்பீர்கள். தெளிவாக இருப்பீர்கள். எப்படிப்பட்ட முடிவை

எடுப்பது என்று உங்களுக்குள் நீங்கள் குழம்பமாட்டீர்கள்.

பிளீஸ்... பிளீஸ். என்னை விட்டு விலகாதீர்கள். நான் சொல்லப்போவது ஒரு பெண்ணின் காதல் கதை. இந்தக் கதையில் கத்தி இல்லை. ரத்தம் இல்லை. பஸ்ஸில்– ரெயிலில் போகும்போது நீங்கள் படிப்பதற்காக எழுதப்பட்டது இல்லை.

நிச்சயம் இது உண்மை. இதில் மென்மையான மனமும், இரக்கமுள்ள இதயமும், நரம்பும், சதையும் கொண்ட ஒரு பெண்ணின் உண்மைக்கதை இருக்கிறது.

எப்படி உண்மைக்கதை என்று நீங்கள் கேட்கிறீர்கள்?

நியாயம்தான்!

ஆனால் நிச்சயம் உண்மை.

ஏனென்றால்... ஏனென்றால்...

சம்பந்தப்பட்ட பெண் நானே.

நீங்கள் நிமிர்ந்து உட்கார்ந்துவிட்டதை இப்போது என்னால் உணர முடிகிறது. 'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்ற பழமொழி நூற்றுக்கும் நூறு உண்மை. ஆனால், பெண் என்றால் அடுத்த வீட்டுப் பெண்ணாக இருக்கவேண்டும்– அடுத்தவன் பெண்டாட்டியாக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் பஸ் நிலையத்தில் தினம் காலை ஒன்பது முப்பது மணிக்கு பஸ் ஏறும் தறுவாயில் பார்த்தவளாக இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட பெண்களுக்குத்தான் பேயும் இரங்கும். மற்றபடி அந்தப் பெண் சொந்த மனைவியாகவோ, தங்கையாகவோ, அக்காவாகவோ, அம்மாவாகவோ இருந்தால் எந்தப் பேயும் இரங்காது. முடிந்தால் கியாஸ் ஸ்டவ்வைத் திறந்து வைக்கும். சரியா... மை டியர்?

ஸாரி. நான் இதுவரை என் பெயரைச் சொல்லவில்லை. என்னை ஒழுங்காக அறிமுகம் செய்துகொள்ளவில்லை. என் பெயர் உமா மகேஸ்வரி. இந்தப் பெயர் ரொம்பவும் நீளமாக இருப்பதாலும், சுதந்திரம் பெறுவதற்கு முன்பே அப்பெயர் காலாவதி ஆகிவிட்டதாலும் நான் அந்தப் பெயரை



சுருக்கிக்கொண்டேன். உமா என்று சொல்வதில் இருக்கும் ஒரு எளிமை, உமாமகேஸ்வரியில் இல்லை அல்லவா? எனவே உமா. உங்களுக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படிக் கூப்பிடலாம்.

என்னைப் பற்றிய சுய அறிமுகம்.

சின்ன வயதில் எனக்கு எப்போதுமே ஜுரம் வந்துகொண்டிருக்கும். ஒரு கொய்யாப்பழம் தின்றால் ஜுரம். பலாச்சுளை தின்றால் ஜுரம். வேர்க்கடலை சாப்பிட்டால் வாந்தி, மயக்கம். ஒருவாரம் டாக்டர் வீட்டுக்கு அம்மா என்னை அழைத்துக்கொண்டு போகாவிட்டால், டாக்டர் வீட்டுக்குத் தன் ஸ்கூட்டரில் போகும் சமயம் என் வீடு தேடிக்கொண்டு வந்துவிடுவார். 'இந்நேரத்திற்குள் ஜுரமோ, வாந்தியோ, பேதியோ ஏதோ ஓர் இழவு இந்தப் பெண்ணுக்கு வந்திருக்க வேண்டும். ஏன் வரவில்லை?'– என்ற சந்தேகத்தோடு.

என்னால் டாக்டர் எங்கள் வீட்டுக்கு அவ்வளவு நெருக்கமாகிவிட்டார். என் ஜுரமெல்லாம் பதினாறு வயது வரைக்கும்தான். பொதுவாக பெண்கள் எல்லாம் பதிமூன்று வயதிலேயே மூன்று நாட்கள் வாரப் பத்திரிகைகள் எல்லாம் படிக்கத் தொடங்குவார்கள். நான் அப்படி இல்லை. இது அம்மாவுக்கும் நிறைய கவலையை அளித்தது. உலகத்து மக்களுக்கு எதற்கெல்லாம் கவலைப்படுவது என்பதற்கு ஒரு வரையறையே இல்லை. குழந்தை சாப்பிடவில்லையா? கவலை. சாப்பிடுகிறதா? கவலை. தூங்கவில்லையா? கவலை. தூங்குகிறதா? கவலை. அழவில்லையா? கவலை. அழுகிறதா? கவலை.

அம்மாவுக்கு இந்த மாதிரி கவலைகள் கொஞ்சம் 'ஓவர்டைம்' போட்டு வேலை செய்யும். அதனால் பதினாறு வயது வரை நான் 'ஸானிடரி நாப்கின்'களை உபயோகிக்கத் தொடங்கவில்லை என்பது ரொம்பவும் கவலையாகிவிட்டது. எனக்கென்று ஒரு டாக்டர் இருக்கிறாரே... அவரிடம் போட்டு 'ராபனா' என்று உடைத்துவிட்டாள்.

டாக்டருக்கும் கவலை வந்துவிட்டது. என்னைப் பரிசோதிக்க வேண்டும் என்றார். கிளினிக்கிற்கு வரச் சொன்னார். போனேன். அவருடைய பெஞ்சில் ஏறிப் படுக்கச் சொன்னார். படுத்தேன். கூட அம்மாவைக் கூட்டி வரவில்லை. 'இளங்கன்று பயமறியாது' என்பார்களே! அதுபோல வீட்டில் இருந்து யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் ஒரே ஓட்டமாக ஓடி வந்துவிட்டேன்.

டாக்டருடைய பெஞ்சில் படுத்தபோது என்னை அறியாமல் என் மனதில் ஒரு திக் திக். அறையில் மாட்டி இருந்த படங்கள் இப்போதுதான் என் கண்களில் பட்டன. ஒரு டாக்டரின் அறையில் மாட்டப்பட வேண்டிய படங்களா அவை? ஆணும், பெண்ணும் வினோதமான, ஆச்சரியகரமான செயல்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஒரே ஆறுதல்! அந்தப் படங்களில் இருந்தவை எல்லாம் கல் சிற்பங்கள். அச்சிற்பங்களை வடித்த சிற்பியை நொந்தேன். சாபமிட்டேன். அந்த மாதிரி சிற்பங்களைப் புகைப்படங்களாகச் சுட்டுத் தள்ளியவனை திட்டித் தீர்த்தேன். அவற்றுக்கு 'பிரேம்' போட்டவனைத் திட்டினேன்.

அந்த நாள் வரை நான் ஆண் பிள்ளைகளோடு பேசியே அறியாதவள். என் சட்டையின் 'ஹூக்'கைக் கழற்ற வேண்டும் என்றால்கூட பாத்ரூமில் போய்க் கதவைச் சாத்திவிட்டு, இடுக்குகளை எல்லாம் ஒரு தரம் ஒற்றைக் கண்ணால் சோதித்து, யாரும் பார்க்கவில்லையே என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு அதற்குப் பின்னர்தான் கழற்றத் தொடங்குவேன். அப்படிப்பட்ட எனக்கு படங்களில் இருந்த சிற்பங்களின் நிலை என்னவோ செய்தது.

கதவு திறக்கப்பட்டது. டாக்டர் உள்ளே நுழைந்தார்.

அந்தக் கதவுக்கு 'ஆட்டோமாடிக் லாக்கர்' மாட்டப்பட்டிருந்தது. அறையின் ஏ.ஸி.யின் ரீங்காரம். டாக்டர் உள்ளே நுழைந்து என்னைப் பார்த்து வந்தார். கதவு அவருக்குப் பின்னால் மெதுவாக ஒரு கைவிசிறியின் ஊசல்






# வெண் தழும்பு

சிகிச்சை இருக்க, கவலை எதற்கு?

வெண் தழும்புகள் மீது உரிய பலன் தெரியக்கூடிய புதிய மருந்து எங்களிடம் உள்ளது. தோலின் இயல்பு நிறத்திற்கு மாறி விரைவில் வெண் தழும்புகள் மறைந்துவிடும். முழுமையான நிவாரணத்திற்கு உத்திரவாதம். அப்படியிருக்க, வெண் தழும்புகள் பற்றி கவலை ஏன்? முழுமையான சிகிச்சைக்கு உடனே தொடர்பு கொள்ளவும்.



## மூலம் – அறுவை சிகிச்சை தேவையில்லை

எங்களது ஆயுர்வேத சிகிச்சை மூலநோய்க்கு முற்றிலும் நிவாரணம் அளிக்கிறது. முழு சிகிச்சைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.

## வயிறு பிரச்சினை

நாள்பட்ட வாயுக்கோளாறுக்கு எங்களது புதிய ஆயுர் வேத சிகிச்சை முழு நிவாரணமளிக்கிறது. வயிற்றில் அமிலத்தன்மை, மலச்சிக்கல், மன அழுத்தம், ஒய்வின்மை போன்றவற்றிற்கு புதிய ஆயுர்வேத சிகிச்சை உள்ளது. இதன் மூலம் நோயாளிகள் முழு நிவாரணம் பெறலாம்.

## உடல் பருமன் (வயிற்றுச் சதையை குறைக்க)

அதிகப்படியான கலோரிகளை எரித்து, பருமனான வயிறு, அதிக எடை, தொங்கும் கன்னச்சதை, குழந்தைப் பருவ கூடுதல் எடை, அசாதாரண தோற்றம் போன்றவற்றை கட்டுப்படுத்தி அழகாக மாற்றுகிறது எங்களின் ஆயுர்வேத சிகிச்சை. உடனே தொடர்பு கொள்ளவும்.

## நரை /முடி உதிர்தலை தடுத்தல்

எங்களிடம் ஹெர்பல் சிகிச்சை எடுத்துக் கொள்வதன் மூலம் முடி நரைப்பதும், உதிர்வதும் தடுக்கப்படுகிறது. சிகிச்சைக்குப்பின் உங்களது முடி வேகமாகவும், அழகாகவும் வளர்வதோடு முடி உதிர்தலும் கட்டுப்படுத்தப்படுகிறது. சிகிச்சைக்காக இன்றே தொடர்பு கொள்ளவும்.

BALAJI AAYURVED, GAYA

08294326088,08873983941

போல் சாத்திக்கொண்டது. 'க்ளிக்' என்றது.

டாக்டரின் கண்களில் ஒரு மினுமினுப்பு, அவரின் கண்ணாடியை மீறி எனக்குத் தெரிந்தது. அவருடைய தொண்டைக்குழி கோலியின் அசைவு, வாயில் ஊறும் எச்சிலை அவர் முழுங்குகிறார் என்று தெரிவித்தது.

இத்தனை வருடப் பழக்கத்தில் நான் டாக்டரை என் அப்பா ஸ்தானத்தில் ஏற்றி வைத்திருந்தேன். அவருடைய முடி வருடா வருடம் பின்வாங்கிக்கொண்டே இருந்தது. ஒன்றிரண்டு பற்கள் காணாமல் போயிருந்தன. முகத்தில் வருடா வருடம் சுருக்கங்கள் சேர்ந்துகொண்டே இருந்தன.

அவருடைய இளமை அவரிடம் இருந்து சொல்லாமல் நழுவிக்கொண்டே இருந்தது. அதனால் அவர் எனக்கு அப்பாவாகத் தெரிந்ததில் ஆச்சரியமே இல்லை. ஆனால், டாக்டருக்கு நான் மகளாகத் தெரியவில்லை போலும்.

ஒரு ஆணின் கண்கள்– அவனின் மனதைக் காட்டிக் கொடுக்க முடியும் என்பதை அன்றுதான் உணர்ந்தேன். பெண்களுக்கு மிக இயற்கையாக வந்து சேர்ந்திருக்கும் உணர்வு அது. ஆண் மகன் தொட்டால் அது இயல்பா... போலியா என்பதைத் தொட்டமாத்திரத்திலேயே உணரும் சக்தி பெண்களுக்கு எப்படியோ வந்து சேர்ந்துவிடுகிறது.

எனக்கு வியர்த்தது.

டாக்டர் என் அருகில் வந்து நின்றார்.

என்னைத் தலை முதல் பாதம் வரை மெல்லப் பார்த்தார். கண்களால் வருடினார்.

கூசியது. வியர்வை... இதயத்தில் துடிப்பு அதிகமானது. ரத்தம் என் உடலின் எல்லாப் பாகங்களிலும் பாய்ந்து சர்ரென்று உடம்பில் சூடேறியது. ஒரு மாதிரி செய்தது.

சட்டென்று எழுந்துகொள்ள முயற்சி செய்தேன்.

டாக்டர் என் உடலின் இரு பக்கங்களிலும், பெஞ்சின் மேல் தன் இரு கைகளை ஊன்றினார்.

"அப்படியே படுத்திரு உமா."



அந்தக் குரல் ஒரு கட்டளை போல் ஒலித்தது. அதில் இருந்த அசாதாரணமானத் தன்மை, இதுவரை எனக்குப் பரிச்சயமற்றது. என் உடம்பு பெஞ்சில் பசை போட்டு ஒட்ட வைத்த மாதிரி இருந்தது. நான் என் முயற்சியைக் கைவிட்டேன்.

டாக்டர் என் தலையில் கை வைத்தார். மெல்ல நெற்றிக்கு வந்தார். என் நேர் மூக்கை விரல்களால் பற்றி வருடினார். உதடுகளைத் தொட்டார். மேலும் நகர்ந்து கழுத்து, சட்டை.

சட்டையின் பித்தான்களைப் பற்றி இழுத்தார். அந்தச் சட்டைக்கு 'பிரஸ் பட்டன்' வைத்து தைக்கப்பட்டிருந்தது. 'படக் படக்' என்று பிடுங்கிக்கொண்டன... அத்தனை பித்தான்களும். அம்மா என்னை எப்போதும் ஒரு 'ஷிமி' அணிந்துகொள்ளச் சொல்வாள். அணிந்திருந்தேன். அது ஒரு பாதுகாப்பு கவசமாக இருந்தது. பாவாடைக்குள் சென்று மறைத்திருந்தது.

"இதோ பார் உமா. நீ பயப்படக்கூடாது. வேர்த்து விட்டிருக்கிறதே! அடடே... ஏன் 'டென்ஷன்' ஆகிறாய்? நான் என்ன செய்யப்போகிறேன் என்று பயப்படுகிறாய்? இந்த வயதில் ஒரு பெண்ணுக்கு இயற்கையாக நடக்கவேண்டியது எல்லாம் நடக்க வேண்டும். உனக்கு நடக்கவில்லை. அதான் ஏன் என்று பார்க்கப் போகிறேன்.

உன் வயதுப் பெண்கள் எல்லாம் கல்யாணமாகி, குழந்தையே பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். நீ என்னடாவென்றால்... இன்னும் குழந்தையாகவே இருக்கிறாயாமே! அம்மா சொன்னாளே... அதுதான் பார்க்கப் போகிறேன். பயப்படக்கூடாது... என்ன?"

அவர் பேசிக்கொண்டே இருந்தார்.

ஒரு வார்த்தைக்கும், இன்னொரு வார்த்தைக்கும் நடுவில் இடைவெளி விட்டு அவர் ரொம்ப நிதானமாகத்தான் பேசினார். அவர் பேச்சு எனக்குப் புரிந்தது. குரல் என் உடம்பில் ஊடுருவி நுழைகிற மாதிரி இருந்தது. அவர் சும்மா பேசிக்கொண்டு இருக்கிறார் என்றுதான் நினைத்தேன். எப்போது என் 'ஷிமி'யைப் பாவாடைக்குள் இருந்து உருவினார்

என்றே எனக்குத் தெரியவில்லை. உருவி இருந்தார். சட்டென்று மேலேற்றிவிட்டார்.

"ஐயோ" என்று கூச்சல் போட்டேன்.

"நோ... நோ... பயப்படாதே. 'ஹார்மோன்' வளர்ச்சி எப்படி இருக்கிறது என்று பார்க்கிறேன். அவ்வளவுதான்! இதற்குப் போய் கத்தலா... சேச்சே" என்று டாக்டர் இன்னும் அதே குரலை வைத்திருந்தார்.

அவருடைய கண்கள் எங்கே பதிந்திருந்தன என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். உங்களில் தெரிந்த யாருக்காவது இத்தகைய ஒரு நிலை ஏற்பட்டிருக்கக்கூடும். டாக்டரிடம் என்று இல்லை. வளையல்காரன்... இல்லாவிட்டால் மளிகைக்கடைக்காரன், இல்லாவிட்டால் வீட்டுக்கு அடிக்கடி வந்துபோகும் ஆள் என்று எவனாவது ஒருவன்– வாழ்க்கையின் அறியாப் பருவத்தில் இப்படிப்பட்ட ஓர் அனுபவத்தைக் கொடுத்திருக்கக்கூடும்.

உங்களுக்கு அந்த சமயத்தில் ஏற்பட்ட கிலிதான் எனக்கும் ஏற்பட்டது.

"பிரமாதமான வளர்ச்சிதான். இந்த 'ஷேப்'பில் நான் இதுவரைக்கும் பார்த்ததே இல்லை உமா. நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரி. உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறவன் ரொம்ப ரொம்ப அதிர்ஷ்டக்காரன்" என்று டாக்டர் என்னைப் புகழ்ந்தார்.

மற்ற நாட்களில் என்றால் அந்தப் புகழ்ச்சி என்னைக் குளிர்வித்து இருக்கும். புகழ்ச்சிக்கு மயங்காதவர் யார் இருக்க முடியும்?

ஆனால் அன்றைக்கு, டாக்டரின் கிளினிக்கில்– வேறு யாருமற்ற அறையில்– அந்த வார்த்தைகள் எல்லாம் ஒரு கருந்தேளின் கொட்டுகளாக என் காதில் விழுந்தன. டாக்டரின் விரல்களில் நடுக்கத்தைப் பார்த்தேன். அந்த விரல்கள் என் உடலில் பட்டன. நான் மூடி மறைத்து வைத்திருந்த இடத்தில்– நானே பார்த்துக்கொள்ள வெட்கப்படும் இடத்தில்.



அவ்வளவுதான்! என் உடலை ஒரு இடி ஊடுருவியது போல் இருந்தது. குபீரென்று படுக்கையில் இருந்து எழுந்தேன். டாக்டரின் கையைப் பற்றி பலமாகக் கடித்தேன்.

"விடு... விடு... ஆ! ஐயோ...வலி...வலி" என்று டாக்டர் எழுப்பிய வேதனைக் குரல்– எனக்குக் கொஞ்சம்கூட பச்சாதாபத்தைத் தோற்றுவிக்கவில்லை.

என் பற்கள் பதிந்து அவர் புறக்கையில் ரத்த முத்துக்கள். ரத்தத்தைப் பார்த்ததும் நான் பயந்துபோனேன். டாக்டரை பின்னால் தள்ளினேன்.

அவர் சரிந்தார். அவரது பின்மண்டை எதன் மீதோ மோதியது. நான் அதையெல்லாம் கவனிக்கும் நிலையில் இல்லை. அவசரம் அவசரமாக 'பட்டன்'களைப் பொருத்திக்கொண்டேன்.

கதவைத் திறந்தேன். புயல்காற்றில் அகப்பட்ட சருகு போல ஓடிவந்தேன். வீட்டுக்குள் நுழைந்தேன். நல்ல வேளை... அம்மா இல்லை. எனக்கு அழுகை வந்தது. யாரும் அறியாமல் அழுவதற்குத் தோதான இடம் எது என்று நான் யோசித்துக்கொண்டு இருந்த நேரத்தில்– எனக்கு அடிவயிற்றில் அந்த வலி தோன்றியது.

மகத்தான வலி அது! என் வாழ்நாளில் நான் அதை உணர்ந்ததே இல்லை.

"ஹம்மா" என்ற உரத்த முனகலோடு அப்படியே நான் கூடத்தில் சரிந்தேன்.

## 2

எனக்கு என்ன நேர்ந்தது என்பது உங்களுக்கு இந்நேரம் புரிந்திருக்கும். ஆம்... 'அதுதான்' நேர்ந்தது. என்னை அறியாமல் நான் வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்குத் தாவிவிட்டேன். அப்படியே கிடந்தேன்.

எங்கேயோ போயிருந்த அம்மா, கையில் ஏதோ பாத்திரத்துடன்

வீட்டுக்குள் நுழைவது எனக்கு எங்கேயோ நடக்கிற மாதிரி தெரிந்தது. அம்மா என்னைப் பார்த்தாள். புத்திசாலி! உடனே புரிந்துகொண்டாள். அவள் மனதின் மகிழ்ச்சி, முகத்தில் வெளிப்டையாகத் தெரிந்தது.

"அடி ராஜாத்தி" என்றாள்.

என் பக்கத்தில் வந்து என்னை எழுப்பி உட்கார வைத்து, தன் கைவிரல்களை மடக்கி சடசடவென்று முறித்து, திருஷ்டி கழித்தாள். நான் அம்மாவின் மார்பில் சாய்ந்து, உடல் குலுங்க அழுதேன்.

"என்னம்மா... என்ன ஆகிட்டதுன்னு அழறே? எல்லாம் நடக்க வேண்டியதுதான் நடந்திருக்கும்மா" என்று அம்மா என் முதுகைத் தட்டிக் கொடுத்தாள்.

சின்னப் பிள்ளைகளுக்கு பால் புகட்டிய பின் ஏப்பம் வராவிட்டால், அம்மா அதன் முதுகில் தட்டிக் கொடுப்பாளே! அந்த மாதிரி தட்டல்தான் அது. எனக்கு அது தேவையாக இருந்தது. வருடிக் கொடுத்தாள்.

அதுவும் எனக்குத் தேவையாய் இருந்தது. எழுப்பினாள். வீட்டின் ஒரு மூலையில் உட்கார வைத்தாள். என் பக்கத்தில் ஒரு உலக்கையைக் கொண்டுவந்து வைத்தாள். அக்கம் பக்கத்தில் இருந்த பெண்களிடம் எல்லாம் போய் சொல்லிவிட்டு வந்தாள்.

அவர்களும் என்னை அப்போதுதான் புதிதாகப் பார்க்கிற மாதிரி வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். அவர்கள் பார்வையில் இருந்த ஒரு விதமான கிண்டல், என்னைக் கூசச் செய்தது.

"பரவாயில்லடி. கடைசியில் இப்பவாவது உங்க அம்மாவோட கவலையைத் தீத்தியே" என்று சொன்னாள்.

அம்மாவுக்கு இது ஒன்றுதான் முக்கிய கவலையா? அதை நான் தீர்க்க வேண்டுமென்றால் இந்த மாதிரியான அவதிக்குள்ளாக வேண்டுமா? எனக்குப் புரியவில்லை. நான்



மவுனமாக இருந்தேன். டாக்டர் வீட்டுக்குப் போனதையும், அங்கே நடந்ததையும் சொல்லலாமா... வேண்டாமா என்று யோசித்தேன். தயக்கமாக– பயமாக இருந்தது.

நான் ஏன் தயங்க வேண்டும்? நான் ஏன் பயப்பட வேண்டும்? தப்பு பண்ணியவள் நான் இல்லையே! சொல்லேன்.

சொல்லிவிட்டேன். என் உள்மனம் ஆர்ப்பரித்தது. இருந்தாலும் டாக்டரின் கையில் நான் ஏற்படுத்திவிட்டு வந்த பல்குறி– அதில் இருந்து புறப்பட்ட ரத்த முத்து– அவை இரண்டும் என் வாயைக் கட்டிப்போட்டன. டாக்டரை நான் கடித்தேன் என்று சொன்னால் அம்மா நிச்சயம் என்னைப் பாராட்டப் போவதில்லை. அதனால் சொல்லவில்லை.

புட்டு செய்தார்கள். யார் யாரோ பெண்கள் எல்லாம் வந்து எனக்கு திருஷ்டி சுற்றினார்கள். என்னை குளிப்பாட்டிவிட்டார்கள். புடவை கட்டிவிட்டார்கள். பாட்டுப் பாடினார்கள்.

இனிமேல் நான் ஆண்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். புடவையின் மேலாக்கை எப்படிப் போட்டுக்கொள்ள வேண்டும்? தாவணியை எப்படி செருகிக்கொள்ள வேண்டும்? என்று எனக்கு 'டியூசன்' எடுத்தார்கள்.

அறையின் உள்ளே நான் இருந்தேன். சாமியறை அது. வெளியே கூடத்தில் டாக்டரின் குரல் கேட்டது.

"வாங்க டாக்டர்... வாங்க" என்றாள் அம்மா."எங்கே அந்த முரட்டுப் பொண்ணு?" என்று டாக்டர் கேட்டார்.

அம்மா, அப்பா, அக்கா மூன்று பேர் குரல்களிலும் சந்தோஷம். என் குடும்பத்தவர்களின் மகிழ்ச்சியை என்னால் ஏற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால், டாக்டரின் குரலிலும் மகிழ்ச்சி இருந்ததே! கோபம் இல்லையே? எப்படி....? அதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை!

"ஏன் டாக்டர். எங்க உமாவைப் போய் முரட்டுப் பொண்ணுன்னு சொல்றீங்க? அவ ரொம்ப சாதுவான

பொண்ணாச்சே!" என்று அக்கா எனக்கு வரிந்துகொண்டு சொன்னாள்.

"உன் தங்கையோட சாதுத்தனத்தை நீதான் மெச்சிக்கணும்.. இங்க பார்த்தியா?"

"......................"

"எல்லாம் உன் சாதுத் தங்கை உமாவோட வேலைதான்."

"ஐயையோ... என்ன டாக்டர் இது? கையில கட்டு!"

"என்ன பண்ணினா டாக்டர்?" என்றது அப்பாவின் குரல். அவர் குரலில் இருந்த கோபத்தையும், கவலையையும் என்னால் உணர முடிந்தது.

"என்ன ஆச்சி. சொல்லுங்களேன்" என்று அம்மா 'சஸ்பென்ஸ்' தாங்காமல் டாக்டரைத் துளைத்தார்.

"என்ன ஆச்சி... கடிச்சிட்டா!"

"கடிச்சிட்டாளா?"

"ஏன் டாக்டர்?"

என் குடும்பம், டாக்டரை கேள்வி மேல் கேள்வியாக அனுதாபப் பூச்சுடன் வினவியது.

"ராமனாதன் சார், உங்களுக்குத் தெரியாதது இல்லை" என்று ஆரம்பித்தார் டாக்டர். ராமனாதன், அப்பாவின் பெயர்.

"சொல்லுங்க டாக்டர்" என்றார் அப்பா.

"உமாவுக்கு பதினாறு வயசு முடிஞ்சிடுச்சி. இவ்வளவு வயசுக்கு அப்புறமும் 'பீரியட்ஸ்' வரலேங்கறது நிச்சயமா கவனிக்க வேண்டிய விஷயம். பெண்ணோட வளர்ச்சியில இயற்கையே ஏற்படுத்தித் தர ஒரு வாய்ப்பு இருக்கு. குழந்தைங்க சின்ன வயசுலேயே அம்மா அப்பா விளையாட்டு விளையாடுவாங்க. கவனிச்சி இருக்கீங்களா? உங்க சின்ன வயசில நீங்ககூட அப்பா–அம்மா விளையாட்டு விளையாடி இருப்பீங்க. என்னம்மா... நான் சொல்றது சரிதானே?"

"ஆமா டாக்டர்" என்று அம்மா வெட்கம் கலந்த குரலில் சொன்னது எனக்குக் கேட்டது.

"தட் இஸிட். எதுக்கு அந்த விளையாட்டு? ஆண் குழந்தையும்,



பெண் குழந்தையும் நெருக்கமாகப் பழகறதுக்கு அது ஒரு வாய்ப்பு. பையனோட கை பொண்ணு மேல படும். பொண்ணோட கை ஆண் மேல படும். இந்த ஸ்பரிஸம் ரெண்டு பேர் உடம்புலேயும் இயற்கையா சில மாறுதல்களை ஏற்படுத்தும். 'ஹார்மோன்' சுரப்பிகளைத் தூண்டிவிடும். அதனாலயே பொண்ணுகளுக்கு பன்னிரண்டு, பதிமூணு வயசுல என்ன நடக்கணுமோ அது நடந்துடும். உமாவை நீங்க ரொம்பப் பொத்தி பொத்தி வளத்துட்டீங்கன்னு நெனைக்கறேன். ஆம்பிளைப் பசங்களோட அது இதுவரைக்கும் பழகவே இல்லைன்னு தோணுது. நான் சொல்றது சரிதானே?"

நான் பதில் குரலை எதிர்பார்த்துக்கொண்டு இருந்தேன். பதில் இல்லை. ஒரு மவுனம், கூடத்தில் நிலவியது. அம்மாவின் அழுகைக் குரல் கேட்டது.

"அடடே... நான் இப்ப என்ன கேட்டுட்டேன்னு நீங்க இப்ப அழறீங்க?

"டாக்டர், அவ அழறதுக்குக் காரணம் இருக்கு. எனக்கு ரெண்டு பொண் கொழந்தைங்க மட்டும்தான்னு நீங்க நெனைச்சிட்டு இருப்பீங்க. மூத்தவன் பையன்" என்றார் அப்பா.

"உங்களுக்கு ஒரு பையன் இருக்கானா? சொல்லவே இல்லியே."

"இருந்தான்."

"அப்படியா? ஐம் ஸோ ஸாரி. பையன் இறந்து போயிட்டானா? எனக்குத் தெரியாது.."

"இல்ல. என் பையன் செத்துப் போகலை. எங்களை விட்டுப் போயிட்டான். அவனோட ரெண்டுங்கெட்டான் வயசுல அவனுக்கு எப்பவுமே பொண்ணுங்களோடதான் பேச்சு, அரட்டை எல்லாமே! ஆரம்பத்துல நாங்க அவனை கண்டிக்கல. இது இயல்பான விஷயம்தானேன்னு சும்மா இருந்துட்டோம். அப்ப நாங்க இந்த ஊர்ல இல்ல. கிராப்பட்டியில் இருந்தோம். அங்கதான் பாங்க்ல வேலை செஞ்சிகிட்டிருந்தேன்.

பையனுக்கு இந்த மாதிரி பெண்களோடயே சகவாசம்ங்கற
எனக்கு அவ்வளவாத் தெரியாது. ஒருநாள் நான் பாங்க்லேர்ந்
திரும்பி வந்தப்ப, எங்க வீட்டு வாசல்ல ஒரு குடும்பமே
நின்னு கத்திக்கிட்டிருந்தது. நான் என்னன்னு விசாரிச்சே
அவங்க வீட்டுப் பொண்ணுகிட்ட பையன் தகாத முறையி
நடந்துகிட்டிருக்கான்னு தெரிய வந்தது. என் மானம், மரியா
கவுரவம் எல்லாமே காத்துல பறக்கிற மாதிரி எனக்கு
பட்டது.

என் வீட்டு வாசல்ல நின்னு, நாலு பேருக்குக் கேக்கற மாதி
பொண்ணோட அம்மா கத்தினது அந்தப் பொண்ணுக்கு
நல்லதில்லன்னு அவங்களுக்குத் தெரியல. அவங்க கத்தினாங்
இருந்தாலும் எனக்கு ரொம்ப கஷ்டமா இருந்தது. அவங்ககிட்
மன்னிப்பு கேட்டு அனுப்பி வெச்சிட்டு வீட்டுக்குள்ளே
நுழைஞ்சேன். பையன் சாமி அறையில போய் சாமி படத்துக்
முன்னால உக்காந்து கும்புட்டுக்கிட்டு இருந்தான். செய்யறதையு
செஞ்சிட்டு இப்படி சாமி படத்துக்கு முன்னால உக்காந்த
எல்லாம் சரியாய்டுமான்னு எனக்குள்ள கோபம் புருபுருன்னு
வந்தது.

'டேய்... இங்க எழுந்து வாடா'ன்னு கூப்பிட்டேன். அப்
உமா சின்னப் பொண்ணு. நாலு, அஞ்சி வயசு இருக்கும்
பெரியவளுக்குப் பத்து வயசு. அவங்க ரெண்டு பேரு
கூடத்துலதான் இருந்தாங்க. பையன் பயந்துக்கிட்டே எழுந்
வந்தான். 'அப்பா. நான் இல்லப்பா. அந்தப் பொண்ணுதா
என்னை அவங்க வீட்டு கெணத்தடிக்குக் கூட்டிட்டு
போயி...'ன்னு என்னவோ சொல்ல ஆரம்பிச்சான்.

எதையும் கேட்டுக்கற மாதிரி இல்ல நான். என் கவுரவ
போய்டிச்சே! மானம், மரியாதை எல்லாம் கப்பல் ஏறிடிச்சே
என்கிட்ட கோடு போடுற ஒரு தடி இருந்தது. பரம்பரை
பரம்பரையா இருக்கற சொத்து அது. நல்லக் கெட்டியான
தடி. அதால அவனை அடிச்சேன். 'அப்பா, அப்பா'ன்னு வ
தாங்காம கத்தினான்.



நான் விடலை. அடி எங்கங்க பட்டதுன்னுகூட பாக்கலை. கோபம் என் கண்ணை மறைச்சிடுச்சி. அடின்னா அடி... அப்படியொரு அடி. ஒவ்வொரு அடிக்கும் அவன் ஒடம்பு வீங்கிட்டிருந்தது. தோல் பிய்ஞ்சி போச்சி. 'இனிமே பொண்ணுங்களோட சேருவியா, சேருவியா, போவியா, பேசுவியா?'ன்னு கேட்டு கேட்டு அடிச்சேன்.

'இல்லப்பா, சேரலைப்பா, போகலைப்பா, பேசலைப்பா, விடுங்கப்பா'ன்னு அவன் கதறினான். என் பொண்ணுங்க ரெண்டு பேரும் பயந்துபோய் மூலையில ஒடுங்கிக்கிட்டு, கண்ணைப் பெரிசா வச்சிக்கிட்டுப் பார்த்தாங்க. 'அண்ணனை அடிக்காதீங்க'ன்னு அவங்களும் அழுதாங்க. அப்பவும் நான் விடலை.

'நீங்களுந்தாண்டி! உங்களுக்கும் சொல்லி வைக்கறேன். ஆம்பளைப் பசங்களோட பேசினேன், பழகினேன்னு தெரிஞ்சுது உங்களுக்கும் இந்தமாதிரிதான் பூசை'ன்னு கத்தினேன். அவங்க ரெண்டு பேரும் வாயைப் பொத்திக்கிட்டாங்க. என் பொண்டாட்டி என்னை தடுத்துப் பார்த்தா. அந்தத் தடியால அவளுக்கும் ரெண்டு அடி விழுந்தது.

கடைசியில தடி உடைஞ்சி போச்சி. அதுக்கு அப்புறந்தான் நான் அடிக்கறதை நிறுத்தினேன். உடைஞ்சிபோன தடியை ஒரு மூலையில தூக்கிப் போட்டுட்டு, வீட்டைவிட்டுப் போய்ட்டேன். நான் திரும்பி வந்தப்பவும் பையன் அழுதுகிட்டிருந்தான். ஒடம்பெல்லாம் வீக்கம். அவங்கம்மா அவனுக்கு கோதுமை தவிட்டைச் சுட வச்சி ஒத்தடம் கொடுத்துக்கிட்டு இருந்தா.

அழுது அழுது அவனுக்கு வயித்து வலி வந்திடிச்சாம். சோடாவும், உப்பும், எலுமிச்சம்பழமும் கலந்து கொடுத்தாங்களாம். அப்படியும் வலி நிக்கலையாம். என் பொண்ணுங்க சொன்ன செய்தி அது. நான் அவன் மூஞ்சைக்கூட பாக்கலே. போய்ப் படுத்துட்டேன். மறுநாள் காலையில வீட்ல பையன் இல்ல."

"அப்படின்னா?" என்றார் டாக்டர், கதை கேட்கும் ஆர்வத்துடன்.

"ஓடிப் போய்ட்டான். அவங்கம்மா அழுதா. வீடு மொத்தமும் என்னைப் பார்வையாலேயே குத்திக் கொன்னுக்கிட்டு இருந்தது. அவன் ஓடிப்போறதுக்கு நான்தான் காரணம்ங்கற எண்ணம் என் மனசுல வந்து பதிஞ்சி போச்சி. அவன் ஓடித்தான் போய்ட்டானா... இல்ல தற்கொலை அது இதுன்னு ஏதாவது முடிவு எடுத்துட்டானான்னு எனக்குப் பயமா இருந்தது. போலீஸ்ல புகார் பண்ணினேன். திருச்சி பக்கத்துல இருக்கற எல்லா குளத்துலேயும் போய்ப் பார்த்தேன். முக்கொம்புல தற்கொலை நடக்கறது சகஜம். அங்க போய் ஏதாவது அந்த மாதிரி சமீபத்துல நடந்ததான்னு விசாரிச்சேன். ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியா போய்க் கேட்டேன்.

ப்ச். எதுவும் பிரயோஜனப்படலே. பையன் கிடைக்கலே. போனவன் போனவன்தான். என் பையனை முழுசாத் தொலைச்சிட்டேன். இப்பத்தான் ரெண்டு, மூணு மாசத்துக்கு முன்னால தகவல் வந்தது. அவனை யாரோ ரிஷிகேசத்துல பார்த்ததா. அங்கே திரிஞ்சிக்கிட்டு இருக்கான்னு சொன்னாங்க. நான் போனேன். ஒரு வாரம் அங்கேயே தங்கி இருந்து சுத்தினேன். கடைசில அவனைப் பார்த்துட்டேன்.

என் பையன்னு என்னால அடையாளமே தெரிஞ்சிக்க முடியலை. உடம்புல ஒரே ஒரு கோமணந்தான். வேற துணி இல்ல. தலைமுடி சடை சடையாத் தொங்குது. தாடி, தொப்புள் வரைக்கும் இருக்குது. உடம்பெல்லாம் கறுப்பா போயிருந்தது. நான் அவனை வீட்டுக்கு வரச் சொன்னேன். அழுதேன். அவன் கொஞ்சங்கூட அசைஞ்சி கொடுக்கலே. அவன் கண்ல ஒரு துளிகூட பாசம் இல்லை. ஒரு சொட்டுத் தண்ணி இல்ல. பேசவே இல்லை.

அவன் மவுன சாமின்னு சுத்தி இருக்கறவங்க சொன்னாங்க. நான் அடிச்ச அடி அவனை ஊமை ஆக்கிடுச்சி. எப்படியும் மறுநாள் அவனைக் கூட்டிட்டு வர்றதுன்னு நெனச்சிக்கிட்டு இருந்தேன். மறுநாள் அவன் இல்ல. எங்கேயோ போய்ட்டான். மலைப் பக்கம் போனதா சொன்னாங்க. இமயமலையில



எவ்வளவோ குகை இருக்கு. எவ்வளவோ இடம் இருக்கு. எங்கேன்னு தேட முடியும் அவனை? நான் வெறுங்கையோட திரும்பி வந்துட்டேன்.

என் பையன் சாகலை. உயிரோட இருக்கான். ஆனா சாமியாரா இருக்கான். என்னோட அடிதான் அவனை சாமியாரா மாத்திடிச்சி. என் கண்டிப்புதான் அவனை இந்த உலகத்திலேர்ந்து விலக வச்சிடுச்சி. இங்க இருந்தாத்தானே போட்டி, பொறாமை, சண்டை சச்சரவுன்னு அவனுக்கு தோணிப் போய்டிச்சி. அதனாலதான் அவன் எங்களை விட்டுப் போய்ட்டான்."

அப்பாவின் குரல் ரகசியம் போல் கேட்டுக்கொண்டிருந்தது. கம்மிப் போயிருந்தது. எனக்கு அழுகை திரண்டிருந்தது.

"இவரோட கோபத்துக்குப் பயந்துதான் எங்களோட ரெண்டு பொண்ணுங்களும் ஆம்பிளைங்களைக் கண்டாலே மூஞ்சைத் திருப்பிக்கறாங்க. வீட்டுக்குள்ளே ஓடி வந்துடறாங்க. அவங்க ரெண்டு பேருக்கும் ஆம்பளைன்னா அப்பாதான். அடுத்தது உங்களைத்தான் பார்க்கறாங்க. உங்கக்கூடத்தான் பேசறாங்க என்றாள் அம்மா.

"ஐ ஸீ" என்றார் டாக்டர்.

"உமா ஏன் கடிச்சான்னு நீங்க சொல்லவே இல்லியே டாக்டர்" என்றாள் அக்கா.

"அவளுக்கு நான் அதிர்ச்சி வைத்தியம் குடுத்தேன். என்னோட 'டிரீட்மெண்ட்' அவ மனசைப் பாதிக்கும், ஒடம்புல மாற்றம் வரும்னு தெரியும். அதனால நான் அவளுக்கு அந்த 'டிரீட்மெண்ட்' குடுத்தேன். ஒண்ணுமில்ல. ஜஸ்ட்... அவளோட சட்டையைக் கழற்றினேன். அவ மார்லே லேசாத் தொட்டேன். அவ்வளவுதான்! பாய்ஞ்சி குதறிட்டா. பொம்பளைப் பூனை மாதிரி ஒரு பாய்ச்சல். பரவாயில்லை. என் சிகிச்சைக்கு இவ்வளவு சீக்கிரம் பலன் கெடைச்சிருச்சே!" என்றார் டாக்டர்.

அவர்கள் அத்தனை பேரும் அண்ணனை மறந்து சிரித்தார்கள்.

டாக்டரை அப்பா– அம்மா திட்டவில்லை. மாறாக அவருக்குத் தட்டில் இனிப்பு, காரம், காப்பி எல்லாம் கொடுத்தார்கள் நான் இருந்த அறை வரைக்கும் வாசனை வந்தது.

போவதற்கு முன் டாக்டர் நெருங்கி வந்து என்னைத் தட்டிக்கொடுத்தார். என் முதுகை வருடிக்கொடுத்தார். அம்மா– அப்பா யாரும் என் அருகில் இல்லை. எல்லோரும் என்னை அநாதையாக விட்டுவிட்ட மாதிரி இருந்தது.

“ஏ...குட்டி! அன்னைக்குத் தப்பிச்சி வந்துட்டே இல்ல! பரவாயில்ல. ஆனா மொத மொதல்ல உம் மேல கை வெச்சவன் நான்தான். அந்தத் திருப்தி இருக்கு எனக்கு. அது போதும் குட்டி. நீ எங்கே போயிடப் போறே? நான் எங்கே போயிடப் போறேன்? எனக்கு இன்னொரு ‘சான்ஸ்’ கெடைக்காமலா போயிடும்? இந்தா, மொத மொதல்ல ஒன்னைத் தொட்டதுக்கு என்னோட பரிசு” என்று தொடக்கத்தில் ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டைச் செருகிவிட்டு அகன்றார்.

அந்த ரூபாய் நோட்டு ஒரு எரிதணல் போல என் நெஞ்சைச் சுட்டுக்கொண்டே இருந்தது.

## 3

அப்புறம் நிறைய நடந்துவிட்டது. நிறைய என்றால் எதுவும் எக்குத் தப்பாக இல்லை. என் மனதில் நிறைய வளர்ச்சிகள். எங்கள் வீட்டு ‘பாமிலி டாக்டர்’ என்னிடம் ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டுப் போன ஆறாவது நாள் ‘ஹார்ட்– அட்டாக்’ வந்து செத்துப்போனார்.

டாக்டர் எதிரியா... இல்லை நண்பனா என்றே எனக்குப் புரியவில்லை. ‘கிளினிக்’ தனியறையில் அவர் நடந்துகொண்ட விதத்தை நான் கொஞ்சம்கூட ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் அதே விஷயத்தை டாக்டர் எந்தவித குற்ற உணர்வும் இன்றி, வீட்டுக்கு



வந்து, நடுக்கூடத்தில் எல்லோர் முன்னிலையிலும் சொன்னபோது– வீட்டில் இருந்த யாருமே அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

மாறாக, டாக்டருடைய சிகிச்சையால்தான் எனக்கு மறுவாழ்வு கிடைத்திருப்பதாக அத்தனை பேரும் நம்பினார்கள். டாக்டர் எனக்கு நண்பன்தான் போலும் என்று என் மனதின் ஒரு மூலையில் அந்தத் தனியறையில் தோன்றியது. ஆனால் , அடுத்த சில நிமிடங்களுக்குள்ளேயே எனது அந்த நம்பிக்கை இடிந்து விழுந்துவிட்டது. காரணம், டாக்டரின் ரூபாய். அவர் உதிர்த்த சொற்கள். அந்த ஒரே கணத்தில் டாக்டர் எனக்கு எதிரி ஆகிவிட்டார்.

‘எங்கே போயிடப் போறே?’ என்று சவால்விட்டுப் போனார். அவர் போவதைப் பார்த்தபோது எனக்கு வெறுப்பாக இருந்தது. அப்படியே பாய்ந்து அவர் கழுத்தில் என் பற்களைப் பதித்துக் கடித்து ரத்தத்தை எல்லாம் உறிஞ்சி, உறிஞ்சிக் குடிக்க வேண்டும் போல் இருந்தது.

டாக்டருடன் ஒரு போர் என்று என் மனதில் நானே ஒரு அறிவிப்பைச் செய்தேன். என் இளமையும், டாக்டரின் முதுமையும் மோதும்போது இளமைதான் ஜெயிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அவர் கையை உடைத்துவிடப் போகிறேன், அவர் மூக்குத் தண்டில் ஒரு பலமான குத்துவிட்டு ரத்தம் ஒழுகச் செய்யப்போகிறேன் என்றெல்லாம் நான் நினைத்துக்கொண்டு இருந்தேன்.

அதற்கெல்லாம் வாய்ப்பே வைக்காமல் டாக்டர் செத்துப் போய்விட்டார்.

டாக்டர் நண்பனா, எதிரியா?

தெரியவில்லை! இருந்தும் அவரை நான் சரியாகத் தெரிந்துகொள்ள முடிவில்லையே என்ற ஆதங்கம் இன்று வரை எனக்கு இருக்கிறது.

ஆனால், அந்த அடிவயிற்றுத் தினத்திற்குப் பின் உமா மாறிவிட்டாள். அதாவது, நான் நிறைய மாறிவிட்டேன்.

அதற்கு முன் நான் ஒதுக்கி வைத்திருந்த விஷயங்கள் எல்லாம் ஆவலோடு அறிந்துகொள்ளத் தொடங்கினேன். கல்லூரி வேறு. நிறைய தோழிகள். கேட்கவா வேண்டும்? தோழிகள் எல்லாம் நிறைய 'ஜோக் சொன்னார்கள்.

நிறைய சிரித்தேன். ஒரு 'ஜோக்' மனதில் இவ்வளவு மகிழ்ச்சியைக் கொண்டு வரமுடியுமா? கொண்டு வந்ததே! சிரிப்பு வந்ததே! என்னைப் பார்த்த பையன்களை, நானும் ரகசியமாகப் பார்த்தேன். என்னைக் கவர்வதற்காக அந்தப் பையன்கள் கையாண்ட வழிகள் எனக்கு சிரிப்பை வரவழைத்தன. அவர்களைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது. ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்வதிலேயே வாழ்க்கை முழுவதையும் செலவழித்துக்கொண்டு இருப்பதாக எனக்குப்பட்டது.

ஆண்களைப் புரிந்துகொண்டு என்ன செய்யப்போகிறோம்? பெண்களுக்கு ஆண்களிடம் கிடைக்கப்போவது என்ன? யோசித்துப் பார்த்தால்... ஒன்றுமே இல்லை. அதனால் எனக்கு ஆண்கள் மேல் எந்தவித ஈடுபாடும் வரவில்லை. மேலும், ஆண்களைப் பார்த்தால் எனக்கு 'டாக்டர்' நினைவு வந்தது. எல்லா ஆண்களுக்கும் பெண்களின் உடல்தான் ஒரே நோக்கம்.

அப்பாவின் ஞாபகம் வந்தது. அண்ணனை என்ன அடி அடித்தார். நான் ஏதாவது ஒரு ஆணுடன் பேசியது தெரிந்தால், அப்பா என்னை மட்டும் சும்மா விட்டுவைக்கப் போகிறாரா என்ன?

அதனால் நான் ஆண்களுடன் பழகவில்லை. பேசவில்லை. அவர்கள் சிரித்தால் நான் பதிலுக்குச் சிரிக்கவில்லை. உதடுகளை மூடிக்கொண்டு 'ப' என்று சொல்லிக்கொள்வேன். நீங்களும் உதடுகளை மூடி 'ப' சொல்லிப் பாருங்கள். சிரிப்பே வராது.

என் உடல் வளராமல் இல்லை. அதுபாட்டுக்கு வளர்ந்துகொண்டுதான் இருந்தது. வருடத்திற்கு ஒரு முறை என் உள்ளாடையின் அளவு மாறிக்கொண்டே வந்தது.



வெகு சீக்கிரமே நான் 'பிரா'வில் முப்பத்து நான்கு அளவில் 'சி' கப் உடைய ரகங்களை வாங்கத் தொடங்கிவிட்டேன். அதை அணிந்தால் அணிந்ததுபோலவே இருக்காது. பருத்திப் புடவைதான் கட்டிக்கொள்வேன். ஒரு தடவை கட்டினால் அவிழ்த்துத் துவைத்து, பசை போட்டு இஸ்திரி பண்ணாமல் இன்னொரு முறை கட்டப் பிடிப்பதில்லை.

அண்ணன் இல்லாவிட்டாலும் வாழ்க்கை ரொம்பவும் விளையாட்டுத்தனமாய்ப் போய்க்கொண்டிருந்தது.

அக்காவைப் பெண் பார்க்க வந்தார்கள். அப்போதுதான் நான் 'காலேஜ்' படிப்பை முடித்திருந்தேன். அக்கா படிப்பை முடித்து ஐந்து ஆண்டுகளாக வீட்டில் இருந்தாள். 'எம்ப்பிராய்டரி' கற்றுக்கொண்டாள். பாட்டுக்கு ஒரு அம்மாள் வீடு வரை வந்து சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தாள். அவியல் முதல் மஞ்சூரியன் வரை எல்லா வகையான உணவுப் பொருட்களையும் தயாரிக்க கற்றிருந்தாள். எந்த கம்பெனி சமையல் வகுப்பை நடத்தினாலும் அக்கா அங்கே ஆஜராகிவிடுவாள். முட்டை உடைத்து ஊற்றி 'ப்ளெய்ன் ஸ்பான்ஜ் கேக்' பண்ணக் கற்று வந்து ஒரு நாள் வீட்டில் முட்டை உடைத்தாள்.

அன்றைக்கு முழுக்க வீட்டில் ஒரு விதமான வாசனை. அதை வாசனை என்று சொல்வதா? இல்லை நாற்றம் என்று சொல்வதா? உங்களில் பலபேர் முட்டை சாப்பிட்டுக்கொண்டு இருப்பீர்கள். நானும்கூட 'ஆம்லெட்' சாப்பிட்டிருக்கிறேன். தோழி லிண்டா கொண்டு வருவாள் காலேஜில். தமிழ்ச்செல்வி கொண்டு வந்த முட்டைப் பொறியல் சாப்பிட்டிருக்கிறேன். ஆனால், பச்சை முட்டை உடைந்து, அது கொஞ்சம் தரையிலும் சிந்தி காய்ந்துபோனால் இப்படி ஒரு வாசத்தைக் கிளப்பும் என்று எனக்கு அப்போதெல்லாம் தெரியாது. உவ்வே...

'இனிமேல் வீட்டில் 'ப்ளெய்ன் ஸ்பான்ஜ் கேக்' பண்ணினாலோ, தெரியும் சேதி' என்று அக்காவை மிரட்டினேன். அக்கா அடங்கிப் போனாள். இன்னொரு நாள் 'ரம்' உபயோகித்து 'ப்ளம் கேக்' பண்ணினாள். அக்காவின் சமையல் ஆர்வம்

எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. இவ்வளவு ஆர்வம் இருக்கும் அவள் 'கேட்டரிங் டெக்னாலஜி' படித்து ஏதாவது ஒரு நட்சத்திர ஓட்டலில் வேலைக்குச் சேர்ந்திருக்கலாம். என்னடாவென்றால் இப்போது ஒரு அஞ்சிக்கு ஆறு சமையல் அறையில் அவள் திறமையெல்லாம் வீணாகப் போகிறது என்று தோன்றியது.

அக்காவைக் கல்யாணம் செய்து கொடுப்பதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. ஏன் வருந்த வேண்டும்? அக்காவிற்குக் கல்யாண வாழ்க்கை பிடித்திருந்தது. அவளுக்கு இந்த வீட்டைவிட்டுப் போனால் போதும் என்றாகிவிட்டது.

வீட்டில் அப்பாவின் தர்பார்.

அவர் எந்த நேரம் நிலவு, எந்த நேரம் நெருப்பு என்று யாராலும் கணிக்கவே முடியாது. திடீரென்று நெருப்பை அள்ளிக் கொட்டுவார். ஒவ்வொரு வார்த்தையும் ஒரு தணல் துண்டுதான். கேட்கிறவர்கள் மனமெல்லாம் கொப்பளம் பூக்கும். சுடும். எரியும். வடுவாக தங்கிப் போகும். அதனால் அக்கா இந்த வீட்டைவிட்டு கழன்றுகொள்ள வேண்டும் என்று நினைத்ததில் எந்த விதமான ஆச்சரியமும் இல்லை.

பெண் பார்க்க வந்த பையன் சிவில் என்ஜினீயராம். ஏதோ ஒரு கட்டுமான கம்பெனியில் மேஸ்திரிகளையும், கொத்தனார்களையும், சித்தாள்களையும் மேய்த்துக்கொண்டு இருக்கிறானாம். மாதம் முப்பதாயிரம் சம்பளமாம். கூடிய விரைவிலேயே தனியாக ஒரு 'கம்பெனி' தொடங்கப் போகிறானாம். லட்ச லட்சமாக சம்பாதிக்கப் போகிறானாம்.

அந்தப் பையனுடைய அம்மாதான் அடம்பிடிக்கும் குழந்தையைப் போல் கையையும், காலையும் ஆட்டி ஆட்டி இத்தனையையும் பேசினாள். அம்மாவுக்கு வாயெல்லாம் பல். பெண்ணுக்கு வந்த அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி மாய்ந்து போனாள். அப்பாவும் தன் பங்குக்கு மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் திருப்தியடைய வேண்டும் என்பதற்காக கேசரியையும், பஜ்ஜியையும் இலையில் வைக்கச் சொல்லி ஆணைகள் பிறப்பித்தார். நான் கதவுக்குப் பின்னால் நின்று



பார்த்துக்கொண்டிருந்தேன்.

அக்காவின் கணவனாக வரப்போகிறவன் பார்வை எங்கள் வீட்டை மேய்ந்தது. அவனுக்கு லேசாக மாறு கண். அதனால் அவன் எங்கே பார்க்கிறான் என்பதே எங்களுக்குப் புரியவில்லை. அதோடு அவனுக்குப் பீரங்கி மூக்கு, இல்லாவிட்டால் குதிரை மூக்கு, இல்லாவிட்டால் ஒட்டக மூக்கு. எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம். அவன் கழுத்து அண்ணாந்து சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த படங்களைப் பார்த்தபோது மூக்கணாங்கயிறு மாட்டிய ஒட்டகம் தலையை உயர்த்தி மோப்பம் பிடிக்கிற மாதிரிதான் எனக்குத் தோன்றியது.

அவன் வாயிலும், வெளியிலுமாக இருந்த பஜ்ஜி– ஒட்டகத்தின் வாயிலும், வெளியிலும் தொங்கும் புல்லாகத் தோன்றியது.

"அந்தப் படத்துல இருக்கிறது யாரு?" என்று கேட்டான்.

குரல்கூட ஆண்களுக்குரிய கம்பீரமாக இல்லாமல் கொஞ்சம் கீச்சாகத்தான் வந்தது. எந்தப் படத்தைப் பற்றி கேட்கிறான் என்று நான் யூகிப்பதற்குள் அப்பா சொன்னார்.

"அது என் ரெண்டாவது பொண்ணு. டிகிரி வாங்கின சமயத்துல எடுத்துக்கிட்டது."

ஓஹோ! என் படத்தைப் பார்த்துவிட்டாரா? திடீரென்று ஓர் ஐயம் வந்தது. சினிமாவில் எல்லாம் நடக்கிற மாதிரி அந்த ஆள் எங்கே சட்டென்று, 'சார், நான் உங்க ரெண்டாவது பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்'ன்னு சொல்லிவிடுவானோ என்று தோன்றியது.

அந்தப் படத்தில் நான் 'மேக்கப்' எல்லாம் போட்டுக்கொண்டு பார்க்கக் கொஞ்சம் சுமாராகக்கூட இருப்பேன். கருப்பு கவுன், குஞ்சலம் வைத்த சதுரமான கறுப்புத் தொப்பி ஆகிய அவலட்சணங்களைக் கடந்தும் அந்தப் படத்தில் அழகாக இருப்பதாக என் தோழிகள் எல்லாம் சொல்லி இருந்தார்கள்.

"எங்கே உங்க ரெண்டாவது பொண்ணு, கூப்பிடுங்களேன்" என்றான் மாப்பிள்ளைப் பையன்.

'ஏண்டா டேய். ஏதோ ஒரு ரகசியமான வீட்டுக்குப் போய்





வரிசையாக வந்து நிற்கும் பெண்களைப் பார்த்துவிட்டு, சுட்டு விரலை நீட்டி– 'இந்தப் பெண்' என்று முடிவு செய்வார்களே ஆணாதிக்கவாதிகள். அந்த மாதிரி வீடா இது? பெண் பார்க்க வரும்போதே சகலரையும் பார்த்துவிட வேண்டுமா? ஏன், இன்னொரு படத்தில் அரை டிராயரோடு வாயில் விரல் வைத்துச் சூப்பிக்கொண்டே இருக்கும் அண்ணனின் படம் கூடத்தானே இருக்கிறது. அவனை விசாரிக்க வேண்டும் என்று தோன்றவில்லையா உனக்கு?'

அம்மாவுக்கும், அப்பாவுக்கும் தர்மசங்கடமாக இருந்திருக்கக்கூடும். கொஞ்ச நேரம் மவுனமாக இருந்தார்கள்.

"உள்ள இருந்தாக் கூப்பிடுங்களேன். வந்து சும்மா ரெண்டு வார்த்தை கலகலப்பாப் பேசிட்டுப் போகட்டும். என் பையனுக்கு கல்மிஷமே கெடையாது. எல்லார் கூடயும் கலகலன்னு பேசணும். அவனுக்கு" என்று பையனின் அம்மா, தன்னுடைய மகனின் புகழைப் பாடினாள்.

"உமா" என்றார் அப்பா.

கதவுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த என் காதில் விழுந்தது. அக்காவின் மனதில் இந்நேரம் என்ன பிரளயமோ? என்ன பூகம்பமோ?

என்னையும், அக்காவையும் ஒருசேர நிறுத்திப் பார்த்தால் அக்கா குண்டு. அவளுக்கு ஆடையைச் சரியாக உடுத்தத் தெரியாது. ஒப்பனை பண்ணிக்கொள்ளத் தெரியாது. மண்டை நிறைய தேங்காய் எண்ணெயை வைத்துப் படியப் படிய வாரி விட்டுக்கொள்வாள். எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டாள்.

ஷாம்பூ போட்டு அலசச் சொன்னால், முடி நரைத்துவிடும் என்று பயப்படுவாள். ஒரு மாசத்திற்கு ஒரு கிலோ மஞ்சளை காலி பண்ணுவாள். மஞ்சள் காமாலை வந்தவள் போல முகமெல்லாம் மஞ்சளாய் இருக்கும். அதிலேயே திட்டு திட்டாய் பவுடர் பூசிக்கொள்வாள். அப்படியும் உதட்டிற்கு மேல் லேசாக

மீசை போல் அவளுக்குப் பூனை மயிர் தெரியும்.

நான் அவளுக்கு நேர் மாறு. ரோஜா நிற பவுடர் அடிப்பேன். இமை விளிம்பில் மை பூசுவேன். புருவ முடிகளை அழகு பண்ணிக்கொள்வேன். ரவிக்கை அணிவேன். முழங்கால்களைத் தாண்டின– கழுத்து இறக்கமான ஸ்லீவ்ஸ். முதுகு தெரியும்படி வெட்டப்பட்ட ரவிக்கையின் பின்பக்கம். அன்றைக்கும் நான் அலங்காரமாகத்தான் இருந்தேன்.

கதை– வசனம் மாறப் போகிறதா? மாப்பிள்ளைப் பையன் என்னைப் பார்த்துவிட்டு, 'சார், நான் உங்க ரெண்டாவது பெண்ணை' என்று ஆரம்பிக்கப் போகிறானா? அக்காவுக்கு அந்த ஆள் கிடைக்கப் போவதில்லையா? மாறுகண்ணோ, பீரங்கி மூக்கோ– அவனைப் பார்த்தவுடன் அக்காவின் முகத்தில் மின்னிய சந்தோஷத்தை நான் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன்.

'சிவில் இன்ஜினீயர்' அவள் கண்களுக்கு ஒரு பிருதிவிராஜனாகவோ, அர்ஜுனனாகவோ தோன்றிவிட்டான். இப்போது நான் நடுவில் புகுந்து, அக்கா அதற்குள்ளாகக் கட்டி வைத்திருக்கும் கனவுக்கோட்டைகளைத் தரைமட்டமாக்கிவிடப் போகிறேனா?

என்ன செய்வது? லேசாகப் பயமாகக் கூட இருந்தது.

திடீரென்று எனக்கு அப்படி ஒரு எண்ணம் தோன்றியது. தோன்றிய அடுத்த கணம் 'சபாஷ்டி உமா' என்று என் முதுகிற்கு நானே ஒரு தட்டு போட்டுக்கொண்டேன்.

அறையில் இருந்து வெளியே– ஒரு கையை முழங்கால் மேல் ஊன்றி கொஞ்சம் விந்தி விந்தி நடந்து வந்தேன். உள்ளூர எனக்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஜாடையாக 'சிவில் இன்ஜினீயரின்' முகத்தைப் பார்த்தேன். பெண்கள் எவ்வளவு அழகாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு எங்காவது ஒரு ஊனம் இருந்துவிட்டால், ஆண்களுக்கு அவர்கள் வேண்டப்படாதவர்களாக



ஆகிவிடுவார்கள். இந்த ஆள் மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன?

அவன் முகம் படுகோணலாக மாறியது. ஒரே ஒரு கணம். அவ்வளவுதான்! உடனே சுதாரித்துக்கொண்டான். எனக்கு அவனை வியக்காமல் இருக்க முடியவில்லை. அக்காவைப் பார்த்தேன். அவள் முகத்தில் மறுபடி மகிழ்ச்சி இருந்தது.

என்னுடைய நாடகம் வரவேற்கப்பட்டுவிட்டது.

## 4

அக்காவின் கல்யாணம் நடந்தது.

ஆனால், அது ஏகப்பட்ட சிக்கல்களை வரவழைத்துவிட்டது. மாப்பிள்ளை வீட்டார் 'பெண் பிடித்திருக்கிறது' என்று சொல்லிவிட்டுப் போனார்கள்– அதாவது அக்காவை.

அவர்கள் போனவுடன் அப்பா என்னைப் பிலு பிலு என்று பிடித்துக்கொண்டார்.

நான் அப்படி நொண்டி நாடகம் போட்டதற்காக திட்டினார். அன்பில்லாத அப்பா.

என் புத்திசாலித்தனத்தைப் பாராட்டாமல் என்னைத் திட்டுகிறீர்களே... என்ன நியாயம் இது?

"அப்பா. இப்ப என்ன ஆய்டிச்சின்னு என்னைத் திட்டுறீங்க?" என்று கேட்டேன்.

"நாளைக்கு அவங்களுக்கு விஷயம் தெரிஞ்சிட்டா கோபம் வராது? அவங்களை ஏமாத்திட்டோம்னு சொல்லமாட்டாங்க? அவங்க கோபம் எல்லாம் அவங்க வீட்ல வாழப்போற உன் அக்கா மேல திரும்பாது?" என்று ராமர் பாணம் போல சர் சர் என்று கேள்விகளாக என் மேல் வீசினார் அப்பா.

"நான் நொண்டியான்னு அவங்க கேட்டாங்களாப்பா?"

"இல்ல!"

"எனக்கு ஏதாவது இளம்பிள்ளை வாதம், விபத்து

அது இதுன்னு நடந்து இப்படி ஆய்டிச்சான்னு அவங்க கேட்டாங்களாப்பா?"

"இல்ல!"

"பின்ன? அவங்களா நான் நொண்டின்னு நெனைச்சிக்கிட்டு போய்ட்டா அதுக்கு நாம என்ன பண்ண முடியும்? மாப்பிள்ளை அழைப்பு அன்னிக்கு– மாப்பிள்ளை வீட்டுக்காரங்ககிட்ட ரொம்ப சாதாரணமா சொல்ற மாதிரி சொல்லிடுங்களேன். 'பொண்ணு பாக்க வந்த அன்னைக்கு என் ரெண்டாவது பொண்ணு பஸ்ஸிலே இருந்து கீழ விழுந்து முழங்கால்ல அடிபட்டிருந்தா. நீங்க வந்து போன ராசியோ என்னவோ தெரியலை. ரெண்டாவது நாளே அவளுக்குக் குணமாயிட்டது'ன்னு சொல்லிடுங்களேன். அவங்களுக்கு மனசு சமாதானமாயிடப் போகுது" என்றேன்.

அப்பா, அம்மாவிற்கு அந்தப் பதில் தோதாகப்பட்டது. அதைத்தான் சொல்வது என்று முடிவு பண்ணினார்கள்.

ஆனால், மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் தரப்பில் இருந்து ஏதோ ஒரு ஆள் வந்து, பையனுக்கு ஒன்றுவிட்ட மாமாவாம். அக்காவுக்கு என்னென்ன சீர் செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போனான்.

பையன் நிறைய சமூகத் தொடர்புகள் உடையவன். நண்பர்கள் அதிகம். எனவே, அதற்கேற்றபடி ஒரு கவுரவமான கல்யாண மண்டபத்தில் செய்ய வேண்டும்.

அப்புறம் பையன் போக வர ஒரு 'பைக்' வாங்கித் தர வேண்டும். அதில் உங்கள் பொண்ணைத்தானே ஏற்றிக்கொண்டு போகப் போகிறான்?

முகூர்த்தத்துக்கு ஒரு பட்டுப்புடவை. பட்டு வேஷ்டி– சட்டை. அப்புறம் நலங்கிற்கு ஒரு பட்டுப்புடவை. வரவேற்புக்கு ஒரு பட்டுப்புடவை. கோட்– சூட். அப்புறம் சாந்தி முகூர்த்தத்திற்கு ஒரு பட்டுப்புடவை. பட்டு வேஷ்டி– சட்டை.

முன்னூறு பேருக்கு மூன்று வேளை காப்பி, டிபன், சாப்பாடு.



பெண்ணுக்கு குறைந்தபட்சம் இருபத்தைந்து பவுன் நகை. ஒரு லட்சம் வைரத்தோடு. இரண்டு கிலோ வெள்ளி சாமான்கள்.

அக்காவின் கல்யாணத்திற்கு பல லட்சம் ரூபாய் செலவானது. அப்பா ஓய்வுபெற்று இருந்தார். 'பென்ஷன்' இல்லை. பி.எப்.பில் சேர்த்து வைத்து வீட்டுக்குக் கொண்டு வந்திருந்த பணத்தில் முக்கால் பங்கு கல்யாணத்திற்கு என்று கரைந்துவிட்டது.

அப்பா யோசிக்காமல் செலவு செய்தார். கல்யாணம் முடிந்த பின் கணக்குப் பார்த்தால் பாங்கியில் மூணு லட்சமோ என்னவோ மிச்சம் இருந்தது. அதற்கு மாதம் வட்டி. அந்தப் பணம் சென்னையில் வீட்டு வாடகைக்கே சரியாகப் போய்விடும்.

கிராப்பட்டியில் அப்பா கட்டிய வீடு இருக்கிறது. ஆயிரத்து ஐநூறு ரூபாய் வாடகை வரும். அந்த ரூபாயில் மூன்று பேர் ஒரு மாதம் தண்ணீர் ஊற்றிக்கொண்டுகூட சாப்பிட முடியாது. அப்புறம் அக்காவின் பிரசவச் செலவு, வளைகாப்புச் செலவு. தலைத் தீபாவளிக்கு துணி– மோதிரம். அம்மாவின் கழுத்தில் தாலி மட்டும்தான் மிஞ்சியது.

அப்பாவுக்கு வேறு வழியில்லை. அதனால், பத்திரிகையில் ஆட்கள் தேவைப் பகுதியைப் பார்த்து, கடைசியில் ஒரு தனியார் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தார். சம்பளம் மூவாயிரத்து ஐநூறு.

அம்மா என்னுடைய ஜாதகக் கட்டை கையில் எடுக்கச் சொன்னாள்.

அப்பாவிற்குக் கோபம் வந்தது. அதன் காரணமாக ரத்த அழுத்தம்.

அப்பா சத்தம் போட ஆரம்பித்தால் தாங்காது. வீட்டில் அங்கங்கே காரைகள் இடிந்துவிழும்.

அப்போதுதான் தீர்மானித்தேன். நானும் வேலைக்குப் போவது என்று. எனக்குக் கல்யாணம் ஆவது ஒரு பக்கம் இருக்கட்டும். முதலில் வீட்டில் இருக்கும் அத்தனை பேரும் ஒழுங்காகச் சாப்பிட வேண்டும். அதற்கு ஒரே வழி நானும்

சுமை தூக்குவதுதான்.

நானும் விளம்பரங்கள் பார்த்தேன். வீட்டுக்குத் தேவையான பொருட்களைத் தயாரிக்கும் ஒரு பெரிய கம்பெனி. அதற்கு நல்ல பெயர். அந்த கம்பெனியில் வியாபாரத்தைப் பெருக்குவதற்காக அழகான விற்பனைப் பெண்கள் தேவை என்று சொல்லியது. மாதம் ஐயாயிரம் சம்பளம். கம்பெனி நிரந்தரமாக வேலைக்கு வைத்துக்கொள்வது என்று தீர்மானித்தால் எட்டாயிரம். சலுகைகள்.

ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும். முன் அனுபவம் தேவையில்லை. எல்லா வகையிலும் எனக்கு ஒத்து வந்தது. நான் விண்ணப்பித்தேன். நேரில் வரச் சொன்னார்கள். அலங்கரித்துக்கொண்டு போனேன். வேலை கிடைத்துவிட்டது.

நான் முன்பே சொல்லவில்லை? அடுத்தவன் மனைவியோ, அடுத்த வீட்டுப் பெண்ணோ... யாராக இருந்தாலும் சரி, பேயும் இரங்கும் என்று? கம்பெனி இரங்கிவிட்டது. அதன் சார்பாக 'இன்டர்வியூ' செய்த அதிகாரிகள் என் சிரிப்பில் கிரங்கிப் போனார்கள். அவர்கள் வீட்டுப் பெண்கள் எல்லாம் சிரித்தால் அகோரமாக இருக்குமோ என்னவோ!

வேலையில் சேர்கிறேன் என்று சொன்னேன்.

அப்பா உடனே ஒத்துக்கொண்டார். அம்மா யோசித்து ஏற்றுக்கொண்டாள். ஒரு கண்காட்சியில் கம்பெனி அமைத்திருந்த அரங்கில் என்னை நிற்க வைத்தார்கள். கம்பெனியின் பொருட்களை எப்படி இயக்குவது? எப்படி சிரித்துப் பேச வேண்டும்? என்று சொல்லி இருந்தார்கள். 'வாஷிங் மெஷின்' விலை பதினைந்தாயிரம் என்றாலும், 'பதினைந்தாயிரம் மட்டுமே சார் அல்லது மேடம்' என்று சொல்லச் சொன்னார்கள். புதிய என்ற வார்த்தையை ஒவ்வொரு பொருளை எடுத்துக் காண்பிக்கும்போதும் சொல்லச் சொன்னார்கள். கம்பெனி சொல்லிக் கொடுத்தபடி செய்தேன். அந்தக் கண்காட்சியில் எங்கள் கம்பெனியின் பொருட்கள்தான்



அதிக அளவில் விற்றது.

கம்பெனிக்கு மிகச் சந்தோஷம். என்னுடைய சலுகையை' அதிகப்படுத்தினார்கள். 'டிரஸ் அலவன்ஸ்' என்று தனியாகத் தந்தார்கள். உடனே இன்னொரு கண்காட்சியில் 'ஸ்டால்' போட்டு அங்கே போகச் சொன்னார்கள்.

பிரகாஷை அங்கேதான் சந்தித்தேன்.

கண்காட்சி தொடங்கிய முதல் நாளே அவன் வந்துவிட்டான். என்னைப் பொறுத்தவரை எல்லோரையும் போல ஒரு வாடிக்கையாளராகத்தான் தெரிந்தான்.

ஆனால், பிரகாஷ் என்னை 'சேல்ஸ் கேர்ளாகப்' பார்க்கவில்லை என்பது அவனது முகத்தைப் பார்த்த அந்தக் கணமே தெரிந்தது.

அவன் கண்கள் அகன்றன. தாஜ்மஹாலைப் பார்த்த அயல் நாட்டவனின் உதடுகள் போல உதடுகள் குவிந்தன. பாரசீகக் கதைகளில் எல்லாம் ஒரு தேசத்து இளவரசன் தன் மனதுக்குப் பிடித்த அழகியைப் பார்த்துவிட்டால் உடனே சுயநினைவை இழந்து மூர்ச்சையாகிக் கீழே விழுந்துவிடுவான். அப்புறம் அவனுக்கு யாராவது மூர்ச்சை தெளிவித்தாலும், ஏறக்குறைய நடைபிணம் போல நடந்துகொள்வான்.

பிரகாஷும் அப்படித்தான் ஆகிவிட்டான் என்று எனக்குத் தோன்றியது. நான் எந்தப் பொருளை எடுத்து விளக்கம் கொடுத்தாலும், என் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். என் கையில் இருந்த பொருளைப் பார்க்கவில்லை. அதன் செயல்முறைகளைக் கவனிக்கவில்லை.

அவன்கூட வந்த நண்பன் ஒருவன்– அவனை ஜாடையாக இடித்தும், 'போகலாம்' என்று அழைத்தும்கூட பிரகாஷ் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை. எனக்கு ஒருபக்கம் தர்மசங்கடமாக இருந்தது. அவன் நானிருந்த இடத்தைவிட்டு நகர்ந்தால் போதுமென்று தோன்றியது. கடைசியில் அன்றைக்கு நாங்கள் கவுண்டரை மூடும் சமயம் ஒரு 'பிரெட் டோஸ்டரு'க்கு 'ஆர்டர்' கொடுத்துவிட்டுப் போனான்.

இரண்டாம் நாள் வந்தான். ஒரு 'காப்பி மேக்கரு'க்
'ஆர்டர்' கொடுத்தான். அன்றைக்கும் 'கவுண்டர்' மூடும் வ
நின்றான்.

கண்காட்சி நடந்த பதினைந்து நாட்களும் அவன் தினம் தின
வந்து கடைசி வரை இருந்துவிட்டுப் போனான். என் கம்பெ
சார்பாக வந்திருந்த மற்ற இரண்டு 'சேல்ஸ் கேர்ள்'களு
ஒரு 'ஆபீஸ்பாயு'ம், 'பில்' போடும் 'ரிட்டயர்டு' தாத்தாவு
என்னைக் கேலி பண்ணத் தொடங்கிவிட்டார்கள். 'அந்த
பையன் நாளைக்கு கண்காட்சி முடிந்த பின்னாலும் இ
இடத்திற்கு வந்து நின்று ஏமாந்துவிட்டுப் போகப்போகிறா
என்றார்கள்.

மறுநாள் கண்காட்சி இல்லை. நான் கம்பெனியி
இருந்தேன். பின்னால் நிர்வாக அலுவலகம். முன்னால் 'ஷோ
ரூம்'.

காலை ஒன்பது மணிக்கே 'ஷோ ரூம்' தொடங்கிவிடு
நான் எட்டரை மணிக்கு வந்துவிடுவேன். சாயங்கால
நான்கு மணி வரை வேலை. கண்காட்சி என்றால் மத்தியான
இரண்டில் இருந்து ஒன்பது வரை வேலை. கம்பெனி 'ஷோ
ரூமி'ல் அவ்வளவாக விற்பனை இருக்காது. காரணம், எங்க
கம்பெனியின் தயாரிப்புகள் எல்லாம் தமிழ்நாடு முழுக்
விநியோகமாகி நிறைய விற்பனையாகின. வருட முடிவி
கம்பெனியில் இருந்து கிடைக்கும் 'இன்சென்டிவ்' மே
அவர்களுக்கு ஒரு கண்.

அதனால் 'ஷோரூமி'ல் அதிக விற்பனையே இருக்காது. நா
அலங்காரமாய் உட்கார்ந்துகொண்டு, ஏ.சி.யின் குளிர்ச்சியி
ஜானகிராமனையாவது, சிட்னி ஷெல்டனையாவ
படித்துக்கொண்டிருக்கலாம். படித்துக் கொண்டிருந்தே
எதிரில் இருந்த மேஜையின் கண்ணாடிப் பரப்பி
வாடிக்கையாள்ர் ஒருவரின் நிழல் தெரிந்தது. நிமிர்ந்தால்...

"ஐ'ம் பிரகாஷ்" என்றான்.

"ஸோ... வாட்?" என்று கேட்டேன்.



என்னவோ தெரியவில்லை. காலையில் இருந்து ஒரு வெறுமை இருந்தது. அதற்குக் காரணம், கண்காட்சி இல்லையென்பது மட்டுமில்லை. என் அழகை ஆராதிக்கும் அவன் வரப்போவதில்லை என்ற காரணமும்தான்!

இப்போது பிரகாஷைப் பார்த்தவுடன் என் மனதில் மத்தாப்பு. அது ஆயிரம் பூக்களைக் கொட்டியது. வர்ணங்களைத் தெரிக்கவிட்டது. இருந்தாலும் நான் எதையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் மறுபடி கேட்டேன்.

"ஸோ வாட்?"

"ஐ லவ் யூ" என்றான் பிரகாஷ்.

## 5

ஓர் ஆண் ஒரு பெண்ணிடம், 'ஐ லவ் யூ' என்று சொல்லும் தருணம். வாழ்க்கையில் மிக முக்கியமானது. ஏனெனில், நம் சமூக அமைப்பு அப்படி! ஒரு பெண் தன்னிச்சையர்க இன்னொரு ஆணிடம் சென்று 'ஐ லவ் யூ' சொல்லிவிட முடியாது. பெண்ணுக்கே உரிய அச்சம், மடம், நாணம், பேதமை ஆகிய நான்கு குணங்களில் ஏதோ ஒன்று அவளைத் தடுத்துவிடும்.

மேலும், அந்தப் பெண்ணுக்கு என்று ஏதாவது பலவீனங்கள் இருக்கலாம். தெற்றுப்பல், கண்ணாடி, குளிர்காலங்களில் ஆஸ்துமா அல்லது ரத்தசோகை. இப்படி எத்தனையோ சொல்லக்கூடிய, சொல்ல முடியாதவைகள். எல்லாம்... அந்தப் பெண்ணின் பெற்றோர் அவளுக்கு ஏற்ற மாப்பிள்ளை தேடும்போது பூதாகரமாய் வளர்ந்துவிடுகின்றன.

"நல்லாத்தான் இருக்கா. ஆனா, மூக்குக் கண்ணாடி. போய் கடிதம் போடறோம்..."

"நல்லாத்தான் இருக்கா. ஆனா... ஏன் இப்படி வெள்ளைக் கரப்பான்பூச்சி மாதிரி ஒரு நெறம்? ஒருவேளை

ரத்தசோகையோ...?"

பாருங்கள்... இத்தனை பலவீனங்களும் அவள் கல்யாணத்திற் குறுக்கே நிற்கின்றன.

ஆனால், காதல் என்று வந்துவிட்டால் பெண்ணின் இத்தகை பலவீனங்கள் அடிபட்டுப் போகின்றன. தெற்றுப்பல்லே, அவ முகத்திற்கு தனி அழகைத் தந்துவிடுகிறது. ரத்தசோகையே ஒ ஆங்கிலப் பெண்ணுக்கு நிகராக ஒப்பிட வைத்துவிடுகிறது ஆஸ்துமாவின்போது மூச்சிரைத்தால் அதை ஒரு தனி அழகாக நினைக்கத் தோன்றுகிறது. காதலில் மட்டுமே இதெல்லாம் சாத்தியம் இல்லையா ஆன்ட்டி?

கல்யாணத்திற்குப் பின் எப்படியாவது 'அட்ஜஸ்ட் செய்துகொண்டுவிடலாம். அதனால்தான் சொன்னேன். ஓ ஆண், ஒரு பெண்ணிடம் 'ஐ லவ் யூ' என்று சொல்லும் தருணம் வாழ்க்கையில் மிக முக்கியமானது என்று.

என் வாழ்க்கையிலும் அந்தத் தருணம் எதிரே நின்றிருந்தது.

எல்லாப் பெண்களைப் போலவே கோபம் வந்தது. அந்த கோபத்திற்குக் காரணம், என் அழகின் மேல் எனக்கு இருக்கும் நம்பிக்கை. என்னைத் தேடி ஒருவன் வந்து இந்த மாதிரி சொல்வதென்றால், நான் அவ்வளவு வசீகரமாக இருக்கிறேன் என்றுதானே பொருள்? என்னைத் தேடி இன்னொருத்தன் வருவான் என்றுதானே பொருள்?

இப்படித்தான் நினைத்து அநேகப் பெண்கள் செருப்பைத் தூக்கிக் காண்பித்துவிடுகிறார்கள். அவளிடம் தன் காதலைத் தெரிவித்த ஆண் மிரண்டு– இன்னொரு பெண்ணைத் தேடிப் போய், 'ஐ-லவ் யூ' என்று சொல்லி 'செட்டில்' ஆகிவிடுகிறான் அல்லது அம்மா– அப்பா சொல்லும் பெண்ணின் கழுத்தில் நிறைய சீர் எல்லாம் பெற்று தாலி கட்டுகிறான். செருப்பை உயர்த்திக் காண்பித்த பெண், இன்னொரு தருணத்திற்காகக் காத்திருந்து பெரும்பாலும் நொந்து போகிறாள்.

பிரகாஷ் 'ஐ லவ் யூ' சொன்னவுடன் எனக்கும் கோபம்



வந்தது. நான் யார்? எப்படிப்பட்ட குடும்பத்தில் இருந்து வந்தவள்? என்னைப் பார்த்து ஒருவன் இப்படிச் சொல்வதா? என்ற கோபம். உடனே உதறிவிடத் துடித்தேன். செருப்பைக் கழற்ற நினைத்தேன். ஆனால், என்னால் அப்படிச் செய்ய முடியவில்லை. காரணம், கடந்த பதினைந்து நாட்களாக அவன் ஒற்றைக்கால் கொக்கு போல் வந்து நின்றிருக்கிறான். அவன் மேல் பரிதாபம் வந்தது.

"இருபதாயிரம் ரூபாய். 'வரிகள் தனி" என்றேன்.

"என்னது?" என்று குழம்பினான்.

"பின்னே என்னவோ விலை கேட்கிற மாதிரி காதல் அது இது என்று சொல்கிறீர்களே? அதுதான் விலையைச் சொன்னேன் மிஸ்டர் பிரகாஷ். உங்கள் தங்கையிடம் இப்படி எவனாவது ஒருவன் வந்து சொன்னதாகத் தெரிந்தால், உங்களுக்கு எவ்வளவு கோபம் வரும்? பிளீஸ்... இந்த மாதிரியெல்லாம் இனிமேல் 'பிஹேவ்' பண்ணாதீர்கள்" என்றேன்.

அவன் முகம் கூம்பிவிட்டது. சிறுத்துவிட்டது. அவமானப்பட்டது போல் தெரியவில்லை. மாறாக, ஏமாந்து போன முகமாய்த் தெரிந்தது. சட்டென்று பின்வாங்கினான்.

"ஐ'ம் ஸாரி" என்று முணுமுணுத்தான். போய்விட்டான்.

"என்னடி சொன்னான்?" என்று தோழிகள் கேட்டார்கள்– கண்காட்சியில் கூட இருந்தவர்கள்.

"என்னடி சொல்லப் போகிறான்! 'ஐ லவ் யூ' என்றுதான் சொன்னான்."

"மச்சம்டி உனக்கு" என்றாள் ஒருத்தி.

"அதிர்ஷ்டம் அடிச்சா இப்படி அடிக்கணும். நீ என்ன சொன்னே?" என்று கேட்டாள் இன்னொருத்தி.

"ஜாக்கிரதையா இருந்துக்கோன்னு சொன்னேன்" என்றேன்.

"என்னடி உமா, இப்படிச் சொல்லிட்டே?"

"பின்ன... எப்படிச் சொல்லணும்னு சொல்றே?"

"பைத்தியமா ஒனக்கு? ஏன் அவன்கிட்டே அந்த மாதிரி

சொன்னே? இன்னொரு வாய்ப்பு வருமாடி உனக்கு உனக்கென்ன மனசில பெரிய மகாராணின்னு நெனைப்பா ஏதாவது ஒரு ராஜகுமாரன் ஒன்னைத் தேடி வருவான்னு நெனைச்சிட்டு இருக்கியா?"

"அப்படியெல்லாம் எதுவும் இல்ல" என்றேன். கொஞ்சம் கம்மிய குரலில்.

"இல்லாட்டி நடிகர்கள் யாராவது வந்து ஒங்கிட்ட 'ஐ லவ் யூ' சொல்வாங்கன்னு எதிர்பார்க்கிறியா?"

"என்னடி பேச்சு பேசறே? எவனோ ஒருத்தன் வந்து 'ஐ லவ் யூ' சொன்னா, ஒடனே பூம் பூம் மாடு மாதிரி நான் தலையாட்டிட்டு அவன் பின்னால் போயிடணும்னு சொல்றியா? அவன் ஜாதி என்ன? குலம்– கோத்திரம் என்ன? படிச்சிருக்கானா.. இல்லையா? வேலை செய்யறானா... இல்லையா? நல்லவனா.. கெட்டவனா? பாக்கற பொண்ணுங்ககிட்ட எல்லாம் 'ஐ லவ் யூ' சொல்லிக்கிட்டுத் திரியறானா என்கிறதெல்லாம் பாக்க வேணாமா? ஒடனே நானும் ஈன்னு இளிச்சிக்கிட்டு அவன் பின்னாலேயே போயிடணுமா?"

"அப்படின்னா நீ என்ன பண்ணிருக்கணும்? அவன்கூட பேசிருக்கணும். அவனைப் பத்தித் தெரிஞ்சிக்கிட்டிருக்கணும். பழகி இருக்கணும். இதோ பார் உமா. ஜாதி எல்லாம் இன்னைக்கு "அவுட் ஆப் டேட்'. நீ வேற பாஷை, அவன் வேற பாஷை பேசறவனா இருந்தாக் கொஞ்சம் சிரமப்படணும். அதுகூட 'அட்ஜஸ்ட்' பண்ணிக்க முடியும். உன் கலாசாரம் வேற, அவன் கலாசாரம் வேறன்னா யோசிக்கணும். அவனும் தமிழ் பேசறான். நீயும் தமிழ் பேசறே. பார்க்கறதுக்கு ராஜா மாதிரி இருக்கான். அவன் மீசை ஒண்ணே போதும்.... முத்தம் கொடுக்கறதுக்கு."

"ஏய்."

"பின்ன என்ன? வெட்டிவிட்டாளாம். இந்த மாதிரி 'சான்ஸ்' இன்னொரு தடவை வருமாடி? உங்க அக்கா கல்யாணத்துக்கு அப்பா மூணு லட்சம் செலவு பண்ணுணார்னு சொன்னே?



ஒன் கல்யாணத்துக்கு அவர் என்ன பண்ணுவார்னு நெனைக்கிறே? நீயே மாப்பிள்ளை தேடிக்கிட்டா இந்த சீர் செனத்தி, ஆயிரம் பேரைக் கூப்பிட்டு ஆடம்பரக் கல்யாணம் பண்ணுறது– இதெல்லாம் இல்லாமப் போகும்ல?"

"இல்ல ரஞ்சனி. எனக்கு ஆம்பிளைங்கன்னாலே அலர்ஜி. அதனாலத்தான் 'லவ்'னு சொன்ன உடனே எனக்கு அவன் மேல வெறுப்பு வந்திடிச்சு."

"அதான் அவன் 'லவ்'னு சொன்ன உடனே 'வள்'ளுன்னு எரிஞ்சி விழுந்திட்டியாக்கும்? நீ கல்யாண்மே பண்ணிக்கப் போறதில்லையா? இப்படியே தனியா இருக்கப் போறியா? எத்தனை நாளுக்குத் தனியா இருப்பே? உங்க அம்மா– அப்பா இருக்கறவரைக்கும் தனியா இருப்பே! அப்புறம்...? உங்க அக்காவோட நீ போய் இருக்க முடியாது. ஒரு பொண்ணு கல்யாணமாகி கொஞ்சநாள் வாழ்ந்துட்டு தனியா இருந்தாக்கூட இந்த சமுதாயம் ஒத்துக்கும். அவளை ஒரு பரிதாபப் பார்வை பார்க்கும்.

பொம்பளை எவ்வளவு மோசமா 'பிஹேவ்' பண்ணி அவ ஆம்பிளைகிட்டே இருந்து பிரிஞ்சி வந்திருந்தாலும்கூட, ஆம்பிளையைத்தான் சமூகம் குத்தம் சொல்லும். அவன் பாக்கெட்ல கைவிட்டு ஜீவனாம்சமெல்லாம் எடுத்துத் தரும். ஆனா, கல்யாணம் பண்ணிக்காமலேயே ஒரு பொண்ணு இருந்தா... அவளை நல்லபடியா பார்க்காது. கேலியோடத்தான்

ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.

பார்க்கும். வேற மாதிரி நினைக்கும்.

பணம் நெறைய இருக்கும் ஒருத்தன், ரெண்டு பேர்–'சின்ன வீடா இருக்கியா?'ன்னு கேட்டுடுவானுங்க. அது பரவாயில்லையா...? ஆம்பளைத் துணை இல்லாம என்னடி வாழ்க்கை? பொண்ணுன்னா ஆம்பளை வேணும். ஆம்பளைன்னா பொண்ணு வேணும். அப்பத்தான் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்கும். அப்படி இல்லாம சும்மா தெனம் எழுந்து குளிச்சிட்டு, சாப்பிட்டுட்டு, இவ்வளவு அலங்காரமெல்லாம் பண்ணிக்கிட்டு இங்க வந்து போறதுக்கு என்ன அர்த்தம் இருக்கு சொல்லு?" என்று ரஞ்சனி நீளமாகப் பேசினாள்.

'தப்பு செய்துவிட்டேனோ?' என்று மருகினேன். ரஞ்சனி கேட்டதுபோல் நான் கல்யாணமே பண்ணிக்காமல் இருந்துவிடப் போகிறேனா? அப்படி இருக்கிறேன் என்று சொன்னால், அம்மா ஒத்துக்கொள்வாளா? என் தீர்மானம்தான் உலகிலேயே சிறந்தது என்று அங்கீகரித்துவிடப் போகிறார்களா? மேலும் யோசித்துப் பார்த்தால், எனக்கு கல்யாணம் செய்து வைக்க அப்பா எவ்வளவு தூரம் சிரமப்பட வேண்டியது இருக்கும் என்பது நியாயமான கேள்விதானே?

அக்காவுக்கு மூணு லட்சம் ஆகிவிட்டது. ஆறு மாதத்திற்கு ஒருமுறை விலைவாசி இரட்டிப்பாகிக் கொண்டிருக்கும் நாளிது. எனக்கு செலவழிக்க எங்கே போவார்? நான் ரொம்பவும் குழம்பிப் போயிருந்தேன். ஆண்களை நம்புவதா... கூடாதா? அந்த டாக்டர் செய்தது சரியா... தப்பா?

அன்றைக்கு வீடு திரும்பும்போது மிகவும் சுரத்திழந்துதான் இருந்தேன். பஸ்ஸில் எவனோ இடித்தான். அதுவே மற்ற நாளாய் இருந்தால், என் கையில் இருக்கும் 'ஸேப்டி பின்'னால் குத்தி இருப்பேன். இன்றைக்கு அப்படி எதுவும் செய்யாமல் மரக்கட்டை போல் நின்றிருந்தேன்.

ஒருவன் வந்து என்னை இடிக்கிறான் என்றால் அது என் அழகுக்கு அவன் அளிக்கும் அங்கீகாரம் என்றுகூட



அபத்தமாகத் தோன்றியது. பஸ்சுக்கு வெளியே– சென்னை மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. பிளாட்பாரத்தில் ஒரு ஆண் தன் சட்டையைக் கழற்றித் தோளில் போட்டுக்கொண்டு, மார்பு நிறைய கொசகொசவென்று வளர்ந்திருந்த முடியைக் காட்டிக்கொண்டு– ஒரு பெண்ணின் தோள் மீது கையைப் போட்டுக்கொண்டு போனான்.

அந்தப் பெண்– தோளில் வந்து விழுந்த அவன் கையோடு தன் கையைக் கோர்த்துக்கொண்டாள். சிரித்துச் சிரித்துப் பேசி நடந்தாள். முகத்தில் அந்த ஆணை ஜெயித்து– முழுக்க முழுக்க தனதாக்கிக் கொண்ட கர்வம் இருந்தது. எனக்குள் ஒரு சுய இரக்கம் எழுந்தது.

'என்ன வாழ்க்கை இது? ஒரு தெருவின் திருப்பத்தில் பெட்டை நாய் வாலைச் சுருட்டித் தன் கால்களுக்கு இடையில் வைத்துக்கொண்டு ஓட, இரண்டு ஆண் நாய்கள் அதைத் துரத்தின. இன்னும் கொஞ்ச தூரம் அந்தப் பெண் நாய் ஓடக்கூடும். அப்புறம்...?

பணிந்து போகும்.

பணிந்து போகும்போது அதற்கு வருத்தமோ– கோபமோ இருக்கப் போவதில்லை. மாறாக மகிழ்ச்சிதான்! அதுதான் இயல்பு. அதுதான் இயற்கை. உலக நியதி. நான் மட்டும் இந்த இயற்கை விதியில் இருந்து பிய்த்துக்கொண்டு போய்விட முடியுமா என்ன?

வீட்டை அடைந்தேன். திருவல்லிக்கேணியில் இருந்தது எங்கள் வீடு. வாசலில் கம்பி போட்ட கதவு. உள்ளே நுழைந்தால் நீளமான நடை. அப்புறம் அந்த நடையினூடே வரிசையாகப் 'போர்ஷன்'கள். எங்கள் 'போர்ஷன்' முதல். நல்லவேளை. மற்ற 'போர்ஷன்'களைக் கடந்து செல்லும் அவசியம் இல்லை. கடக்கும்போது என்னதான் கட்டுப்படுத்தினாலும் பார்வை தானாக அந்த 'போர்ஷன்' பக்கம் போகும். அவர்கள் வீட்டுச் சின்ன சின்ன அந்தரங்கங்களில் ஏதாவது ஒன்று கண்ணில்படும்.

அதையெல்லாம் பார்க்க வேண்டியதில்லை அல்லவா?

என் வீட்டு 'போர்ஷன்' வாசலில் செருப்பைக் கழட்டிவிடும் நேரம். உள்ளிருந்து அப்பாவின் குரல் சீற்றமாக வந்தது.

"என்னை என்னடி பண்ணச் சொல்றே? நான் என்ன உமாவுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கமாட்டேன்னா சொல்றேன்? ஆயில்ய நட்சத்திரத்துல பெத்திருக்கே. அது மாமியாருக்கு ஆகாதுன்னு யாருமே ஜாதகத்தையே தொடமாட்டேங்கறாங்க. அப்படியே ஒண்ணு- ரெண்டு வந்தாலும், 'ரெண்டாம் தாரம்தான் சார், பரவாயில்லையா?'ங்கறான் புரோக்கர். அல்லது ஐம்பது பவுன் போடு, நூறு பவுன் போடு- என் பையனுக்கு அரசாங்க உத்தியோகம், சம்பளம், கிம்பளம்னு தாராளம் என கூசாம சொல்றாங்க.

பையனைப் பார்த்தா- எள்ளையும், அரிசியையும் ஜோடி சேர்த்த மாதிரி இருக்கும். என்னை என்ன பண்ணச் சொல்றே? சொல்லு. நோட்டீஸ் அடிச்சித் தெருத் தெருவாக கொடுக்கச் சொல்றியா? விலைவாசி ஏறின மாதிரி வரதட்சணையும் ஏறிட்டுதானே இருக்கு. ரேடியோவிலயும், டி.வி.யிலயும் நாடகம் போட்டு வரதட்சணை வாங்காதேன்னு சொன்னா- அத்தனை பேரும் கேட்டுடறாங்களா என்ன?"

"அப்ப உமா கல்யாணம்?"

"அவங்கவங்களுக்கு தலையெழுத்துன்னு ஒண்ணு இருக்கு. அதுப்படித்தான் நடக்கும். நீயும், நானும் அல்லாடறதால மட்டும் எதுவும் நடந்துடாது. அல்லாட்டம்தான் மிச்சம்" என்று அப்பா சொல்லிவிட்டு- 'தடால்' என்று குளியலறை கதவை அறைந்து சாத்துவது கேட்டது.

'என் பலவீனம் எனக்கு இன்றுதான் தெரிந்தது. ஜாதக தோஷம்.

சின்ன வயதில், நான் இந்த யோசனையெல்லாம் செய்ததே இல்லை. பட்டாம்பூச்சி போலத்தான் இருந்தேன். அம்மா எதற்கு அவ்வளவு கவலைப்பட்டாள்? நான் 'ஸானிடரி



நாப்கின்' வாங்கியே ஆகவேண்டும் என்பதற்காக ஏன் என்னை டாக்டரிடம் எல்லாம் காட்டச் சொன்னாள்? அதனால் என்ன ஆயிற்று? மாதாமாதம் எனக்கு செலவுதான் அதிகமாகி இருக்கிறது. மற்றபடி...?'

"எப்ப வந்தே உமா?" என்று அம்மா சந்தேகம் கலந்த குரலில் கேட்டாள்.

"ஏன்... இப்பதான். அப்பா எங்கே? இன்னும் வரலையா?" என்றேன்.

அப்பா வந்திருப்பதை நான் அறியவில்லை என்பதை தெரிந்துகொண்ட பின்தான் அம்மாவுக்கு மூச்சு வந்தது. காப்பி கலந்துவந்து கொடுத்தாள். குடித்தேன். அறைக்குள் போய் உடை மாற்றிக்கொண்டு 'நைட்டி'யுடன் மறுபடி ஹாலுக்கு வந்தபோது அப்பா குளியலறையில் இருந்து வெளியே வந்திருந்தார்.

"எப்ப வந்தே?"

'இப்பத்தான்" என்றேன். என் பொய் அப்பாவையும் திருப்திப்படுத்தியது.

ராத்திரி சமையலுக்கென்று அம்மாவுக்கு காய்கறி நறுக்கிக் கொடுத்தேன். குக்கரில் அரிசி களைந்து வைத்து, ஸ்டவ்வில் ஏற்றினேன். ஏதாவது டிபன் செய்தால் நன்றாக இருக்கும் போலத் தோன்றியது. என்ன செய்யலாம்? பஜ்ஜி? பிரெட் டோஸ்ட்? வெங்காய பஜ்ஜி செய்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது.

டப்பாக்களைத் திறந்து பார்த்தேன். அரிசி மாவு, எண்ணெய் இருந்தது. கடலை மாவு- வெங்காயம் இல்லை. வீட்டுக்கு எதிரில்தான் மளிகைக்கடை.

செருப்பு மாட்டிக்கொண்டு இறங்கினேன்.

திடுக்கிட்டேன். காரணம் பிரகாஷ்

என் கண்களில் படுகிற மாதிரி நின்றிருந்தான். பரிதாபமாக முகத்தை வைத்திருந்தான். என் தருணத்தை நான் இன்னும் இழந்துவிடவில்லை என்று தோன்றியது.

மனதிற்குள் மத்தாப்பு.

'ஐ லவ் யூ பிரகாஷ்' என்றேன், மவுனமாய்!

# 6

அடுத்த பத்து நாட்களுக்குள் பிரகாஷும், நானும் ரொம்ப நெருங்கிவிட்டோம். என் வீட்டு வாசலில் தவம் போல அவன் நின்றதை அங்கீகரிக்கும் வகையில் சிரிப்பொன்றை உதிரவிட்டேன். அவனுக்கு அந்த அங்கீகாரம் போதுமானதாக இருந்தது. யாரும் பார்க்கிறார்களா என்று தன்னைச் சுற்றிப் பார்த்துவிட்டு, யாரும் பார்க்கவில்லை என்பதை உறுதி செய்துகொண்டு கையசைத்துவிட்டுப் போனான். நான் பதிலுக்குக் கை அசைக்கவில்லை. ஒரேயடியாக சாய்ந்துவிட்டால் எப்படி?

மறுநாள் ஷோரூமுக்கு வந்தான். அப்போதும் தனியாகத்தான் இருந்தேன். அன்றைக்கு அவனை ஓரளவு எதிர்பார்த்தேன். என் மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. முதன் முதலில் டாக்டரின் கிளினிக்கில்– பெஞ்சில் படுத்திருந்தபோது எப்படி நான் உணர்ந்தேனோ... அதேபோல் இப்போதும் உணர்ந்தேன்.

"ஐ'ம் பிரகாஷ்" என்றான்– இன்றும்.

"பிளீஸ். இங்க எதுவும் வேணாம். சாயங்காலம் பார்க்கலாம்."

"எங்கே?" என்றான் ஆவலாக.

"எங்க கம்பெனியில் இருந்து ஒரு ஸ்டாப்பிங் தூரத்தில் நாகேசுவரராவ் பூங்கா. அங்கே..." என்றேன். போய்விட்டான். என் மனம் இன்னும் படபடத்தது. எப்போது மாலை வரும் என்று காத்திருந்தேன்.

போனேன். பூங்கா வாசலில் ஒரு 'பைக்'கில் பிரகாஷ் உட்கார்ந்திருந்தான். அவனிடம் 'பைக்' இருப்பதைப் பார்த்து



எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. வரதட்சணை சீரில் ஒன்று மிச்சம். வரதட்சணை எல்லாம் கேட்கும் ரகமாக பிரகாஷ் எனக்குத் தோன்றவில்லை.

அவனை இப்போதுதான் கூர்ந்து பார்க்கிறேன். அவன் தலைமுடி கறும்பழுப்பாக இருந்தது. ஒரு கொத்து முடி அலையாகச் சுருண்டு, முன் நெற்றியில் வந்து மோதி மோதி விலகி இருந்தது. கண்கள் அகன்று தெரிந்தன. ஓர் அப்பாவித்தனத்தை வெளிப்படுத்தின. மீசை 'டிரிம்'மாக இருந்தது. பற்கள் ஒழுங்கான வரிசையுடன் இருந்தன. சிவில் இன்ஜினீயர்' மாப்பிள்ளையைவிட பிரகாஷ் எனக்கு அதிகமாகப் பிடித்திருந்தான். ஒப்பிடுதல் கூடாது என்று எத்தனையோ தடவை சொல்லிக்கொண்டாலும்கூட, இந்த மனம் தன்பாட்டுக்கு ஒப்பிட்டுப் பார்த்துவிடுகிறது!


அவனுக்கு மார்பு நல்ல அகலமாய் இருந்தது. கருநீல நிறத்தில் 'டீ– சர்ட்' அணிந்திருந்தான். 'கிரீம்' நிறத்தில் பாண்ட், வெள்ளை நிறத்தில் உயர்தர ஷூ. அவனுக்கு நல்ல ரசனை இருப்பது தெரிந்தது.

எனக்குப் பேசத் தோன்றவில்லை. அவனுக்கும் பேசத் தோன்றவில்லை. ஒருவரை ஒருவர் சற்று நேரம் பார்த்துக்கொண்டே இருந்தோம். பின் அவன்தான் மெல்லச் சிரித்தான். பயந்து பயந்து தயங்கித் தயங்கிச் சிரித்தான். நான் பதிலுக்குச் சிரித்தேன்.

"ஹப்பா" என்றான்.

"என்ன ஹப்பா?"

"நீங்க என்னை இங்க வரச்சொன்னதுக்குக் காரணம் என்னைச் செருப்பால் அடிக்கத்தானோன்னு நெனைச்சிக்கிட்டு இருந்தேன். நேத்து உங்க வீட்டு வாசல் வரைக்கும் வந்துட்டேன்... இன்னிக்குக் காலையில கம்பெனிக்கு வேற வந்துட்டேன்னா. செருப்படி குடுத்தாத்தான் ஒழுங்கா இருப்பேன்னு நெனைச்சிக்கிட்டு என்னை வரச் சொன்னீங்கன்னு போன 'செகண்ட்' வரை நெனைச்சேன்."





"சும்மா என்ன செருப்பு செருப்புன்னு பேசிகிட்டு. எல்லா பெண்களும் செருப்பைக் கையில எடுக்கறதில்லை. உங்களுக்கு வேற எங்கயாவது செருப்படி வாங்கி அனுபவமா?"

"சேச்சே... நம்ம ஊர்ல 'லவ்'வுன்னு சொன்னாலே பெண்கள் செருப்பைத்தானே கையில எடுக்கறாங்க. என் நண்பர்கள் எல்லாம் சொல்லி இருக்காங்களே..."

"பேச்சை மாத்துங்க. சும்மா சும்மா அந்த வார்த்தையை உபயோகிக்காதீங்க! கேட்க என்னவோ மாதிரி இருக்கு."

"சரி! அங்கே போய் உட்காரலாமா?"

"ம்" என்று சம்மதித்து அவன் கை காட்டிய திசையில் நடந்து அங்கிருந்த 'பெஞ்ச்' ஒன்றில் உட்கார்ந்தேன். பூக்களின் மேல் அமர்வதுபோல உணர்ந்தேன். எனக்குக் கொஞ்சம் தள்ளி அவன் உட்கார்ந்தான். அவன் விரல் நுனிகூட என் மீது படவில்லை.

பிரகாஷ் எம்.ஏ. படித்திருக்கிறானாம். படிக்கும்போது பெண்கள் இருக்கும் திசை பக்கம் திரும்பிக்கூட பார்த்ததில்லையாம். கூடப் படிக்கும் எவனோ ஒரு பையன், யாரோ ஒரு பெண்ணிடம் காதல் கடிதம் கொடுத்துவிட, அதை அவள் முதல்வரிடம் கொடுக்க, அந்தப் பையனை 'சஸ்பென்ட்' பண்ணிவிட, அந்தப் பையன் அடுத்த நாள் மூட்டைப்பூச்சி மருந்து குடித்து செத்துவிட, பிரகாஷுக்குப் பெண்கள் பக்கம் பார்ப்பதென்றாலே 'அலர்ஜி' என்றான்.

என் ராசிதான் அவனுக்கும். எனக்கு ஆண்கள் என்றால் 'அலர்ஜி'. பிரகாஷிற்கு பெண்கள் என்றால் 'அலர்ஜி'.

முதல் நாள் முழுக்க பேச்சு, கல்லூரியைப் பற்றியதாகிவிட்டது. அவன் 'பைக்'கின் பின்னால் ஏறிக்கொண்டு, அவனிடம் இருந்து விலகி உட்கார்ந்து போய்– காப்பி மட்டும் குடித்துவிட்டு பஸ் ஏறி வீட்டுக்குப் போனேன்.

"ஓவர் டைமும்மா"– முதல் பொய்.

அடுத்த நாள் அவனுடைய குடும்பம் பற்றி தெரிந்தது. ஒரு அண்ணன், அக்கா, தங்கை. அக்காவிற்குக் கல்யாணம்

பண்ணுவதற்கு முன்னால் அண்ணன்காரன் தனக்கு கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தானாம். சொந்த அத்தைப் பெண். அவளிடம் அண்ணனுக்கு அளவு கடந்த மோகம். அதனால் கல்யாணம் பண்ணிக்கொள்வதற்கு முன்னாலேயே அவர்கள் இருவரும் சேர்ந்து குடும்பம் நடத்திவிட்டார்கள். அதன் முடிவும் தெரிந்துவிட்டது.

அதனால்தான் அண்ணன் கல்யாணத்திற்கு அவசரப்படுத்தினான் என்று அப்புறம்தான் தெரிந்தது. கல்யாணத்திற்குப் பின் அண்ணன் தனிக்குடித்தனம் போய்விட்டான். அவனிடம் இருந்து பணமும் வரவில்லை. அதனால் அக்கா கல்யாணத்தை இவன்தான் நடத்த வேண்டி இருந்தது.

அது முடிந்தவுடன் தங்கை கல்யாணம். அது முடிந்தவுடன் தனக்குக் கல்யாணம் என்று நினைத்துக்கொண்டு இருந்த நேரத்தில் அக்காவின் கணவர் செத்துப் போய்விட்டார். அவர் ஒரு 'ஹார்ட் பேஷண்ட்'. இத்தனைக்கும் சொந்தம். ஆனால், இந்த விஷயத்தை மறைத்து கல்யாணத்தை நடத்திவிட்டார்கள். கல்யாணமான ஒரு வருடத்திற்குள் அக்கா வீட்டுக்கு வந்துவிட்டாள். அவள் விதவையானதை தாங்க முடியாமல் அம்மாவும், அப்பாவும் செத்துப் போய்விட்டார்கள்.

அவனுக்குக் கல்யாணம் பண்ண வேண்டும் என்று கவலைப்படுபவர்கள் யாருமில்லை. பிரகாஷிற்கும் சொந்தக்காரர்களிடம் போய் பெண் கேட்பது என்பது பிடிக்கவில்லை. முன்பின் தெரியாத பெண்ணை கல்யாணம் பண்ணிக்கொள்வதைவிட, தன் மனதுக்குப் பிடித்த பெண்ணாகப் பார்த்துப் பேசிப் பழகிக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று காத்திருந்தானாம். என்னைப் பார்த்தவுடன் அவன் 'சரண்டராகி'விட்டானாம். மணந்தால் உமா என்று தீர்மானம் பண்ணிவிட்டானாம்.

"நான் இவ்வளவு சொல்லிவிட்டேன். நீங்க எனக்கு எந்தப் பதிலையும் சொல்லவில்லையே?" என்றான் பிரகாஷ்.



'பத்து நாட்களாக நான், அவனிடம் மனத்தளவில் நெருக்கமாகிக்கொண்டு இருப்பதை என்னால் உணர முடிந்தது. பத்து நாட்களாக அவன் என் மனதில் தியாகத்தின் மறு உருவமாக வளர்ந்துகொண்டிருந்தான். பொறுப்பில்லாத அண்ணன். இரண்டு பெண்களுக்குக் கல்யாணம் பண்ணி வைத்த பின் ஏறக்குறைய அநாதையாகிப் போன சூழ்நிலை. இப்போது அக்காவை வீட்டோடு வைத்துப் பார்த்துக்கொள்ள வேண்டிய நிலைமை. இவ்வளவு முள் முடிகளைத் தலையில் சுமந்தும் இவனால் எப்படிச் சிரிக்க முடிகிறது? எப்படி நெறி பிறழாமல் இருக்க முடிகிறது? இன்னும் என்னை 'நீங்க' 'வாங்க' 'போங்க' என்று மரியாதையோடு எப்படி அழைக்க முடிகிறது?

"உமா! உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? எனக்கு இந்தப் பொண்ணு பார்க்கற சடங்கெல்லாம் பிடிக்கவே பிடிக்காது. முன்ன பின்ன தெரியாத ஒரு பெண்ணைப் போய்ப் பார்த்துட்டு, பிடிச்சிருக்குன்னு சொல்லிக் கல்யாணம் பண்ணிக்கறது ரொம்ப அபத்தமாப்படுது. என்ன பிடிச்சிருக்குன்னு சொல்ல முடியும்? ஒடம்புதான் பிடிச்சிருக்குன்னு சொல்ல முடியும்? அந்தப் பெண்ணோட மனசு என்னன்னு தெரியுமா? அவளுடைய சிந்தனை என்னன்னு தெரியுமா?

எதுவுமே தெரியாம ஒரு பெண்ணைப் போய்ப் பார்த்துட்டு, தாலி கட்டி கூட்டிட்டு வர்றதுக்கும் கையில விலங்கை மாட்டி கைதியாக கூட்டிட்டு வர்றதுக்கும் அப்படி ஒண்ணும் நிறைய வித்தியாசம் இருக்கற மாதிரி எனக்குத் தெரியலை. நீங்க என்ன சொல்றீங்க? அதே மாதிரி ஒரு பொண்ணைப் போய்ப் பாத்துட்டு பிடிக்கலேன்னு சொல்றேன்னு வச்சுக்குங்க. அந்தப் பொண்ணோட மனசு என்ன பாடுபடும்? அவ என்ன வியாபாரப் பொருள் மாதிரியா? பிடிச்சிருக்கு... இல்லன்னு சொல்ல? நீங்க என்ன நினைக்கறீங்க?"

எனக்கு கண்களில் நீர் முட்டிக்கொண்டு வந்தது. இப்படிப்பட்ட ஆணையா நிராகரித்துவிட்டு விலக நினைத்தேன்? இவனைப்

போயா நான் விலைபேச வந்தவனே என்று சுட்டிக்காட்டி, 'இருபதாயிரம் ரூபாய், வரிகள் தனி' என்றேன்.

தொண்டை அடைத்துக்கொண்டது. பேச முடியாமல் போய்விடுமோ என்று அச்சமாக இருந்தது. சமாளித்துக்கொண்டேன்.'

"என்னை ஏன் இன்னும் நீங்க, வாங்க, போங்கன்னு சொல்லிக்கிட்டு?"

"நீ உரிமை கொடுக்காத வரைக்கும் நான் எப்படி சொல்றதாம்?"

"நான் உங்க உமா!"

"அப்படின்னா?" என்று கேட்டான்– உதடுகள் புன்னகைக்க, கண்கள் ஒளி சிந்த.

"ஐ லவ் யூ பிரகாஷ்" என்றேன்.

"தாங்க்யூ டார்லிங். தாங்க்யூ ஸோ மச்" என்று என் கையைப் பற்றி முத்தமிட்டான்.

என் உடல் சிலிர்த்தது.

## 7

**கா**தலை அப்பாவிடம் சொன்னேன். அம்மாவிடம் சொன்னேன்.

அப்பாவின் கையில் அண்ணனை அடித்தபோது 'ரூல்' தடி இருந்தது. இப்போது அது இல்லை. அவ்வளவுதான் வித்தியாசம். மற்றபடி சீறினார். கண்டபடி திட்டினார். என் நடத்தையைக் குறித்துப் பல தகாத வார்த்தைகளைச் சொன்னார்.

"என்னை என்ன கையாலாகாதவன்னு நெனைச்சிக்கிட்டியாடி சண்டாளி. உன்னைப் படிக்க வச்சேன் பாரு. அது என் தப்பு. உன்னை வேலைக்கு அனுப்பினேன் பாரு. அது என்னோட மகாப் பெரிய தப்பு. என்னைச் செருப்பால அடிக்கணும். காதலிக்கிறாளாம்! அடி செருப்பால. அந்தக் கல்யாணராமன்



நேத்துகூட வந்திருந்தான். ஒரு ஜாகதத்தைக் குடுத்துட்டுப் போனான். ஜோசியர்கிட்ட காட்டினேன்.

பொருத்தமா இருக்குன்னாரு. ஒரே மாசத்துல கல்யாணம். அது வரைக்கும் இந்த கன்றாவி பத்தியெல்லாம் எதுவும் பேசாம நீ வீட்ல அடைஞ்சி கிட. என் பேச்சை மீறிப் போனா தெரியும் சேதி."

"அப்பா."

"என்னடி? நொண்டியாட்டம் நடிச்சிக் காமிச்சே பாரு. அப்பவே நான் தீர்மானம் பண்ணிட்டேன். நீ துளிர்விட்ட கழுதைன்னு. இப்ப எதுக்கு என்ன அப்பான்னு கூப்பிடறே?"

"கொஞ்சம் சத்தம் போடாமப் பேசுங்கப்பா."

"சத்தம் போடுவேன். என் வீட்டுல நான் சத்தம் போடறதைத் தடுக்க நீ யாரு? நான் பார்த்து வளர்ந்த பொண்ணு நீ. ஜாக்கிரதை."

சிக்கல் பண்ணுவது ஒன்றுதான் அப்பாவுக்குத் தெரியும். அவருடைய அகங்காரம் கண்களை– புத்தியை மறைக்கிறது. அம்மா அடங்கிப் போனவள். அவளால் எதுவும் எடுத்துச் சொல்ல முடியாது. இந்த வீட்டின் வாயில்லாப்பூச்சி அவள்.

"நான் ஒண்ணு கேட்கறேன். பதில் சொல்றீங்களா?"

"என்னை... என்னை... என்னை எதிர்த்துப் பேசற அளவுக்கு வந்துட்டியா? சம்பாதிக்கிற திமிர்தானே?"

"வீணா வார்த்தையைக் கொட்டாதீங்கப்பா. என்னை நீங்க அடிச்சிக் கொல்றதா இருந்தாலும் சரி, உங்களுக்கு இன்னிக்கு சில உண்மைகளைச் சொல்லாம இருக்கப்போறதில்ல."

"என்னடி உண்மை... பெரிய உண்மை?"

"அக்கா கல்யாணத்துக்கு மூணு லட்சம் செலவு பண்ணுணீங்க. அதனால உங்களுக்கென்ன பிரயோஜனம்? இப்பக்கூட அந்தச் சம்பந்தியம்மா ஒவ்வொரு பொங்கலுக்கும், தீபாவளிக்கும் சீர் கேட்டுக்கிட்டேதானே இருக்கா. நீங்களும் கொடுத்துக்கிட்டுத்தானே இருக்கீங்க? இப்ப உங்ககிட்ட என்ன செலவு மிச்சம் இருக்கு? என் கல்யாணத்துக்கு உங்களால என்ன செலவு

பண்ணிட முடியும்?

இன்னொரு மூணு லட்சத்துக்கோ, நாலு லட்சத்துக்கோ செலவு வைக்காம என் கல்யாணம் நடந்துடுமா? கிராப்பட்டியில் இருக்கிற வீட்டை வித்துட்டா நீங்க என்ன பண்ணுவீங்க? உங்களுக்கும், அம்மாவுக்கும் சாப்பிடறதுக்கு மாசம் ஒரு ஐயாயிரமாவது வேணாம்? இங்க வீட்டு வாடகையே ஆயிரம். அது என்னிக்கு ஏறும்னு தெரியலை. உங்க சம்பளம் போதுமா? என் கல்யாணத்துக்கு அப்புறம் நீங்க என்ன பண்ணுவீங்க? ஜாதகம் சரியில்லைன்னு பார்க்கவங்க எல்லாம் சொல்றாங்க. திடீர்னு சரியாய்டிச்சின்னு ஜோசியர் சொல்லிட்டாரா? சரி, அப்படியே ஜாதகம் சரியானதாகவே இருக்கட்டும். இவங்க என்ன கோவில்ல வச்சிக் கல்யாணம் பண்ணுறதுக்கு ஒத்துப்பாங்களா? பொண்ணைப் பார்க்காமலேயே சரின்னு சொல்லிடுவாங்களா? அவங்க பொண்ணைப் பார்க்க வருவாங்களா... மாட்டாங்களா? என் ஜாதக தோசத்துக்கும் சேர்ந்து உங்ககிட்டே வசூல் பண்ணலாம்னு நெனைச்சா... அப்ப நீங்க என்ன பண்ணுவீங்க?"

"உனக்கு என்ன தெரியும்னு இப்படில்லாம் பேசறே? நான் நாயா அலையறேனே! அது ஒனக்குக் கண்ணுல படலையா?"

அப்பா நாயாக அலைகிறாராம். நல்ல நகைச்சுவை. அப்பாவுக்கு சுயநலம்தான் முக்கியம். சாப்பாடு என்று சமைத்துவிட்டால் மற்றவர்களுக்கு இருக்கிறதோ இல்லையோ, அவருக்கு முதலில் போட்டாக வேண்டும். எங்காவது போக ரெயிலிலோ, பஸ்ஸிலோ ஏறினால் உட்காருவதற்கு ஒரே ஒரு இடம்தான் இருக்கிறது என்றால் அந்த இடத்தை அவருக்குக் கொடுத்தாக வேண்டும்.

மற்றவர்கள் ஜுரத்தில் தவித்தாலும் சரி. கால் வலியால் செத்துக்கொண்டு இருந்தாலும் சரி. அவருடைய தேவைகள் எல்லாமே நிறைவேற்றப்பட வேண்டும். அவருக்கு அவர்தான் முக்கியம். மற்றவர்கள் எல்லாம் தூசு. ஒருவனைப் பிடித்துவிட்டதென்றால், அவன் கயவன் என்றாலும் அவரைப் பொருத்தவரைக்கும் ஓங்கி உலகளந்த உத்தமன். யார் என்ன சொன்னாலும் சரி, அவருக்கு அதெல்லாம் ஒரு பொருட்டே இல்லை.



அவருக்கு ஒருவனைப் பிடிக்கவில்லை என்றால், அவன் எவ்வளவுதான் உத்தமசிகாமணியாக இருந்தாலும் அவரைப் பொறுத்தவரைக்கும் அயோக்கியன், துரோகி, நயவஞ்சகன். இப்படிப்பட்ட குருட்டுத்தனமான அகங்காரத்தால் ஏற்பட்ட கருத்துக்களைக் கொண்ட சுயநலவாதியான அப்பா எனக்காக நாயாய் அலைகிறாராம்!

எனக்கு சிரிப்புதான் வந்தது.

"நீங்க நாயா அலைய வேண்டாம்ப்பா. நான் கல்யாணமே பண்ணிக்கலை. போதுமா...?"


"என் முதுகுலேயே கடைசி வரைக்கும் சவாரி பண்ணுறேன்னு சொல்றியா? என்ன ஜாதிடி அவன்?"

"தெரியாது."

"தெரியாதா? அவன் ஜாதி– குலம் கோத்திரம் என்னன்னு எதுவும் தெரிஞ்சிக்காம காதலா? சாக்கடையில பொறந்தவனா இருந்தா என்னடி பண்ணுவே? நாத்தம் அடிச்சா அடிக்கட்டும்னு கட்டிப் புடிச்சிப்பியா? கர்ண மகாராஜா ஒரு நாட்டுக்கே ராஜா. இருந்தாலும் அவனுக்கு மரியாதை இல்லை. ஏன்னா, அவன் தேரோட்டியோட மகன்னுதான் மத்தவங்களுக்குத் தெரியும். 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே'ன்னு வள்ளுவர் சொல்லிட்டு போயிருக்காரே! அது என்ன தப்பா? நாங்க எல்லாம் முட்டாளா? ஜாதி என்னன்னு கூடத் தெரியாத ஒரு பையனை நீ கல்யாணம் பண்ணிக்கறதை என்னால ஒத்துக்க முடியாது. அப்படி என்னை மீறிப் பண்ணிக்கிட்டே... ச்சீ, த்தூன்னு ஆவே! நல்லபடியா வாழமாட்டே. எங்கால்லதான் வந்து விழுவே."

எப்பேர்ப்பட்ட ஆசீர்வாதம்?

ஒரு தகப்பன் தனக்குப் பிறந்த மகளைப் பார்த்துச் சொல்லும்





சொற்கள். வெண்ணெய், வெல்லம் தடவி எவ்வளவு இனிப்பாய் என் மேல் இறங்குகிறது என்று நினைத்துக்கொண்டேன். வெறுப்பாய் இருந்தது, விரக்தியாய் தெரிந்தது.

"நான்தான் சொன்னேனே... கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லேன்னு! என்னை விட்டுடுங்க. எனக்குக் குடுத்த ஆசீர்வாதம் எல்லாம் போதும்" என்றேன்.

சாப்பிடவில்லை. வயிற்றில் கோபம் நிறைந்திருந்தது. ஆற்றாமை கலந்திருந்தது. இவ்வளவு போராட்டங்களோடு என் வாழ்க்கையை இனிமேல் நான் தொடர வேண்டுமா என்று எனக்குத் தோன்றியது. செத்துவிட்டால் நன்றாக இருக்கும் என்று பட்டது.

இரவின் தனிமையில், குழம்பிய மனநிலையில் எதை யோசித்தாலும் கறுப்பாகவே யோசிக்கத் தோன்றும். நாளைக்குக் காலையில் முடிவெடுக்கலாம் என்று நான் ஒருக்களித்துப் படுத்துக்கொண்டேன். கூடத்தில் தவணை முறையில் நான் வாங்கி வைத்திருந்த கலர் டி.வி.யில் என்னவோ காதல் படம். அப்பா அதை கைகொட்டி ரசித்துக்கொண்டிருந்தார். காதலுக்கு அவர் ஆதரவை முழுவதும் தெரிவித்து, காதலை எதிர்க்கும் பெரியவர்களை இளக்காரமாகத் திட்டினார். யார் கவனிக்கிறார்கள், யார் கவனிக்கவில்லை என்ற உணர்வு கொஞ்சம்கூட இன்றி படத்தில் அவர் ஒன்றிப் போயிருந்தார்.

சின்ன வயதில் ஓடிப்போய் சாமியாரான் அண்ணனை நினைத்துக்கொண்டேன். அவன் பொறுப்பு இல்லாதவன்தான். அப்பாவுக்குப் பிறகு குடும்பத்தைத் தாங்க வேண்டியவன், இப்படி குடும்பத்தைவிட்டு விலகிப் போவது எந்த வகையில் பொறுப்புள்ள தன்மையைக் காட்டும் என்று நான் அவனைப் பற்றி யோசித்திருக்கிறேன். ஆனால், அவன் வயதிற்கு அவன் செய்தது சரி என்றுதான் தோன்றியது. அந்த வயதில் பொறுப்பைப் பற்றி அவன் எப்படி யோசித்திருக்க முடியும்?

என் கண்களில் வெகு தன்னிச்சையாக நீர் திரண்டது. என் அது சூடாக இறங்கியது. தலையணையை நனைத்தது.

முதுகு வருடப்படுவது தெரிந்தது. திடுக்கிட்டுத் திரும்பினேன். கண்களில் நீருடன் அம்மா.

"என்னம்மா?" என்றேன், பதறிப்போய். என் கண்ணீரை அடக்கிக்கொண்டேன்.

அம்மா பதில் சொல்லாமல் சற்று நேரம் மவுனமாக அழுதாள். அவள் உடல் குலுங்கியது. என் தலையைப் பிடித்து மறுபடி வருடினாள். என்னை மார்பில் சாய்த்துக்கொண்டாள். அவள் புடவையில் இருந்து சாம்பார்ப் பொடியின் மணமும், எண்ணெய்க் காறலின் நெடியும் கலந்து வீசியது.

அம்மா இந்த வீட்டின் சம்பளம் வாங்காத சமையல்காரி. சமையல்காரிகளுக்கு நேரா நேரத்திற்கு காப்பி கொடுக்க வேண்டும். சாப்பாடு போட வேண்டும். ஒரு பண்டிகை என்றால், நல்ல நாள் என்றால் புடவை வாங்கிக் கொடுக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக மாதாமாதம் அவள் கேட்கும் சம்பளத்தைத் தரவேண்டும்.

அம்மாவுக்கு இந்த வீட்டில் ஒரு சமையல்காரிக்கு உண்டான வசதிகள்கூட இல்லை. ஏறக்குறைய அடிமை. அப்பாவின் அடிமை. அவளுக்குக் காப்பி இல்லையென்றாலும் சொல்லமாட்டாள். சாப்பாடு இல்லையென்றாலும் தண்ணீர் குடித்து திருப்தி அடைவாள். புடவை கிழிந்தாலும் வெளியில் காட்டிக்கொள்ளாமல், ஊசி- நூலால் கிழிசலைத் தைத்து மறைத்துக்கொண்டு- புடவையைக் கட்டிக்கொள்வாள். அம்மா தலைவிதி என்று தன்னை சமாதானப்படுத்திவிட்டாள். இப்போது அவளுடைய அழுகை என்னைச் சுட்டது.

"என்னம்மா?" என்றேன்.

"உமா. நீ யாரையோ 'லவ்' பண்ணுறதாச் சொன்னியே! அவனையே கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போயிடும்மா. என்னவோ ஜாதி! அது கிடந்து சீரழிஞ்சி போவுது. பையன் நல்லவன்தானே?"

"ரொம்ப..." என்றேன், அவள் கன்னம் தடவி.

"என்ன பேரு மாப்பிள்ளைக்கு?"



எனக்கு ஆனந்தமாக இருந்தது. இன்னும் அம்மா பார்க்கவேயில்லை. இருந்தாலும் 'மாப்பிள்ளை' அந்தஸ்து கொடுத்துவிட்டாள். அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டேன். கன்னம் வருடி முத்தமிட்டேன். அவளுடைய கண்ணீர் எனக்கு இனிக்கும் அமிர்தமாக இருந்தது.

"பிரகாஷ்மா" என்றேன்.

"பேர் ரொம்ப நல்லா இருக்கு, மாப்பிள்ளை நல்ல அழகாம்மா?"

"ஏன் நீ கட்டிக்கலாம்னு பாக்கறியா?"

"என்ன பேச்சுடி இது... கழுதை?" என்று கன்னத்தை செல்லமாக நிமிண்டினாள்.

"ஒன் மனசு நெறைஞ்ச புருஷன், எங்க கண்ணுலயும் நெறையணும் இல்லையா? அதுக்காகக் கேட்டேன்."

"நெறைவாரும்மா."

"யோசிக்காதே. எங்கேயாவது கோவில்ல போய்த் தாலியைக் கட்டிக்கோ. இந்த வீட்ல உங்க அப்பா பேச்சைக் கேக்கறதுக்கு நான் ஒருத்தி போதும்."

"தாங்க்ஸ்மா."

"எதுக்குடி?"

"நீயாவது ஆசிர்வாதம் பண்ணி அனுப்புறியே!"

"பொண்ணுக்குத்தாண்டி பொண்ணோட மனசு தெரியும். அதனாலதான் மனசார சொல்றேன். அப்பா பேச்சைக் கேக்கறேன்னு இருந்தா, காலம் முழுக்க நீ கன்னி கழியாமயே இருந்துட வேண்டியதுதான். நீ பெரியவளா ஆகலையேன்னு நான் எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பேன்னு ஒனக்குத் தெரியும். ஏன்னா, நீ சந்தோஷமா வாழணும்னு நெனைச்சதாலதான் அப்படி அப்ப கவலைப்பட்டேன்.

நீ கல்யாணம் பண்ணிக்காம இங்கேயே இருந்தா, உனக்கு மட்டும் கல்யாண சுகம் கெடைக்கலையேன்னு எம் மனசு என்னைக் குத்திக் கொன்னுடும். அந்தக் கவலையிலேயே நான் செத்துப் போயிடுவேன். நான் சுகப்பட்டதாலதானே நீ

பொறந்தே! நான் மட்டும் சுகப்பட்டுட்டு, நீ சுகப்படாமலேயே இருந்தா எம் மனசு என்ன பாடுபடும்னு சொல்லு. ராஜாத்தி... செல்லம். நீ அந்த பிரகாஷையே கல்யாணம் பண்ணிக்கோ."

அன்று இரவு நான் நிறைய கனவுகள் கண்டேன். எல்லாமே கல்யாணக் கனவுகள். என்னை வெட்கப்பட வைத்த கனவுகள்.

அன்றைக்கு நான்காம் நாள் ஒரு கோவிலில், தெய்வ சந்நிதானத்திற்கு முன்னிலையில், சும்மா ஒரு கொத்து நண்பர்கள் சாட்சியாக நான் பிரகாஷைக் கல்யாணம் செய்துகொண்டேன்.

தாலி கட்டும்போது அம்மாவை நினைத்து அழுதேன்!

## 8

பெரும்பாலும் பெண்ணுக்கு வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில்– பருவக்காலத்தில் சில தப்புகள் நிகழ்ந்திருக்கலாம். ஏதாவது ஒரு பையன் இடறி இருக்கலாம். பள்ளிக்கூடத்தில் 'பாத்ரூம்' போகும் வழியில் திடீரென்று கட்டிப்பிடித்து முத்தமிட்டிருக்கலாம். பக்கம் பக்கமாக கவிதை எழுதிக் கொடுத்திருக்கலாம்.'ஐ லவ் யூ' சொல்லி இருக்கலாம்.

என் சிநேகிதி ஒருத்தி எட்டாவது படித்துக்கொண்டு இருக்கும்போது அவளை ஒரு பையன், அவள் ஏறும் பஸ்ஸிலேயே ஏறி வீடு வரை கொண்டுவந்து விட்டு, மறுபடி காலையில் அவள் ஏறும் பஸ்ஸிலேயே ஏறி பள்ளி வரை கொண்டு வந்து விட்டுக் கடைசில 'ஐ லவ் யூ' சொல்லிவிட்டான். இவளும் அவன் பஸ்ஸில் பின்னால் வந்த ஒரே காரணத்திற்காக 'ஐ லவ் யூ' சொல்லிவிட்டாள்... எட்டாவது படிக்கும்போது. அப்புறம் இரண்டு பேரும் பீச்சுக்கும், சினிமாவுக்கும் போய் இருக்கிறார்கள்.

அந்தப் பையன் ஒரு நாள் ஏதோ ஒரு சந்துமுனை ஓட்டலில் 'அறை' எடுத்து இவளை அழைத்துப் போய், அந்தக் கடைசித்



தருணத்தில் இவள் பயந்துபோய் ஓடி வந்துவிட்டாள். காதல் அவ்வளவுதான்! காலியாகிவிட்டது. என்னிடம் கேட்டாள். 'கல்யாணம் ஆகப்போகிறது. வீட்டில் மாப்பிள்ளை பார்த்துவிட்டார்கள். மாப்பிள்ளைக்கு குமாஸ்தா வேலை. கல்யாணத்தின்போது என்னுடைய எட்டாம் வகுப்புக் காதலைச் சொல்லிவிடவா?' என்று.

நான் சொன்னேன்... 'சொல்லாதே'. என் வாழ்க்கையின் உன்னதமான உபதேசம் அதுதான் என்று நினைக்கிறேன், ஏன்? ஏனென்றால், ஆண்கள் எப்போதும் ஆண்கள். ஆதிக்காரர்கள். பெண்டாட்டி என்று வந்துவிட்டால் அவள் மனம், உடல் எல்லாம் தனக்குச் சொந்தம் என்று உரிமை கொண்டாடுபவர்கள். அந்த மனைவியின் உடல் மேல் இன்னொரு ஆண் ஏற்கெனவே கண் வைத்தான் என்ற செய்தியை அவர்களால் தாங்கவே முடியாது. முதலிரவில் மவுனமாக கேட்டுக்கொள்வார்கள். அப்போது வேறு செயல்களில் தீவிரமாக இருப்பார்கள். அப்புறம் மல்லாந்து படுத்துக்கொண்டு, தனக்கு மனைவியாக வந்தவள் தன்னிடம் சொன்னதை எல்லாம் அசைபோட்டு பொருமு ஆரம்பிப்பார்கள்.

'எங்கே பார்த்தான்? எங்கே தொட்டான்? என்ன பேசினான்? நீ என்ன சொன்னாய்? உனக்கும் அவன் மேல் பிரியம் இருந்ததுதானே? நீ ஒரு துரோகி. மனதால் கெட்டுப் போனவள். உடலால் கெட்டிருக்கமாட்டாய் என்று என்ன நிச்சயம்?' என்பான். அப்புறம் வாழ்க்கை நரகம்.

அதனால்தான் என் சிநேகிதிக்கு அப்படி 'அட்வைஸ்' பண்ணினேன். கன்றுக் காதலையெல்லாம் ஒரு பெண் கணக்கில் சேர்த்துக்கொண்டால், அவளுடைய நிம்மதிக்குத்தான் ஆபத்து. அப்படிப் பார்த்தால் பல ஆண்கள் அவர்களுடைய பருவ காலத்தில் தெருநாய்களைப் போல சுற்றி இருப்பார்கள். இந்தப் பெண் படியவில்லையா? அடுத்த பெண். அடுத்த பெண் படிந்துவிட்டாளா? சரி... போதும். இதற்குமேல் இவளிடம் என்ன இருக்கிறது! வேறொரு பெண் என்று பட்டாம்பூச்சிக்

கணக்காய் அவர்கள் தாவிக்கொண்டே இருப்பார்கள்.

அவன் மனதளவில் கெடவில்லையா? உடலளவில் கெடவில்லையா? கெட்டுப்போவது என்பதற்கு அகராதியில் ஆணுக்கு ஒரு அர்த்தமும், பெண்ணுக்கு ஒரு அர்த்தமுமாய் பிரித்துப் போட்டிருக்கிறதா என்ன? ஆண்கள் தங்கள் கல்யாணத்திற்கு முன்- தாங்கள் எப்படியெல்லாம் கொட்டமடித்தார்கள் என்பதை பீற்றிக்கொள்வார்கள். பெண் அதையெல்லாம் உண்மை என்று அங்கீகரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

பெண் அதை கசப்பு மருந்து குடிக்கிற மாதிரி குடித்து ஜீரணம் பள்ளிக்கொள்வாள். வெளியே காட்டிக்கொள்ள மாட்டாள். கணவனிடம் சண்டை பிடிக்கமாட்டாள். முள்ளில் சேலை மாட்டிய பின் எப்படி இருந்தாலும் சேதம் முள்ளுக்கு இல்லையே. சேலைக்குத்தானே? பெண், சேலை போல. இந்த சமுதாய அமைப்பு அப்படி. இது ஆண்களின் அரசாங்கம். பெண் என்பவள் இங்கே தன் வாழ்நாள் முழுக்க இப்படிப்பட்ட ஒரு அடிமைத்தனத்தை மேற்கொண்டே ஆகவேண்டும். எதற்காக இத்தனையும் சொல்கிறேன் என்றால் பெண்ணுக்கு என்று இருக்கும் சில பழைய ரகசியங்கள், அவள் வாழ்க்கை முடியும் வரை ரகசியமாகவே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் பிரகாஷிடம்கூட- டாக்டர் என்னிடம் நடந்துகொண்ட முறை பற்றிச் சொல்லவில்லை. அது என் மேல் ஒரு கரும்புள்ளியைக் குத்திவிடக்கூடும்.

திடீரென்று இப்படி நான் சொல்லுவதன் காரணம் விளங்காமல் இருக்கலாம். ஆனால், போகப் போக உங்களுக்குத் தெரியும். வருகிறேன். பின்னால் வருகிறேன்.

கோவிலில் மாலை மாற்றிக்கொண்டவன் நண்பர்கள் 'வாழ்த்துகள்' என்றார்கள். ரஞ்சனி என்னைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டாள். பிரகாஷிற்கு கைகொடுத்து குலுக்கினாள். பிரகாஷின் நண்பர்கள்கூட என்னுடன் கை குலுக்கக் கையை நீட்டினார்கள். நான் கரம் குவித்தேன். கை நீட்டவில்லை.



எனக்குத் தெரியும். பிரகாஷிற்கு என் செய்கை உள்ளூர சந்தோஷமாகத்தான் இருக்கும்.

அங்கேயே ஒரு ஓட்டலில் சாப்பிட்டோம். நேராக எங்கள் வீட்டுக்கு ஆட்டோவில் வந்து இறங்கினோம். அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. அப்பா வீட்டில்தான் இருந்தார்.

மாலையும், கழுத்துமாக நாங்கள் நுழைந்ததை மற்ற 'போர்ஷன்'காரர்கள் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் கண்கள் வியப்பில் பெரிதாகின. நான் அவர்களைக் கவனியாது- என் வீட்டிற்குள் பிரகாஷுடன் நுழைந்தேன். அப்பா நிமிர்ந்து எங்களைப் பார்த்தார். கையில் பிடித்திருந்த செய்தித்தாளை மடக்கினார். மடக்கினார். மடக்கினார். எரிமலையின் குழம்பு அவர் நெஞ்சில் கொதித்துக்கொண்டு இருந்ததை உணர முடிந்தது.

"ஆசீர்வாதம் பண்ணுங்கப்பா" என்றேன்.

அம்மா, சமையல் கட்டில் இருந்து பிரகாஷைப் பார்த்தாள். என்னைப் பார்த்தாள். பிரகாஷ் அவள் கண்களில் நிறைந்துவிட்டான் என்பதை அம்மாவின் முகத்தை ஜாடையாகப் பார்த்தபோதே எனக்குத் தெரிந்துவிட்டது. கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தாள்.

அப்பாதான் கத்தினார்.

"போடீ வெளியே. இனிமே இந்த வீட்ல ஒனக்கு எடம் கெடையாது. இவன் எத்தனை நாளைக்கு உன்னை வெச்சிக் காப்பாத்துவான்னு நான் பார்க்கத்தான் போறேன். ஒருநாள் இல்லாட்டா ஒருநாள் நீ என் கால்ல வந்து விழத்தான் போறே- இவன் இல்லாம. நான் ஒன்னை எட்டி உதைக்கத்தான் போறேன்."

அப்பாவின் அகங்காரம் அவர் சாவில்தான் அழியும். நான் எவ்வளவு சொல்லியும் உணராத அப்பா, படத்தில் மட்டும் காதலர்களுக்காகப் பரியும் அப்பா, உண்மையில் இவ்வளவு வெறியாட்டம் போட என்ன அவசியம்?

அம்மா அவசர அவசரமாக 'பாலும் பழமும்' கொண்டு

வந்து கொடுத்தாள். அப்பா அந்த தம்ளரைப் பிடுங்கி விசிறி அடித்தார். அம்மாவைப் பிடித்துத் தள்ளினார். அம்மாவின் தலை, சுவரில் மோதியது.

"ச்சீ... த்தூ" என்றேன் நான்– அப்பாவைப் பார்த்து. "வாங்க பிரகாஷ், போகலாம்."

"இருபத்தி ரெண்டு வருஷமாகப் பார்த்துப் பார்த்து வளர்த்த என்னைவிட நேத்து வந்தவன் ஒனக்குப் பெரிசாயிட்டான் இல்லே? அது எப்படிடீ உங்களுக்கெல்லாம் எவனோ ஒரு ஊர் பேர் தெரியாத, முன்ன பின்ன புரியாத ஒரு ஆம்பளைகிட்ட இவ்வளவு காதல் வருது? அக்கா, அம்மா, அப்பா, அண்ணன் எல்லாருமே எப்படி உனக்கு தூசாப் போயிட்டாங்க? அப்பா மேலயே காறித் துப்புற அளவுக்கு வந்துட்டியா நீ? போ... போ... நாசமாப் போவே நீ... போ."

ஆற்றாமையிலும், இயலாமையிலும் இன்ன வார்த்தைகளைத்தான் உதிர்ப்பது என்ற தராதரமே இல்லாமல் அப்பா என்னென்னவோ பேசினார்.

தாங்கவில்லை. வெளியே வந்துட்டோம்.

"உங்க வீட்லயும் இப்படித்தான் இருக்குமா பிரகாஷ்?" என்று கேட்டேன்.

"சுகுணாவுக்குகூட இந்தக் கல்யாணத்துல இஷ்டம் இல்ல. அவளோட செத்துப்போன புருஷன் பக்கத்துல ஏதோ ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு சொன்னாங்க. 'எனக்குக் கல்யாணம் பண்ணணும். என் வாழ்க்கை 'செட்டில்' ஆகணும்'னு எல்லாம் நேத்து வரைக்கும் பேசினதே இல்லை. ஆனா, நான் காதலிக்கறேன்னு சொன்னவுடனே இப்படியொரு குண்டைத் தூக்கிப் போட்டாங்க. அதான் சொன்னேனே... ஏற்கனவே. கல்யாணம்னா அது உமாகூடத்தான்னு சொன்னேன். 'அப்படின்னா நான் வரலை... அந்தக் கல்யாணத்துக்கு'ன்னு பதில் சொன்னாங்க. அதனால் என்ன இப்போ? சீப்பு இல்லன்னா கல்யாணம் நின்னுடுமா? இல்ல நின்னுடுச்சா? பாக்கத்தானே போறே? மொதல்ல கொஞ்ச நாளைக்கு உர்



உர்னு இருப்பாங்க. 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கோ."

"சரி" என்றேன்.

பிரகாஷின் வீட்டுக்குள் நுழைந்தோம். அவர் அக்கா வாசலிலேயே காத்திருந்தாள். வயது நாற்பது இருக்கலாம். அவள்தான் மூத்த பெண். கல்யாணம் பண்ணிக் கொடுத்ததே ரொம்ப 'லேட்'டாகத்தான். அதனால் இனிமேல் அவளுக்கு இரண்டாவது கல்யாணம் என்பது கொஞ்சம் சிரமம்.

'அக்காவுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணிடலாமே?' என்று கேட்க எண்ணி இருந்தேன். கல்யாணத்திற்கு முன்னால் அந்த விஷயத்தில் தலையிடுவது அவ்வளவு நன்றாக இருக்காது என்று சொல்லவில்லை. இப்போது சொல்லத் தோன்றவில்லை.

கறுப்பாக இருந்தாள். அகல நெற்றி. தலை முடி உதிர்ந்துபோய் அங்கங்கே வழுக்கையாய் மண்டை தெரிந்தது. எண்ணெய் போடாமல், தலையை ஷாம்பூவால் அலசி வாரிவிட்டுக் கொண்டால் அங்கங்கே தெரியும் வழுக்கையை மறைத்துவிடலாம். இப்போது வேண்டாம். அப்புறம் சொல்லிக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டேன்.

"வாடா வா" என்று சுகுணா அக்கா அழைத்தாள். "சுகுணாக்கா" என்று பிரகாஷ் விளித்தது ரொம்பவும் பாந்தமாக இருந்தது. நானும் அப்படிக் கூப்பிடுவதில் சுகுணாவிற்கு எந்த விதத்திலும் வருத்தம் இருக்காது என்று தோன்றியது.

"ஆசீர்வாதம் பண்ணுக்கா" என்று பிரகாஷ் அவள் கால்களில் விழுந்தான். "கால்ல விழு உமா" என்றான். நானும் பிரகாஷின் பக்கத்தில் மண்டியிட்டேன். பிரகாஷ் எனக்குக் கணவனான பின் 'அவர்... இவர்' என்று குறிப்பிட்டால் அனாவசியமாக நரை பூசிவிட்ட மாதிரி இருக்கிறது. பிரகாஷின் கையில் நானே வலிய ஒரு கைத்தடியைக் கொடுத்தவிட்ட மாதிரி தோன்றுகிறது. அதனால் அவர், இவர் என்று சொல்லத் தயாராய் இல்லை. சுகுணாவின் கால் நகங்கள் சீரின்றி வளர்ந்திருந்தன. நகங்களில் அழுக்கு சேர்ந்திருந்தது. அதை

நேர்த்தியாய் வைத்துக்கொள்ளக்கூடாதா என்ன?

"உமா... எனக்கு அக்காதான் எல்லாமே. என் நல்லது கெட்டது எல்லாமே அவளைப் பொறுத்துத்தான் இருக்கு. நான் சுகுணாக்காவை மதிக்கிறேன். நீயும் மரியாதை கொடு" என்றான், பிரகாஷ் எழுந்துகொண்டே.

அது கொஞ்சம் நாடகத்தனமாக இருந்தது. சுகுணாவைப் பற்றி என்னிடம் பேசும்போதெல்லாம் பிரகாஷ் இவ்வளவு மரியாதை வைத்திருப்பதாக எல்லாம் கூறியதே இல்லை. ஆனால், அவளுக்கு முன்னால் பேசினது எனக்குக் கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது. எப்படி இருந்தாலும் நான் மரியாதை கொடுக்கத்தான் போகிறேன். ஒரு சக மனுஷி. அதிலும் வாழ்க்கையில் சுகப்படாதவள். அவளை நான் மதிக்காமல் எப்படி இருக்க முடியும்?

"ஓ யெஸ். சுகுணாக்கா இனிமே உங்களுக்கு மட்டும் அக்கா இல்ல. எனக்கும் அக்காதான்" என்றேன்.

பிரகாஷின் வீடு அப்படியொன்றும் பங்களா இல்லை. வேளச்சேரி என்பதால் தனி வீடாய் வாடகைக்குக் கிடைத்திருக்கிறது. ரெண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபாய் வாடகையாம். அதேவீடு திருவல்லிக்கேணியில் என்றால் நாலாயிரத்து ஐநூறு வரை கேட்பார்கள். வீட்டில் வேலைக்காரி இல்லை. அது பரவாயில்லை. வீட்டுக்குப் பின்னால் கிணறு இருந்தது. கிணற்றடியில் பாசி, காலை வழுக்கியது. 'பாத்ரூம் வெண்டிலேஷன்' ஜன்னலை ஒரு அட்டை மூடி இருந்தது. இருட்டு, ஈரம். ஒரு விதமான விரும்பத்தகாத வாசம் அந்த அறையில் சுற்றிக்கொண்டிருந்தது. முதல் வேலையாய் அந்த அட்டையைக் கழற்றி எறிந்தேன். வெயில்- காற்றுடன் பாத்ரூமில் வந்து கொட்டியது. தரையெல்லாம் வழுக்கியது. பாதி சுவரில் சீயக்காய் கறை. சோற்றுப் பருக்கை. எப்போதோ எறிந்த தக்காளி தோல்.

கடைக்குப் போய் பிளீச்சிங் பவுடரை வாங்கிவந்து தேய்த்து பாத்ரூமைச் சுத்தம் பண்ணினேன். கழுவி விட்டபோது, அழுக்கு திரண்டு சாக்கடையில் விழுந்து குமட்டியது. இவ்வளவு அழுக்கிலா இத்தனை நாளும் பிரகாஷும், சுகுணாவும் புழங்கிக்கொண்டு இருந்தார்கள்! வீட்டில் அங்கங்கே ஒட்டடை. சமையலறையில் பழைய தகர டப்பாக்களில் உளுந்தும், மிளகாயும்.சமையல் மேடையில் கரப்பான் உலா வந்துகொண்டிருந்தது. சுவிட்ச் போர்டில் எண்ணெய் பிசுபிசுப்பு. சுகுணாக்கா ரொம்ப விட்டேற்றியான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு இருக்கிறாள் என்று தோன்றியது.



'நோ பார்மாலிட்டீஸ்'. எப்படியும் ஆபீசுக்கு லீவு. பிரகாஷ் எங்கேயோ வெளியில் போயிருந்தான். நண்பர்களைப் பார்க்கப் போயிருக்கலாம். ராத்திரி சாப்பாடு ஓட்டலில் என்று சொல்லி இருந்தான். அதனால் நான் வீட்டை சுத்தம் செய்யும் வேலையை எடுத்துக்கொண்டேன்.

துப்புரவாக பெருக்கியதிலேயே வீடு பளிச் என்று ஆகிவிட்டது. ஒவ்வொரு ஆணியிலும் தொங்கிக்கொண்டிருந்த பழைய காலண்டர்களை எல்லாம் எடுத்துப் போட்டேன். மூலைக்கு மூலை வீடு கட்டிக்கொண்டிருந்த சிலந்திகளை வேறு வீடு பார்த்துக் கொள்ளச் சொல்லி விரட்டிவிட்டேன். சாமி அறையில் நீர் தெளித்துக் கோலம் போட்டேன். அகலில் எண்ணெய் விட்டு விளக்கேற்றினேன். கற்பூரத்தட்டை புளி போட்டுத் தேய்த்துக் கழுவி பிரகாசமாக்கினேன். பிளாஸ்டிக் டப்பியில் கற்பூரம் இருந்தது. கடையில் இருந்து வாங்கி வந்த சாம்பிராணிக் கூம்பு ஒன்றை ஏற்றி, ஒரு ஊதுவத்தியைக் கொளுத்தி 'ஸ்டாண்டில்' பொருத்தினேன். வீடு மணக்கத் தொடங்கிவிட்டது. படுக்கையறை ஒன்றுதான் இருந்தது. கட்டிலில் மெத்தை ஒரு பக்கம். தலையணை இன்னொரு பக்கம். விரிப்புகள் இரண்டும் அழுக்கேறிக் கிடந்தன. சேற்றிலே விழுந்து புரளும் பன்றிகள் ஞாபகம் வந்தது எனக்கு. ஏன் இந்த வீட்டின் எல்லா மூலையிலும் அழுக்கு மண்டிக் கிடக்கிறது?

பிரகாஷ் ஆண் பிள்ளை. வீட்டில் தங்குகிறதே இல்லையோ என்னவோ? அதனால் அவன் கவனித்திருக்க

மாட்டான். சுகுணாக்கா இவற்றையெல்லாம் பார்த்து சீர் செய்திருக்கக்கூடாதா? அவளும்தானே வாழ்கிறாள். 'பெட்ஷீட்' இரண்டையும் கொண்டுபோய் சலவைக்குக் கொடுத்தேன். தலையணை உறைகளை எடுத்து சலவை சோடா பவுடருக்குள் முக்கி எடுத்துத் தோய்த்துக் காயப் போட்டேன்.

புது 'பெட்ஷீட்'கள் இரண்டு வாங்கி வந்தேன். டைனிங் டேபிளில் நாற்காலிகளில் ஒன்றின் கால் உடைந்து இருந்தது. கடையில் இருந்து வரும் வழியில் ஒரு தச்சன் தென்பட்டான். அவனை அழைத்து வந்து அதை சீர் செய்தேன். அவன் கூடவே ஒரு 'பாலீஷ்' பாட்டிலில் வாங்கி– டைனிங் டேபிளுக்கும், நாற்காலிகளுக்கும் பாலீஷ் போட்டுவிட்டுப் போனான். நான் டேபிள் மேட்கள் நான்கை அந்த மேசை மேல் போட்டு, எனக்கு அன்பளிப்பாக வந்திருந்த ஒரு பூச்சாடியை அதன் மீது வைத்தேன்.

வீட்டை ஓரளவு பார்க்கிற நிலையில் வைத்துவிட்டுக் குளித்து முடிக்கும்போது சாயங்காலம் ஆகிவிட்டது. சுகுணாக்கா காப்பி கேட்டாள். காப்பி மேக்கரைத் தேடினேன். பிரகாஷ் 'எக்ஸிபிஷனில்' வாங்கினானே, அதைக் காணவில்லை. அதற்குள் எங்கே போயிருக்க முடியும்? 'டிகாக்ஷன்' இறக்கி காப்பி போட்டுக் கொடுத்தேன். நானும் அரை தம்ளர் குடித்தேன்.

பிரகாஷ் வந்துவிட்டான். 'பைக்' அவனுடையது இல்லையாம். இரவல் வாங்கி வந்ததாம்.

எனக்கு வருத்தமாக இருந்தது. எதற்கு இரவல் 'பைக்'கில் வரவேண்டும்?

"உன்னை மடக்க" என்றான். அந்த வார்த்தைகள் 'சீப்'பாக இருந்தன. அவன் சிரித்துக்கொண்டுதான் சொன்னான். 'மோட்டார் பைக்'கிற்காக மயங்குகிற பெண்ணா நான்?

இப்போது 'பைக்' இல்லையே. மறுபடியும் விறைத்துக்கொண்டு விடுவேனா?

பிரகாஷ்... ஏன் பிரகாஷ் என்னை இவ்வளவு மட்டமாக



எடை போட்டாய்?

நான் பொறுத்துக்கொண்டேன். காதலில் வெறும் கனவுகள் மட்டும்தான் அங்கம் வகிக்கும். நனவுகள் எல்லாம் கல்யாணத்திற்குப் பின்தான். எல்லா நனவுகளையும் சந்திக்கத் தயாராய் இருந்தேன்.

உள்ளே வந்தவுடன், "வீடு இன்னிக்குத்தான் பளிச்சின்னு இருக்கு உமா" என்றான்.

அந்தப் பாராட்டு, அங்கீகாரம் இரண்டுமே எனக்குப் பிடித்திருந்தன.

"ஆமா. புதுப் பெண்டாட்டி இல்லையா?" என்றாள் சுகுணாக்கா. பூ மாதிரி மலரத் தொடங்கிய என் மனம் சட்டென்று மறுபடி குவிந்துகொண்டது. வீடு அழுக்காக இருந்தது உண்மை. அதைச் சுத்தம் செய்ததால் பளீச் என்று இருப்பது உண்மை. இதைச்சொன்னால் என்ன தப்பு? இதில் புதுப் பெண்டாட்டியாவது, பழைய பெண்டாட்டியாவது? சுகுணா செய்திருந்தாலும் இந்தப் பாராட்டு கிடைத்திருக்கும். நான் எதிர்வார்த்தை பேசாமல் அடக்கிக்கொண்டேன். பிரகாஷும் தன் அக்காவை எதுவும் சொல்லவில்லை.

அன்றைக்கு சாந்தி முகூர்த்தம்.

எங்கள் காதல் ரொம்ப குறுகிய காலத்தில் தழைத்திருந்தது. எங்களுக்குள் ஸ்பரிசம் எல்லாம் இருந்ததில்லை. அதனால் நான் வெகு ஆவலோடு இரவுக்காகக் காத்திருந்தேன். என் தோழிகள் எல்லாம் தங்களுடைய முதல் இரவைப் பற்றி நிறையவே சொல்லி இருக்கிறார்கள். அவர்களுடைய அனுபவங்கள் எனக்குள் நிறைய கிளுகிளுப்பை ஏற்றி இருக்கின்றன. என்னதான் மனம் ஆமையாக ஒடுங்கிக்கொள்ள ஆசைப்பட்டாலும், உடல் தன் தேவையை நினைவுபடுத்திக் கொண்டுதானே இருக்கும்?

படுக்கை அறையில் நுழைந்தேன். 'பெட்ஷீட்'டில் இருந்து புதுத்துணியின் வாசனை வந்துகொண்டு இருந்தது. கட்டிலின் மேல் சில மல்லிகைப் பூக்கள் தூவப்பட்டிருந்தன. பிரகாஷ் கண்களில் வெறியுடன் "வா, உமா" என்றான்.

நான் நெருங்கும்போது "உமா" என்று கதவுக்கு வெளியே இருந்து சுகுணாக்கா அழைத்தாள். பிரகாஷின் முகம் களை இழந்தது. அவன் கண்களில் வெறி அடங்கி, தாங்கொணா கோபம் தெரிந்தது. நான் டாக்டரை நினைத்துக்கொண்டு இருந்தேன். என் மேல் சட்டையை முதலில் அவிழ்த்தவன்.

யார் என்னைத் தொட்டாலும், இல்லை பிரகாஷே என்னை எத்தனை முறை தொட்டாலும் என்னிடம் இருந்து டாக்டரின் நினைவு விலகப் போவதில்லை. பிரகாஷ் என்னைத் தொடப்போகும் தருணத்தை சுகுணா தன் அழைப்பின் மூலம் கொஞ்சம் ஒத்திப்போட்டது எனக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

கதவு திறந்தேன். பால் சொம்பு, இனிப்பு வாங்கிக்கொண்டேன்.

"டேய் பிரகாஷ். ஆசீர்வாதம் வாங்கிக்கலையா? என்று அவளே கேட்டாள். பிரகாஷ், எஜமானனிடம் ஓடிவரும் நாய்போல அறைவிட்டு வெளியே வந்தான். அவள் கால்களில் விழுந்தான். நானும் விழுந்தேன். எழுந்தோம்.

"பெஸ்ட் ஆப் லக்" என்றாள் சுகுணாக்கா– அவனைப் பார்த்து.

"ஆண் குழந்தை பெற்றுக் கொடு" என்றாள், என்னைப் பார்த்து. எனக்கும் குழந்தை பெற்றுக்கொள்ள ரொம்ப ஆசைதான். ஒரு குழந்தையின் மழலை, அதன் தத்தக்கா புத்தக்கா நடை, முதல் பேச்சு, முதல் அழுகை, முதல் சிரிப்பு எல்லாவற்றையும் நான் பக்கத்தில் இருந்து முழுதாக அனுபவிக்க வேண்டும் என்று ஏங்கிக்கொண்டிருந்தேன்.

மறுபடி அறைக்குள் நுழைந்தவுடன்– அவன் கதவை அடைத்துத் தாழ் போட்டான்.

"அக்கா சொன்னா சொல்லிக்கிட்டு இருக்கட்டும் உமா. நாம இன்னும் மூணு, நாலு வருஷத்துக்குக் கொழந்தை பெத்துக்க வேண்டாம். 'ஐ வாண்ட் டு லிவ் எ ஹாப்பி லைப்' " என்றான் பிரகாஷ், முதல் பேச்சாய்.



"சரி" என்றேன். என்னை நெருங்கினான். "உமா" என்றான். அவன் அழைப்பில் அவ்வளவு மோகம்– காமம் கலந்திருந்த்து.

நான் உள்ளூர நடுங்கினேன். அவன் என் தோளில் கை வைத்தான். சிலிர்த்தேன். என்னை அணைத்தான். நான் அவன் மார்பில் முகம் புதைத்தேன்.

அவனது கை என் முதுகை வருடியது. அவசர அவசரமாக முன்புறம் வந்தது. என் ரவிக்கையின் முதல் 'ஹுக்'கை அவன் விடுவித்தபோது, அறைக்கு வெளியில் இருந்து, "பிரகாஷ்" என்ற சுகுணாவின் தீனமான அலறல் கேட்டது.

## 9

சுகுணாக்கா அலங்கோலமாய் கீழே விழுந்திருந்தாள். கை– கால்கள் எல்லாம் உதைத்துக்கொண்டன. வாயில் நுரை தள்ளியது. கண்கள் செருகிக்கொண்டு இருந்தன. எனக்குப் பயமாய் இருந்தது.

பிரகாஷும் கலவரப்பட்டான். வெளியே ஓடி, எங்கிருந்தோ ஓர் ஆட்டோ பிடித்து வந்தான். நானும், பிரகாஷுமாய் சுகுணாக்காவை ஆட்டோவில் ஏற்றி 24 மணிநேர கிளினிக்கிற்குக் கூட்டிப் போனோம்.

"வலிப்பு" என்றார் டாக்டர். "ரொம்ப 'டென்ஷன்' ஆகி இருக்கிறார்கள். அதனால் நரம்பு பாதிப்பாகி இருக்கிறது" என்று சொல்லிவிட்டு மருந்து எழுதித் தந்தார். அன்றைக்கு இரவு முழுக்க சுகுணாவின் அருகிலேயே கழிந்தது. அடுத்த நாள் காலைதான் சுகுணா கண்விழித்தாள். எழுந்துகொண்டாள். வழக்கம்போல் வேலைகள் செய்தாள். நான் அவளைத் தடுத்தேன். சமையல் பொறுப்பில் இருந்து எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டேன். சாந்தி முகூர்த்தநாள் தவறிவிட்டதால் அடுத்த நல்ல நாளில்தான் 'அது' நடக்க வேண்டும் என்றாள்

சுகுணா.

அடுத்தநாள் ஒரு மாதம் கழித்துதான் இருந்தது. பிரகாஷிற்குக் கோபம் வந்தது. எனக்கும் தவிப்பாகத்தான் இருந்தது. இருந்தாலும் என்ன செய்வது? சுகுணாவின் வார்த்தைகளுக்கு மரியாதை கொடுக்க வேண்டும்.

நான் வேலை செய்வது– கஷ்டப்படுவதைப் பார்த்து, பிரகாஷ் என்னிடம் முதல் வாரத்திலேயே வேலையை விட்டுவிடச் சொன்னான். சந்தோஷத்தோடு சம்மதித்தேன். பிரகாஷ் பொறுப்புணர்ந்து அவன் சம்பாதித்துக் கொண்டு வருவதில் குடும்பம் நடத்தச் சொல்லும்போது நான் ஏன் மறுக்கப்போகிறேன்?

ஒரு மாதம் கழிந்தவுடன் அந்த ராத்திரி வந்தது. எனக்கென்னவோ சுகுணாவிற்கு மறுபடியும் 'வலிப்பு' வரும் என்று தோன்றியது. வரவில்லை. அன்றைய இரவு நான் புதியதாய் மலர்ந்துவிட்டேன். பிரகாஷ் 'கண்காட்சி' சமயத்தில் வாங்கிய பொருட்களை எல்லாம் வேறு யார் யாருக்கோ விற்றுவிட்டானாம். எனக்காகத்தான் கண்காட்சிக்கு வந்து பொருட்களை வாங்கினானாம். 'என்னை மடக்க' அது உறுத்தலாக இருந்தாலும், நான் என்னை அவனுக்குப் பரிபூரணமாக சமர்ப்பித்தேன்.

பொங்கிவரும் ஆசையில் ஒவ்வொரு ராத்திரியை ஒவ்வொரு விதமாகக் கொண்டாடினான். விடிந்து எழுந்தால்கூட என் முந்தானைத் தலைப்பைப் பிடித்து இழுத்து மார்பில் சாய்த்துக்கொள்வான். சிணுங்குவேன். 'என்ன இது அசிங்கமாய்?' என்று செல்லமாய்க் கோபிப்பேன்.

"என்ன அசிங்கம் இருக்க முடியும் இதில்?" என்று கேட்டுவிட்டு– என்னை இறுகப் பிடித்து இம்சிக்கும்போது இன்ப வேதனையாய் இருக்கும்.

சுத்தமாய்க் குளித்துவிட்டு,திரியைத் தூண்டி விளக்கேற்றிவிட்டு, ஊதுவத்தி புகை குழலின் நடுவில் கண்களை மூடி, கைகளைக் கூப்பி, மனதை நான் ஒருமுகப்படுத்த நினைக்கையில் பிரகாஷ்



பூனையாய் பின்னால் வந்து என்னைத் தழுவுவான்.

குளித்து முடித்ததால் கேசத்தின் நுனியில் இருந்து சொட்டிய நீர் என் பின் பக்கத்தை நனைத்துக்கொண்டு இருக்கும். அது அவனுடைய தழுவலில் என் உடலில் பட்டு என்னை சிலிர்க்க வைக்கும்.

"என்ன இது, நேரங்காலம் இல்லாம சுத்த காட்டுமிராண்டித்தனமா?" என்று ஒரு தடவை கேட்டுவிட்டேன்.

ஏனென்றால் சுகுணா! அவள் எதிரில் சரசமாடினால், அவளுக்குப் பிடிப்பதில்லை. முகத்தைத் தூக்கிவைத்துக்கொள்வாள். அவளுடைய பழைய நாட்கள் அவளைத் துன்பப்படுத்தினவோ என்னவோ? உம்மென்று இருப்பாள். ஆற்றாமையை வெளிப்படுத்த முடியாமல் என்னைத் திட்டுவாள். நான் சின்னக் குழந்தை இல்லை என்பாள். ஆண் பிள்ளைகளை நாம்தான் அனுசரிக்க வேண்டும் என்பாள். முத்தாய்ப்பாக எவ்வளவோ வரதட்சணையுடன், சீர் செனத்தியுடன் அவள் பக்கத்தில் இருந்து ஒரு பெண் பிரகாஷைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளத் தயாராக இருந்தும், என்னை பிரகாஷ் எவ்வளவோ தியாகங்கள் செய்து கல்யாணம் பண்ணிக்கொண்டதாகச் சொல்லுவாள்.

அம்மா எப்படியோ தகிடுதத்தம் பண்ணி சேர்த்து வைத்திருந்த இருபது பவுன் நகைகளை எனக்குப் போட்டுவிட்டிருந்தாள். நான் சேமித்த பணத்தில் பீரோ வாங்கினேன். கட்டிலை மாற்றி மெத்தைகளை மாற்றினேன். ஹாலுக்கு 'சோபா செட்' வாங்கிப் போட்டேன். கம்பெனி என்னை ராஜினாமா பண்ண வேண்டாம் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தது.

பிரகாஷ் கூறிவிட்டான் என்பதற்காக வேலையைத் தொடர மறுத்தேன். நான் எதிலும் குறை வைக்கவில்லை. சமையலில் குறை இல்லை. கை வேலைகளில் குறை இல்லை. அம்மா வீட்டுக்குப்போய் டேரா போடுவதில்லை. இருந்தாலும் சுகுணாவின் குத்தல் ஓய்வதில்லை. நான் ஏதாவது

சொன்னால் அவளுக்கு வலிப்பு வந்துவிடும். பிரகாஷ் என்னை முறைப்பான். அதனால் அவன் என் மேல் கொண்ட குருட்டு மையலைத் தவிர்க்கக் கொஞ்சம் கடுமையாக நடந்துகொள்ள வேண்டியிருந்தது.

பிரகாஷிற்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. அந்தக் கோபம் போய்விடும் என்று நினைத்தேன். போகவில்லை. பிரகாஷ் அதை மனசுக்குள்ளேயே வைத்துப் பாதுகாத்து வளர்த்திருந்தான். உள்ளுக்குள்ளேயே புகையவிட்டு நெருப்பை அணைக்காது வைத்திருந்தான்.

"நீ நாளையிலே இருந்து வேலைக்குப் போறே" என்றான், ஒருநாள்.

ஷூவிற்கு பாலிஷ் போடுவதை நிறுத்திவிட்டு, நிமிர்ந்து பார்த்தேன். கைக்கு நேராக விரித்திருந்த பேப்பரைத் தழைத்து அவன் கண்கள் கூர்மையாக என்னைத் தாக்கிக்கொண்டிருந்தன.

"வேலைக்கா? எனக்கு வேலையே வேண்டாம்னு சொன்னீங்களே! இருந்த வேலையை விடச் சொன்னீங்களே? மகாராணி மாதிரி நான் வீட்ல இருக்கணும்னு சொன்னீங்ளே! நீங்க சம்பாதிக்கறதுல குடும்பம் நடத்தச் சொன்னீங்களே! மறந்துட்டீங்களா?"

"நீ வேலைக்கு போறப்ப பஸ்சுல எத்தனை பேர் உன்னை உரசி இருப்பானுக. இடுப்பைத் தடவி இருப்பானுங்க? நீ எனக்கு மட்டும்தான்னு நெனைச்சேன். அதனால்தான் வேலையை விடச் சொன்னேன்."

"ஐயோ. பிரகாஷ் உங்களுக்கும் புத்தி அவ்வளவுதானா? நீங்களும் ஒரு ஆணாதிக்கவாதிதானா? தாம்பத்தியம் என்பது வெறும் உடலால் மட்டும் ஏற்படும் உறவு இல்லை பிரகாஷ். மனதாலும் ஏற்படுவது."

"......................"

"இப்போ மட்டும்?" என்று கேட்டேன்... என் ஏமாற்றத்தை விழுங்கிக்கொண்டு.



"அவசியமாப்படுது."

"இப்ப என்னை யாரும் உரசமாட்டாங்களா? தடவமாட்டாங்களா?"

"விவாதம் பண்ணாதே. வேலைக்குப் போறதுக்கு, இந்த விலையைத் தரலாம்னுதான் படுது. டி.வி., பைக், கார், பங்களா எல்லாம் வேணும்னா நீயும் வேலைக்கு போய்த்தான் ஆகணும். அவனவன் வீடு, கார் எல்லாம் தந்து பொண்ணையும் கொடுக்கறான். இங்கே ஒரு சைக்கிளுக்கும் வழியில்ல."

"டிவி, கார், பங்களா எல்லாம் வேணாமே" என்றேன்... மூண்டு எழுந்த கோபத்தை அடக்கிக்கொண்டு.

"எனக்கு வேணும்."

"நாளைக்கே நமக்கு குழந்தை குட்டின்னு ஆனா, அவங்களை யார் கவனிப்பாங்க?"

"உமா... எதுத்துப் பேசாதே. புருஷனை எதுக்கற பொண்டாட்டிக்கு எப்பவும் நல்ல பேர் இல்ல. நமக்கு கொழந்தை, குட்டி எல்லாம் ஆகும்போது பார்த்துக்கலாம். நான் எல்லா ஏற்பாடும் பண்ணிட்டேன். 'ரிஸப்ஷனிஸ்ட்' வேலை. அவங்க கம்ப்யூட்டரும் விக்கறாங்க. உனக்குத்தான் அழகா விக்கத் தெரியுமே. என்ன...?"

"சரி. போறேன்" என்றேன்.

நான் அடிமையாகிக்கொண்டு இருந்தேன். வரதட்சணை கொண்டு வராதவள் என்று இரண்டு பேரும் மாற்றி மாற்றி சொல்லி, என்னில் ஒரு குற்ற உணர்வை வெகு வெற்றிகரமாக வளர்த்திருந்தார்கள். எனக்கு வேறு விடை இருக்கிறதா என்ன? இல்லாவிட்டால் வேறு வழிதான் இருக்கிறதா?

பிரகாஷ் சிரித்தான்.

தோல்வி மனப்பான்மையில் எனக்கு ஆத்திரம் கொப்பளித்துக்கொண்டு வந்தது.

'சிரிக்காதீங்க. பெரிசா சிரிக்க வந்துட்டீங்க. என்னவோ உங்க சிரிப்புலதான் உலகமே அடங்கி இருக்கிற மாதிரி சிரிப்பு. உங்க கர்வத்தைக் காட்டற சிரிப்பு. நான் என்கற அகங்காரத்தைக்

காட்டற சிரிப்பு. எங்க அப்பாவுக்கு இருந்த அதே சிரிப்பு. உங்க உதட்டில் நெருப்பை வச்சிப் பொசுக்கணும்.'

சொல்லவில்லை. நான் நினைத்ததை ஒரு வார்த்தைக்கூட வெளியே சொல்லவில்லை. ஜஸ்ட்... நினைத்துக்கொண்டேன்.

**வே**லையில் சேர்ந்தேன். கம்பெனி பெயர் நன்றாக இருந்தது. அண்ணா சாலையில் அலுவலகம். ஜவஹர்தான் என் 'பாஸ்'. பிரகாஷின் நண்பன். ஆனால் ஜவஹர் ரொம்ப கண்ணியமாகத் தெரிந்தான். அவன் உடுத்துவதில், நடப்பதில், நடந்துகொள்வதில் எல்லாம் ஒரு நளினம் இருந்தது.

வேலையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? எப்படிப் பழக வேண்டும்? என்று எல்லாம் சொல்லிக் கொடுத்தான். வரவேற்பு பெண்ணின் சிரிப்பில்தான் வியாபாரமே பெருகும் என்றான். 'ஜோக்'குகள் சொன்னான். இயல்பாக நடந்துகொண்டான். கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்தான். நான் நேரத்திற்கு வேலைக்கு வரவேண்டியதன் அவசியத்தைச் சொன்னான்.

நான் ஆபீஸிற்கு நேரத்திற்கு வரவேண்டும் என்றால் வீட்டில் இருந்து சீக்கிரம் புறப்பட வேண்டும். என்னால் வீட்டு வேலைகளைச் செய்ய முடியவில்லை. ஆறாயிரம் சம்பளமா, வீட்டு வேலையா என்ற கேள்வி என்னை வீட்டைவிட்டு துரத்தியடித்தது. சுகுணாவிற்கு வேலை அதிகரித்தது. அவள் கோபமும் அதிகரித்தது.

அவள் உட்கார்ந்துகொண்டு என்னை வேலைவாங்கிய நாட்கள் எல்லாம் இறந்த நாட்களாகிவிட்டதில் அவளுக்கு வருத்தம். என்னைத் திட்டினாள். நான் எருமை மாடு. சுற்றிச் சுற்றி வரும் கோவில் மாடு. பொறுப்பற்றவள். என்னைப் பற்றி பிரகாஷிடம் நிறைய சொன்னாள். பிரகாஷ் என் மேல் சொல் அம்புகளை எறிந்தான்.

நான் ஏன் கவலைப்படணும்? நானும் பிரகாஷை எதிர்கொண்டேன். வேலையில் இருந்து களைத்துப் போய் வீடு திரும்பும் எனக்கு ஒரு காப்பி கிடையாது. ஆறுதல் வார்த்தை



கிடையாது. பதிலுக்கு நெருப்புத் துண்டுகள்.

குட்டக்குட்டக் குனிந்துகொண்டே இருந்தால் நிமிர்வது எப்படி?

இப்போதெல்லாம் சுகுணாவிற்கும், எனக்கும் இடையே இருக்கும் பேச்சு வார்த்தைகளில் அன்பு இல்லை. ஒரு எந்திரத்தனம்தான் இருக்கிறது.

"உமா. நீங்க புரிஞ்சிப்பீங்கன்னு நெனைக்கிறேன். ஒரு 'ரிஷப்பனிஸ்டு'ன்னா கொஞ்சம் நாகரீகமா 'டிரஸ்' பண்ணணும். ஈர்க்கிற மாதிரி இருக்கணும். விமானப் பணிப்பெண் வேலையில் இருந்தவங்க எல்லாம் 'அப்ளை' பண்ணாங்க. ஆனா உங்களுக்கு நான் பரிந்துரை பண்ணினேன். ஏன்னா, நீங்க 'சேல்ஸ் லைன்'ல இருந்திருக்கீங்க. அது மட்டுமல்ல; என் நண்பனோட மனைவி. அதனால கொஞ்சம் முயற்சி பண்ணுங்களேன்" என்றார் ஜவஹர், ஒருநாள்.

வியாபாரம் பெருக வேண்டும் என்றால் ஆபீஸ் மட்டும் அழகாக இருக்க வேண்டும் என்பதில்லை. அந்த ஏ.ஸி., இங்கிலீஸ்தனம் வழியும் 'பர்னிச்சர்'கள், 'கவுண்டர்'கள், செயற்கை வெளிச்சங்கள்– செயற்கையான தாவரங்கள் இவற்றினூடே உலா வரும் பெண்களும் தேவதைகளாகத் தெரிய வேண்டும்.

அகலமாய் இறக்கம் வைத்த 'ஜாக்கெட்'டிற்கு 'ஆர்டர்' பண்ணி அணிந்துகொண்டேன். 'லோ ஹிப்', உடம்பு தெரிகிற மாதிரி 'ஸீ–த்ரூ' புடவை. செண்ட், லிப்ஸ்டிக். பஸ்ஸில் என் இடுப்பைத் தொட்டார்கள். ஏதேதோ பண்ணினார்கள். மரக்கட்டை.

இரவுகளில் பிரகாஷ் தொட்டான். வருடினான். ஏதேதோ பண்ணினான். மரக்கட்டை.

சுகுணா இப்போது வேறுமாதிரி அர்த்தம் கற்பித்தாள். நான் ஆண்களைக் கவரத்தான் இப்படி உடுக்கிறேன், ஜவஹரை கையில் போட்டுக்கொள்ளப் பார்க்கிறேன் என்றாள். பிரகாஷிடம் நான் இல்லாத சமயத்தில் இதையே

சொல்லிச் சொல்லி விஷம் கலந்திருப்பாள் போலும். பிரகாஷ் ஒரு நெருக்கமான தருணத்தில் ரொம்பவும் சாமர்த்தியமாக என்னைக் கேட்டான்.

"ஜவஹரோட இருந்தா எப்படி இருக்கும்னு யோசிச்சுப் பார்த்திருக்கியா உமா?"

"என்னது?"

"இல்ல."

நான் திமிறி எழப்பார்த்தேன். அவன் ஆண்மை பலம் என்னை வீழ்த்தியது. அவன் என்னுள் பரவப் பரவ விஷம் பரவுகிற மாதிரி ஒரு உணர்வு. 'கடவுளே... கடவுளே. நான் என்ன செய்யப்போகிறேன்?'

"நாளைலே இருந்து நான் வேலைக்குப் போகல" என்றேன். என் சம்பளம் இப்போது ஏழாயிரம்.

பிரகாஷ் அவசரம் அவசரமாக என் உதடுகளை அவன் உதடுகளால் மூடினான்.

"பைத்தியம். ஒரு பேச்சுக்கு சொன்னா ஒடனே இப்படி 'வேலைக்குப் போகமாட்டேன்னு சொல்லி என்னை 'பிளாக்-மெயில்' பண்ணணுமா? சும்மா சொன்னேன் உமா" என்று சொல்லி என்னை சுக்கு நூறாக உடைத்துவிட்டு, அவனுடைய வேலையில் மும்முரமாக இருந்தான்.

அன்றைக்கு நான் அஜாக்கிரதையாக இருந்துவிட்டேன் என்பது மாதக் கடைசியில் தெரிந்துவிட்டது. 'ஸானிடரி நாப்கினுக்கு' அவசியம் வரவில்லை. எனக்கு ஒருவகையில் சந்தோஷமாக இருந்தது. நான் ஏங்கிக்கொண்டு இருக்கும் குழந்தை எனக்குப் பிறக்கப் போகிறது. அதன் அழுகையை, சிரிப்பை, மழலையைக் கேட்கப் போகிறேன். என் மார்பில் பாலூட்டப் போகிறேன். அதன் சிற்றிதழ்கள் உரிஞ்சுவதை ஆனந்தமாக அனுபவிக்கப் போகிறேன்.

பிரகாஷிடம் சொன்னேன்.

"இப்ப வேண்டாமே உமா" என்றான்... உடனே.

"என்ன இது? ரெண்டு வருஷமா ஒண்ணுமே இல்லாம...



எனக்கு ஒரு குழந்தை வேணுங்க."

"இப்ப வேணா. எப்ப வேணும்னு நான் முடிவு பண்ணுறேன். ரெண்டு பேருமே ஆபீஸ் போகணும். நடுவிலே அது வேற ஒரு எடைஞ்சலா...? இப்ப வேணாம். சாயங்காலம் நீ ஆபீஸ்லேயே இரு. நான் 'பர்மிஷன்' போட்டுட்டு வந்து, டாக்டர்கிட்ட உன்னைக் கூட்டிடுட்டு போறேன்."

எனது இன்னொரு கனவு பிய்த்து எறியப்பட்டது. எங்கெங்கோ போய் சேகரித்துக் கொண்டுவந்து குருவி கட்டும் கூட்டை ஒவ்வொருமுறையும் கலைத்துப் போட்டால் குருவிக்கு எப்படி இருக்கும்? அது குரங்கை என்ன செய்யும்?"

**ஆ**பீஸில் ஜவஹர் என்னைக் கூப்பிட்டு அனுப்பினான்.

இப்பல்லாம் நீங்க எங்கூட முன்ன மாதிரி இயல்பாப் பழகறதே இல்ல. ரொம்ப ஒதுங்கிப் போறீங்க. டல்லா இருக்கீங்க. என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"என்னை நீங்க வப்பாட்டியா வச்சிருக்கறதா என் புருஷன், அதான் உங்க நண்பர் சந்தேகப்படறாரு" என்றேன்.

ஜவஹர் என்னிடம் இருந்து அப்படி ஒரு ஏவுகணையை எதிர்பார்க்கவே இல்லை. அப்படியே அதிர்ந்துபோய் என்னைப் பார்த்தான்.

## 10

**மா**லையில் பிரகாஷ் வந்தான். ஜவஹர் அவனை எதிர்பார்க்கவில்லை. அந்த நேரம் என்னோடு ஏதோ ஆபீஸ் விஷயமாக விவாதிக்க வந்தவன், பிரகாஷைப் பார்த்தவுடன் சுவரில் மோதிக்கொண்ட பார்வையற்றவன்போல திகைத்துப் போனான்.

அங்கே ஒரு நாடகம் நடக்கப்போகிறது என்றுதான் நான் எதிர்பார்த்தேன். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. பிரகாஷ், ஜவஹரோடு சிரித்துப் பேசினான். இரண்டு பேரும்

காண்டீனுக்குப் போய் காப்பி குடித்துவிட்டு வந்தார்கள்.

என்னைக் கூட்டிக்கொண்டு போகும்போதும் பிரகாஷ், ஜவஹரின் கைகுலுக்கி– வெகு நட்பாகப் புன்னகைத்து 'பை, பை' சொல்லி– என்னையும் பார்த்து சிரிப்புடன், "கம் உமா" என்று கூட்டிப் போனான்.

நான் பலி ஆடு மாதிரி அவன் கூட்டிச் சென்ற டாக்டர் வீட்டுக்குப் போனேன்.

டாக்டர் மறுநாள் காலை எதுவும் சாப்பிடாமல் வரச் சொன்னார். பிரகாஷ்தான் கணவன் என்று அறிந்துகொண்டு, ஒரு விண்ணப்பம் கொடுத்து கையெழுத்துப் போடச் சொன்னார்.

மறுநாள் விடியற்காலை போய் டாக்டர் அளித்த 'அனஸ்தீஷியா' மயக்கத்திற்கு உட்பட்டு, 'வேண்டாம், வேண்டாம்' என்று அரை மயக்கத்தில் கத்தி, கடைசியில் விழிப்பு வந்தபோது, என்னை ஒரு 'கிளீன் சிலேட்' என்றார் டாக்டர்.

ஆணோ, பெண்ணோ ஏதோ ஒன்று. ஒரு மெல்லிய பூ மலர இருந்தது. நான்தான் அதை என் ராட்சதக் கையால் கசக்கி, நசுக்கி அழித்துவிட்டேன்.

என் கண்ணே! ரொம்ப வலித்ததாடா? என் முத்தே! இந்த ராட்சசியை மன்னிப்பாயா? என் கொழுந்தே! உன் மேல் கொதிநீரை ஊற்றிவிட்டேனே!

எவ்வளவு அழுதால் என்ன? எவ்வளவு குமைந்தால் என்ன? எவ்வளவு பாவமன்னிப்பு கேட்டால் என்ன?

முடிந்தது முடிந்தேவிட்டது.

'கிளினிக்'கில்இருந்து வீடு திரும்புகையில் பிரகாஷ் சந்தோஷமாய் இருந்தான். வழியெல்லாம் கேலியும், கிண்டலுமாய்ப் பொங்கி நீரூற்றுபோல் உற்சாக நெருப்பாய் தெரிந்தான். எனக்கு மல்லிகைச் சரங்களை வாங்கி விலங்கு மாட்டினான்.

நான் வழக்கம்போல் மவுனமாய் ஆமோதித்தேன். அங்கீகரித்தேன். பிச்சைக்காரர்களுக்கு எப்போதும் இது



அல்லது அது என்று தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது. நான் பிச்சைக்காரி. கேடுகெட்ட பிச்சைக்காரி. என் வயிற்றுக் கருவை நானே சுமக்கக்கூட அருகதையற்ற பிச்சைக்காரி. அதனால்தான் அவன் இழுத்த இழுப்பிற்கு அடிபணிந்தேன். கைகோர்த்துக்கொண்டேன். இழுத்தும், இழுக்காமலும் என்னை அவன் வழிநடத்தினான். சிரித்தான். நானும் ஜீவனைத் துடைத்தெறிந்த சிரிப்பு சிரித்தேன்.

சுற்றி இருந்தவர்கள் எங்களைப் பார்த்தார்கள். ஏக்கங்களை நிரப்பிக்கொண்டு தங்கள் முகம் திருப்பி தங்களைப் பார்த்துக்கொண்டு எங்களைப் போல் ஆதர்சத் தம்பதிகளாய் இல்லையே என்றெண்ணி பெருமூச்சு விட்டுக்கொண்டு ஜோடிகள் கடந்தன.

பஸ்ஸில் இருந்து ஒருநாள் நான் பார்த்தேனே! தோளில் சட்டை போட்டுக்கொண்டு, மார்பு மயிர் தெரிய நடந்த ஆண். இணையாய் நடந்த பெண். அப்போது நான்கூட பெருமூச்சு விடும் நிலையில்தான் இருந்தேன்.

இப்போது எங்களைப் பார்த்து பெருமூச்சு விடுபவர்களை நினைத்தால் பரிதாபமாக இருந்தது. இதெல்லாம் வெறும் வேஷம். நீங்கள் பார்ப்பதெல்லாம் அத்திப்பழ அழகு என்று கத்தத் தோன்றியது.

அம்மா– அப்பாவை மீறி வந்துவிட்டேன். அக்கா எப்படி இருக்கிறாள் என்றுகூடத் தெரியாது. 'எப்படியும் என் காலில் வந்து விழுவாய்' என்று அப்பா ஆசீர்வதித்து அனுப்பியதால் அம்மா வீடு என்னைப் பொறுத்தவரை போன ஜன்மத்து வீடு. திரும்ப முடியாத எல்லையில் வந்து நின்றுவிட்டு, அம்மா வீடா அது? தூ...

சந்தனப்பாசி விலகி சேற்றின் அருவருப்பு தெரிய ஆரம்பித்துவிட்ட மாதிரி இருந்தது.

'நாங்கள் எப்படி வாழ்கிறோம் பார்' என்று ஊமைச் சிரிப்பாய்ச் சிரித்து ஊர் மொத்தத்தையும் நான் ஏமாற்றினேன்.

"உனக்கென்ன உமா. கொடுத்து வச்சவ."

"உனக்கென்னம்மா? அழகழகாப் புடவைங்க. அனுசரிச்சிப்

போற கணவன். டி.வி. வாங்கிட்டே. பிரிட்ஜ் வாங்கிட்டே. உன் ஆள்கூட பைக்ல ஜாலியா சுத்தறே."

ஆம். வண்டியும் வாங்கியாகிவிட்டது. டி.வி. பிரிட்ஜ் எல்லாம் வந்துவிட்டன.

"ஒரு பிக்கல் பிடுங்கல் இல்ல. மூக்குல சளி ஒழுகற கொழந்தை இல்ல. புருஷனை எப்படித்தான் கைக்குள்ள போட்டுக்கிட்டியோ! எவ்வளவு காசு. எவ்வளவு அழகு. என்ன வாழ்க்கை?"

திருப்பித் திருப்பி காசு. அழகு.

காசும், அழகும்தானா?

உள்ளுக்குள் எவ்வளவு அழுக்காய் இருந்தாலும் அதையெல்லாம் காசும், அழகும் பூசிமெழுகிட முடியுமா?

ஒருவேளை இந்தக் குணம் கெட்ட தன்மையால்தான் மனிதர்கள் செயற்கையாய் ஒரு புன்னகையை உதட்டில் ஒட்ட வைத்துக்கொண்டு வலம் வருகிறார்களா?

சூரியனின் ஈர்ப்பில் மற்ற கிரகங்கள் பாதை மாறாமல் வலம் வருகிற மாதிரி ஒரு பந்தத்துக்குக் கட்டுப்பட்டு, சமூக நியதிக்கு ஒத்துப் போய்தான் இவர்கள் வாழ்க்கை எல்லாம் அமைந்திருக்கிறதா என்ன?

சுகுணாவின் குத்தல் பேச்சு தொடர்ந்தது. ஆபீசில் ஒவ்வொரு முறை சம்பளம் உயர்ந்தபோதும் நான் ஜவஹரை சரிக்கட்டித்தான் உயர்வைப் பெற்றுவருகிறேன் என்று சுகுணா சொல்லத் தவறவில்லை.

பிரகாஷும் இரட்டை அர்த்தத்துடன்தான் பேசினான். அவன் சந்தேகம் வளர்ந்துகொண்டுதான் இருந்தது. இருந்தாலும் என் சம்பளம், அதனால் ஏற்படும் வசதிகள் எல்லாம் அவனுக்குத் தேவை. சரியான கழுதைப்புலிதான் என் கணவன். உறுமுவான். கத்துவான். ஆனால் என்றைக்காவது 'நான் வேலையை விட்டுவிடுகிறேன்' என்றால் கோழைபோல் அடங்கிப்போவான்.

நான்காவது வருடம் இன்னொரு அஜாக்கிரதை காரணமாக



எனக்கு நாள் தள்ளிப்போனது. எனக்குள் மறுபடியும் ஒரு நம்பிக்கை துளிர்விட்டது. இந்த முறை மாட்டேன். அழிக்கமாட்டேன். என் செல்வத்தை நான் காப்பாற்றுவேன். என் பொக்கிஷத்தை யார் களவாடவும் விடமாட்டேன்.

என் சந்தேகத்தை சொன்னேன்.

"டாக்டரைப் பார்க்கலாம் உமா."

"எதுக்கு?"

"பிளீஸ். இப்ப வேணாம்."

"வேணும்! வேணும்! வேணும்!"

"உமா! பிராக்டிகலாப் பேசேன்?"

"எது பிராக்டிகல்? நான் ஒரு குழந்தைக்குத் தாயாகப் போறேன்னு சொன்னா அது பிராக்டிகல் இல்லையா? வேலைக்குப் போற பொண்ணுங்க கொழந்தை பெத்துக்கறதே இல்லையா? முடிவு பண்ணுறேன்னு சொன்னீங்களே... இப்ப முடிவு பண்ணுங்க. இந்தக் கொழந்தை வேணும்னு ஒத்துக்கிட்டா, நான் பெத்துக்கிட்டு வேலைக்குப் போறேன். இல்லைன்னா..."

"மெரட்றியா உமா?"

"ஆமா! குழந்தை வேணாம்னா, உங்களுக்கு நானும் வேணாம்னு அர்த்தம். உங்களுக்கு எப்படி வேணுமோ அப்படி முடிவு பண்ணுங்க."

"சரி. டாக்டர்கிட்ட போலாம்."

"எதுக்கு?"

"கொழந்தையா, இல்லையான்னு உறுதி பண்ணத்தான்."

நான் பிரகாஷை இழுத்துப் பிடித்து முத்தமிட்டேன். நான்கு ஆண்டுகளுக்குப் பின் நானே வலிய அவனுக்கு ஈந்த முத்தம்.

மறுநாள் காலை டாக்டர் 'உறுதி' பண்ணினார். நான் விமானத்தில் 'டேக்–ஆப்' ஆனதுபோல் உணர்ந்தேன்.

அலுவலகத்தில் நான் ரொம்ப சந்தோஷமாக இருந்தேன். சிரித்துச் சிரித்துப் பேசினேன். என் 'லோஹிப்'பையும், 'லோ நெக்'கையும் வாடிக்கையாளர்கள் பார்த்து மையல் கொள்வதைக்

கண்டுகொள்ளாமல் இருந்தேன். ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை 'லிப்ஸ்டிக்'கை சரி செய்துகொண்டேன்.

ஜவஹர் என்னை நெருங்கி வந்தான்.

"நீ இன்னிக்கு ரொம்ப அழகா இருக்கே!"

"ஆமாம். ரொம்ப சந்தோஷமாவும் இருக்கேன். ஏன்னா நான் அம்மாவாகப் போறேன்."

"வாவ்... வாட் எ குட் நியூஸ்" என்று உண்மையாக சந்தோஷப்பட்டான். ஆபீஸ் மொத்தத்திற்கும் அவன் செலவில் 'ஐஸ்கிரீம்' வாங்கிக் கொடுத்தான்.

**மா**லையில் தொடக்கம். ஆபீஸ்விட்டுப் புறப்படப் போகும் நேரம். போன் ஒலித்தது. நான் எடுக்கவேண்டிய ரிசீவரை அந்தப் பக்கம் வந்த ஜவஹர் எடுத்தான். கேட்டான்.

"ஓ... என்ன கொடுமை" என்றான். அப்படியே மயங்கி சரிந்தான். அவனைத் தாங்கினேன். இரண்டு பேர் உதவினார்கள். நான் தொங்கிக்கொண்டு இருந்த ரிசீவரை எடுத்தேன்.

"ஹலோ" என்றேன்.

"அங்கே மிஸஸ் உமா இருக்காங்களா?"

"நீங்க யாரு?"

"போலீஸ்."

"நான் உமாதான் பேசறேன். போலீஸா... என்ன இது?"

"மிஸஸ் உமா. ரொம்ப ஸாரி மேடம். உங்க கணவர்தானே மிஸ்டர் பிரகாஷ்."

"ஆமா."

"அவர் 'பைக்'கோட ஒரு லாரியில போய் மோதி, அந்த இடத்துலயே இறந்துட்டாரு."

"ஓ..."

## 11

**கை** கொடுக்கும் நேரத்தில் என் வாழ்க்கை திசைமாறிவிட்டது. விதி, தலையெழுத்து, ஜாதகம், ராசி அல்லது ஏதோ ஒன்று.



அது என்னைத் துரத்திக்கொண்டே வந்திருக்கிறது. நான் சந்தோஷப்படலாம் என்று நினைத்த நேரங்களில் எல்லாம் என்னை அழ வைத்திருக்கிறது.


தமிழ் சினிமாக்களில், கதைகளில்– கதாசிரியர்களுக்கு வேறுவழி தெரியாவிட்டால் கையில் பாசக்கயிற்றைத் தூக்கி யார் கழுத்திலாவது மாட்டிவிடுவார்கள். கதையின் கழுத்தைப் பிடித்து நெரித்து நிறுத்திவிடுவார்கள்.

ஏறக்குறைய என் வாழ்க்கையும் அப்படித்தான் ஆகிவிட்டது. எப்படி எந்தத் திசையில் நகர்த்துவது என்று தெரியாமல் திடீரென்று விதி என் கணவனின் மேல் பாய்ந்துவிட்டது.

ஒரு விதத்தில் விடுதலை. பிரகாஷ் சிரித்துப் பேசினான். ஆனால், உள்ளூர வன்மம் வைத்துக்கொண்டு சிரித்த ஓநாய் போல் இருந்தான். என் சம்பளம் அவனுக்கு ஒரு பொருட்டாக இல்லாவிட்டால் என்னையும், ஜவஹரையும் படுக்கையில் இருப்பதாக வக்கிர வக்கிரமாகக் கற்பனை செய்து என்னைத் துன்புறுத்தி இருப்பான்.

பணம் காரணமாக அவனுடைய கற்பனைகளை வெளியில் சொல்லவில்லை. எல்லாவற்றுக்கும் அவன்தான் முடிவெடுக்க வேண்டும். அவனுக்குத் தேவை பணம்... பணம்... பணம். கார், பங்களா. அதை நோக்கித்தான் வாழ்க்கையை செலுத்திக்கொண்டிருந்தான். யாராவது 'கார் தருகிறேன், உன் பெண்டாட்டியை அனுப்பு' என்று சொல்லி இருந்தால்... என்னை நிச்சயம் அனுப்பி இருப்பான். அவனுடைய அடிமை என்றுதான் என்னை அவன் நினைத்திருந்தான்.

அவனுடைய மனநிலை மிக விநோதமானது. ஒரு பக்கம் பெண்டாட்டி தன்னைத் தவிர வேறு எந்த ஆணையும் நிமிர்ந்து கூடப் பார்க்கக்கூடாது. இன்னொரு பக்கம் அவளே தன் பணத் தேவையை நிறைவேற்ற யாருடன் வேண்டுமானாலும் சிரித்துப் பேசலாம். அவள் உடலைக் காட்டலாம். இடுப்பை வருடினால் அங்கீகரிக்கலாம். அப்புறம் இதில் நான் எங்கே





இருக்கிறேன்? என் மனம் எங்கே? என் ஆசைகள், பாசங்கள், கோபங்கள், சந்தோஷங்கள் எங்கே?

நான் காணாமல் போய்விட வேண்டும். 'ரோபோ' மாதிரி. வீட்டு வேலைகள் செய்யவேண்டும். ஆபீசுக்குப் போக வேண்டும். சிரிக்க வேண்டும். 'கரன்ஸி' தாள்களைக் கொண்டுவந்து அவன் காலடியில் காணிக்கையாக்க வேண்டும். அவன் 'பைக்' வாங்கவும், பிரிட்ஜ் வாங்கவும், டி.வி. வாங்கவும், அவனுடைய சமூக அந்தஸ்தை உயர்த்தவும் உதவி செய்யவேண்டும். தினம் இரவில் தாசியாக வேண்டும். மறுபடி காலையில் எழுந்து வீட்டு வேலைகள்.

எவ்வளவு அடிமைத்தனம்! எவ்வளவு ஆண் ஆதிக்கம்! நான் என்ன கேட்டேன்? அன்பு– கலப்படமற்ற தூய அன்பு. அதை அவன் தந்திருந்தால் அவன் எதிர்பார்த்ததற்கு மேலே நான் போயிருப்பேன் என்று அவனுக்குத் தெரியவே இல்லை. நான் விருப்பப்பட்ட நாளில் ஒரு குழந்தையை அங்கீகரித்திருந்தால் அவன் கால்களை என் கண்ணீரால் நனைத்திருப்பேன்.

இப்போது?

சொன்னால் நம்பமாட்டீர்கள். எனக்குக் கண்ணீர் வரவில்லை. என் நிலை, ஜவஹரை மயக்க வைத்தது. ஆனாலும், நான் ஆடிப் போகவில்லை. செய்தி முதலில் பிரமிப்பைக் கொடுத்தது. ஆனால் தெளிந்துவிட்டேன்.

மறுநாள் காலை அவன் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. அவனுடைய சொந்தக்காரர்கள் எல்லாருக்கும் சுகுணா தகவல் தெரிவித்திருந்தாள். நான் யாருக்கும் சொல்லவில்லை. யார் அனுதாபமும் எனக்கு வேண்டாம். அம்மா, அப்பாவிடம் கூடத் தெரிவிக்கவில்லை. அம்மா என் நிலை கண்டு மனம் உடைந்து செத்துப் போவாள். அப்பா தன் அகங்காரம் வென்றதற்காக சந்தோஷப்படுவார்.

என் பழைய நண்பர்களுக்குக் கூடத் தெரிவிக்கவில்லை. இது தெரியாமலேயே இருந்துவிடப் போவதில்லை. ஆனால் இப்போது வேண்டாம்.

பிரகாஷ் என்னும் சரித்திரம் முடிந்துவிட்டது. அவன் படம் வீட்டில் மாலையுடன் தொங்கியது. எனக்கு விடுதலை. என் தாலியைக்கூட கழற்றிவிட்டேன். ஒரு நரகாசுரனின் மரணம்.

சுகுணாக்கா மாறிவிட்டாள். பிரகாஷின் மரணம் அவளை அடியோடு மாற்றிவிட்டது. பிரகாஷ் இருந்த தைரியத்தில் என் மேல் அதிகாரம் செலுத்தியவள் இப்போது நான் எதுவும் சொல்லாமலேயே என்னை மகாராணியாக அங்கீகரித்துவிட்டாள். வீட்டு வேலைகள் செய்தாள். என்னை ஒரு வேலைகூட செய்யவிடவில்லை. அவளுடைய எதிர்காலம் ஒரு கரும்பூதமாக வந்து நின்று, அவளை நிறையவே பயமுறுத்திவிட்டது.

கையைப் பிடித்துக்கொண்டு, 'என்னைக் கைவிட்டு விடாதே உமா' என்று அழுதாள். நான் பதில் சொல்லவில்லை. அவள் அழுகை எனக்கு அவள் மேல் பரிதாபத்தை வரவழைக்கவில்லை. அவள் ஒரு சந்தர்ப்பவாதி. நாளைக்கே அவளுக்கு இன்னொரு ஆதாரம் கிடைத்தால், அதைப் பற்றிக்கொண்டு என்னைத் தூக்கி எறியத் தயங்கமாட்டாள்.

மறுபடி ஆபீசுக்குப் போகத் தொடங்கினேன். பழைய அலங்காரம். 'லோஹிப்' ஸாரி. 'லோ–கட் நெக்'. லிப்ஸ்டிக். எதிலும் குறை வைக்கவில்லை. முன்பைவிட அதிகமாக 'செண்ட்' அடித்துக்கொண்டேன். நெற்றிப் பொட்டைத் துறக்கவில்லை. ஆபீசில் என்னை அனுதாபத்தோடு பார்த்தார்கள். கொஞ்சம் தள்ளி நின்று பேசினார்கள். அளவோடு சிரித்தார்கள். கேண்டீனுக்குப் போனால் கூட வந்தவர்கள் 'பில்' கொடுத்தார்கள்.

ஒரு வாரம் கழித்து ஜவஹர் என்னோடு பேச வேண்டும் என்றான்.

"பேசுங்களேன்" என்றேன்.

"இங்கே இல்லை" என்று சொல்லிவிட்டு, சாயங்காலம் காரில் ஓட்டலுக்கு கூட்டிக்கொண்டு போனான். அதன் 'பார்'



சின்னதாக இருந்தது. முதல் மாடியில் ஜன்னலையொட்டி இருந்த நாற்காலியில் என்னை உட்காரச்சொல்லி எதிரில் அமர்ந்தான். ஜன்னல் வழியாகக் கீழே நீச்சல் குளம் தெரிந்தது. வான் நீலமாக இருந்தது. சுற்றிவர பச்சைப் புல்வெளி. அலங்காரக் கல் பதித்த தரை.

நடுவே நீச்சல் குளம். அலங்காரக் குடைகள் அங்கங்கே நடப்பட்டு, ஹாங்கரில் தொங்கிய வெள்ளைப் புறாவின் சிறகுகள் போன்ற 'டவல்'கள் காற்றில் மெல்ல ஊசலாடின. ஒரு பெண், தண்ணீரைச் சிதைத்துக்கொண்டு நீச்சல் குளத்தில் குதித்தாள். சத்தம் கேட்கவில்லை. மவுனப் படம்போல் அந்தக் காட்சி. அவள் தொடைகள், விளக்கு வெளிச்சத்தில் மின்னின. மார்பின் புடைப்பு தெரிந்தது.

இருந்தும் அந்தக் காட்சியில் 'செக்ஸ்' இல்லை. பூவின் அழகு. வான் அழகு. மேகம் அழகு. நிர்வாணம் அழகு. பெண் அழகு. இயற்கைக்கு வஞ்சனையே இல்லை. எல்லாவற்றையும் அழகாகத்தான் படைத்திருக்கிறது. பார்க்கிற கண்களில்தான் அத்தனைக் கோணல்களும்.

ஜவஹர் எனக்கு ஒயின் 'ஆர்டர்' பண்ணினான். ஒன்றும் நேராது என்றான். அவனுக்கு வோட்காவோ என்னவோ சொன்னான்.

வந்தது. உறிஞ்சினேன். கொஞ்சம் மருந்து வாசனை. கொஞ்சம் திராட்சை வாசனை. கொஞ்சம் இனிப்பு. தொண்டையில் இறங்கும்போது வெப்பமாய் உணர்ந்தேன். வெப்பம் தொண்டையில் இருந்து மார்புக்கு மாறி வயிற்றில் ஊடுருவியது. இதமான ஆறுதலான வெப்பம். கொஞ்ச நேரத்தில் உலகமே ஆனந்தமயமாக இருந்தது.

"எப்படி பீல் பண்ணுகிறீர்கள்?" என்று ஜவஹர் கேட்டான்.

"பென்டாஸ்டிக்" என்றேன். நிஜமாகவே அற்புதம்தான்.

"தாங்க்ஸ் உமா. எனக்கு வேறு எங்கேயும் செல்லத் தைரியம்

போதவில்லை. அதனால்தான் உங்களை இங்கே கூட்டிட்டு வந்தேன். நான் குடித்த 'வோட்கா' எனக்குள் தைரியத்தையும், கிளர்ச்சியையும் ஏற்படுத்தி இருக்கிறது. சொல்ல நினைத்ததை இப்போது தைரியமாகச் சொல்கிறேன். நான் உங்களை நேசிக்கிறேன்" என்றான் ஜவஹர், ஆங்கிலத்தில்.

"அப்படின்னா?"

"உனக்கு ஆட்சேபம் இல்லேன்னா... நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன் உமா. ரொம்ப நேர்மையான வாக்குமூலம் இது. எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலை. மனசுக்குப் புடிச்ச ஒரு 'பார்ட்னர்' கெடைக்கல. அதனாலத்தான் கல்யாணம் பண்ணிக்கலை. ஆனா, இப்ப நான் மனம் மாறிட்டேன். உன்னைப் பார்த்த அன்னிக்கே எனக்கு ஒன்னைப் பிடிச்சிப் போச்சி.

ஆனா, நீ பிரகாஷோட மனைவி. ஒன்னையும், என்னையும் சேத்து சந்தேகப்படுறாங்கன்னு நீ வந்து சொன்னப்ப எனக்கு கொஞ்சம் சந்தோஷமாகக்கூட இருந்தது. ஆனா, பிரகாஷ் இருந்ததால நான் எதுவும் பேசலை. இப்ப எனக்கு ஒரு சந்தர்ப்பம் கெடைச்சிருக்கு. ஐ லவ் யூ உமா. எனக்குத் தெரியும்... நீ இப்ப ஒரு கொழந்தைய சுமக்கிறே. அந்தக் கொழந்தைக்கும் நானே தகப்பனா இருக்கேன். என்ன சொல்றே? யோசிக்காம பதில் சொல்ல வேண்டாம். யோசி" என்று சொல்லிவிட்டு அவனுடைய கோப்பையை ஒரே மடக்கில் காலி செய்தான்.

ஓ... என் வயிற்றில் சுமை இருக்குல்ல. என் ஆனந்த உணர்வு தடைப்பட்டது. மிதக்கிற மாதிரி உணர்ந்த நான், கொஞ்சம் கீழே இறங்கினேன். யோசித்தேன். ஹாம்லெட் வசனம் என் நெஞ்சில் எழுந்தது. 'டு வில் ஆர் நாட் டு வில்?'

ஷேக்ஸ்பியர் இன்னும் என் மனதில் தங்கி இருக்கிறாரா என்ன? நான் ஒரு முடிவுக்கு வந்தேன். என் முடிவை அப்புறம் சொல்வதாகச் சொன்னேன்.

**ம**றுநாள் காலை ஜவஹரை என்னோடு வரச் சொன்னேன். கார் எடுத்துக்கொண்டு வந்தான். நான் வழி சொன்னேன். கார்



கடைசியில் நின்ற இடம் பெண் டாக்டர் வீடு.

"யெஸ்?" என்றார் டாக்டர், 'நாப்கின்'னால் கைகளைத் துடைத்துக்கொண்டே.

"எனக்கு ஒரு 'அபார்ஷன்' பண்ணணும் டாக்டர்" என்றேன்.

ஜவஹர் பதறிப்போய் என் கையைப் பற்றி அழுத்தினான். நான் பதிலுக்கு அழுத்தினேன்.

"இது?" என்று ஜவஹரைக் காண்பித்தார் டாக்டர்.

"என் கணவர்" என்றேன். ஜவஹரைப் பார்த்தேன். அவன் முகம் பிரகாசம் அடைந்தது.

டாக்டர் என் அந்தரங்க நாட்களைப் பற்றி சில விவரங்கள் கேட்டார். சொன்னேன். 'அபார்ஷன்' பண்ணக் கணவனின் ஒப்புதல் வேண்டும். ஜவஹர் நான் எதிர்பார்த்ததற்கு மேலாக சந்தோஷமாகக் கையெழுத்திட்டான்.

பிற்பகல் இரண்டு மணிக்கு 'அனஸ்தீஷியா' ஊசி போட்டார்கள். மற்றுமொரு அழிவின் தொடக்கம். ஒரு 'டி அண்ட் சி'யின் ஆரம்பம். ஆணோ, பெண்ணோ. இன்னொரு பூ மலர இருந்தது. 'வேண்டாம்... வேண்டாம்' என்று அரை மயக்க நிலையில் கத்தி, கடைசியில் விழிப்பு வந்தபோது, "யூ ஆர் ஆல் ரைட். கிளீனாய்டிச்சி" என்றார் டாக்டர். என் பூவை இந்த முறையும் ராட்சசக் கையால் நசுக்கிக் கொன்றுவிட்டேன். அழுத்தி அழித்துவிட்டேன்.

என் கண்ணே! ரொம்ப வலித்ததா? என் முத்தே! இந்த ராட்சசியை மன்னிக்காதே. என் கொழுந்தே! உன் மேல் கொதிநீரை ஊற்றியவளை நீ மன்னிக்கவே மன்னிக்காதே.

மாலை 'கிளினிக்'கை விட்டு வெளியே வந்தபோது 'அனஸ்தீஷியா' மயக்கம் அற்றுப் போயிருந்தது.

"ஜவஹர். என்னை ஓட்டலுக்குக் கூட்டிப் போங்க. எனக்குப் பசிக்குது. மறுபடி ஒரு கோப்பை 'ஒயின்' வாங்கிக் கொடுங்க" என்றேன், ஆங்கிலத்தில்.

"ஷ்யூர்" என்று ஜவஹர் சந்தோஷமாக காரை எடுத்தான்.

முதல் கோப்பையை ஒரே மடக்கில் காலி செய்தேன். இரண்டாவது கோப்பையைக் கையில் ஏந்தி அருந்தத் தொடங்கினேன். ஜவஹர் என்னை அதிர்ச்சியுடன் பார்த்தான். நான் ஆனந்தமாய் உணர்ந்தேன். என் குற்ற உணர்வை மனதின் அடி ஆழத்தில் புதைத்துவிட்டேன். எனக்குப் பேச வேண்டும். ஜவஹரிடம் சுதந்திரமாகப் பேசவேண்டும். அதனால்தான் இந்த 'ஒயின்' கவசம்.

ஜவஹரின் அதிர்ச்சியைப் பார்த்து எனக்கு சிரிப்பு வந்தது. கலகலவென்று சிரித்தேன்.

"என்ன உமா?" என்று கவலையுடன் கேட்டான்.

"நான் உங்கள் பெண்டாட்டி ஆகிவிட்டால் என்ன ஆகும்னுதானே யோசிக்கிறீங்க?"

"சேச்சே."

"கமான் ஜவஹர். உண்மையைப் பேசுங்க. இயல்பா இருங்க. இப்படிக் குடிக்கற ஒருத்தியை பெண்டாட்டியா ஏத்துக்க யாருக்கும் யோசனையாத்தான் இருக்கும். நான் ரெண்டாவது தடவை 'அபார்ஷன்' பண்ணினப்ப கணவன் கையெழுத்து வேணுங்கறதுக்காக உங்களைக் கூட்டிட்டுப் போனேன். 'அபார்ஷன்'னு சொன்னப்ப அதிர்ச்சியா இருந்திச்சி. ஆனா, புருஷன்னு சொன்னவுடனே சந்தோஷமா ஆகிடிச்சி.

ரொம்ப சந்தோஷமா கையெழுத்துப் போட்டீங்க. கன்னுக்குட்டியோட பசுவை வாங்கறதுன்னா ஆம்பளைங்களுக்கு ரொம்ப வலிக்கும்னு எனக்குத் தெரியும். நீங்களும் ஒரு சாதாரண ஆம்பிளைதான். சராசரிதான். குழந்தை இல்லாம பெண்டாட்டி கெடைக்கறாளேன்னு சந்தோஷமாப் போச்சி. இல்ல...? ஐ'ம் ஸாரி ஜவஹர். உங்களை ஏமாத்திட்டேன்.

நான் உங்களை கல்யாணம் செஞ்சிக்கப் போறதில்லை. இன்னொரு தடவை அடிமை விலங்கை மாட்டிக்க தயாரா இல்ல. கல்யாணம் ஆகிக் கொஞ்ச நாள்ல என் உடம்பு உங்களுக்கு சலிச்சிப் போகும். அப்புறம் நீங்களும் எம் மேல ஏறி உட்காந்து சவாரி பண்ண ஆரம்பிப்பீங்க. பிரகாஷுக்கு



எம் மூலமா பணம் வேண்டியது இருந்தது. உங்களுக்கு வேறு ஏதாவது ஒண்ணு தேவைப்படும். அதுக்காக என்னை உபயோகப்படுத்த ஆரம்பிப்பீங்க. உங்க ஆணாதிக்கத்தைக் காட்டிடுவீங்க. உங்களுக்கெல்லாம் காதலோட அர்த்தமே தெரியலை. 'செக்ஸ்'தான் காதல்னு நினைக்கிறீங்க.

கல்யாணமாகி கொஞ்ச நாள்ல உங்க் 'மேக்கப்'பைக் கலைச்சி 'ஒரிஜினல்' முகத்தைக் காட்டறப்ப எனக்கு ரொம்ப வலிக்கும். என்னோட அப்பாவுக்கும் அந்த மாதிரி ஒரு ஒப்பனை முகம்தான். பிரகாஷுக்கும் அதேமாதிரி 'மேக்கப்' போட்ட மூஞ்சிதான். 'ஒரிஜினல்' மூஞ்சியை யாருமே காட்டறதில்லை. ஒரு பொண்ணுக்கு, அவளுக்குன்னு தனியா மனசு இருக்கு. உணர்வு இருக்குங்கறதை யாருமே மதிக்கறதில்லை.

ஸாரி... வெரி ஸாரி. என் சுதந்திரத்தை நான் இழக்கத் தயாரா இல்லை. என் குழந்தையை ஏன் அழிச்சேன்னு உங்களுக்குத் தோணிக்கிட்டு இருக்கும். அது பொறந்து பெரிசானா பிரகாஷை ஞாபகப்படுத்தும். பிரகாஷோட சாயல் இருக்கும். என்னோட சுதந்திரத்தை அதுவும் கட்டுப்படுத்தப் பார்க்கும். என் வாழ்க்கையை அது சந்தேகிக்கும்.

ஏன்னா... நிறைய 'மேக்கப்' போட்ட மூஞ்சிகளாப் பாத்து பாத்து அதுவும் 'மேக்கப்' போட்டுக்கும். சமூகத்துல இருக்கற ஆண்கள் எது நல்லதுன்னு சொல்றாங்களோ, அதான் நல்லதுன்னு அதுவும் முடிவு பண்ணும். அதோட நல்லதுக்குள்ளே நான் இல்லாமப் போய்ட்டா... என்னைக் கெட்டவள்னு சொல்லும். அப்படிப்பட்ட கொழந்தை மேல என்னால உண்மையான அன்போட இருக்க முடியாது. பிரகாஷை ஞாபகப்படுத்துற கொழந்தைய என்னாலே 'லவ்' பண்ண முடியாது.

நான் சுதந்திரமா இருக்க ஆசைப்படறேன். நாம நண்பர்களாகவே பிரிஞ்சிடுவோம். ஒரு 'லேடீஸ் ஆஸ்டல்'ல எனக்கு எடம் கெடைச்சிடும். சுகுணாக்காவை ஏதாவது ஒரு 'ஹோம்'ல சேத்துடுவேன். பணம் ஒரு பிரச்சினை



சிறுகதை

# செல்லாக் காசு

மதுரை சண்முகன்

ராமாமிர்தன் - பெயருக்கேற்ற ஒரு வாழ்க்கையை உண்மையிலேயே வாழ்ந்தவர், வாழ்ந்து கொண்டிருப்பவர்.

வயது எழுபது ஆனாலும், உடலில் எந்தக் குறையும் இல்லை. ஆனால்... மனசு! அதுதான் ரொம்பவே தளர்ந்துவிட்டது.

அவரின் மனைவி அன்னபூரணம், அவரோடு பரிபூரணமான வாழ்க்கை வாழ்ந்து சுமங்கலி பட்டத்துடன் போய் சேர்ந்துவிட்டாள்.

'தாய் போனால் சுவை போகும், தந்தை போனால் தைரியம் போகும், தாரம் போனால் எல்லாம் போகும்' என்கிற உண்மையை இந்த நான்கு ஆண்டுகளில் ராமாமிர்தன் நன்றாகவே உணர்ந்திருக்கிறார்.

மூத்தவன் பிரவின், வெளிநாட்டு கம்பெனியில் உயர்ந்த பதவியில். குடும்பத்துடன் மும்பையில்...

இளையவன் ராஜ்குமார், சொந்த ஊரிலேயே வங்கியில் நல்ல பதவியில் இருக்கிறான். இவனுக்கு, லலிதாவைத் துணைவி ஆக்கினார்கள். அடுத்த பத்து மாதத்தில் பெண் குழந்தை பிறந்தது. குடும்பத்தில் மகிழ்ச்சி, புதுப் புனலாய் பொங்கிப் பெருகியது.

நாளாக நாளாக மருமகளால் சின்னச் சின்ன பிரச்சினைகள்.

"அப்பா! எங்கக் கூட மும்பைக்கு வாங்க. எங்களுக்கும் துணையாய் இருக்கும்" என்று அழைத்தான் மூத்த மகன்.

ஆனால், அன்னபூர்ணத்தின் நினைவுச் சுவடுகள் ஆழமாய் பதிந்திருக்கும் இந்த வீட்டையும், பிறந்து- வளர்ந்த சொந்த மண்ணையும்விட்டு வெகுதூரம் விலகிச் செல்ல அவர் மனம் இடம் தரவில்லை. இளைய மகனுடனேயே தன் வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

'முதுமை- இது தனக்கும், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் பாரம்தான்!' என்ற நினைப்பு அழுத்திக் கொண்டிருந்தது போதாது என்று நெஞ்சுக்குள் அநேக நெருடல்கள். மென்மையான அவரின் உணர்வுகளைப் பாரமாய் பதம் பார்த்தன.

காரணம், நாட்கள் ஓட ஓட மாமனார் என்கிற பிரியம் லலிதாவிடம் கொஞ்சம் கொஞ்சமாய்க் காணாமல் போனது.

ராஜ்குமார் அவளுடன் இணக்கமாக, சுமூகமாக வாழ்கிறான். மருமகளால் தான் புறக்கணிக்கப்படுவதைச் சொன்னால், அது அவர்களின் பந்தத்தைக் கெடுப்பதாகிவிட்டால்...? இப்படி ஒரு கேள்வி.

மனச் சுமைகளை இறக்கி வைக்க அவர் தேடிச் செல்லும் இடம், தெருக்கோடியில் உள்ள முருகன் கோவில்.

அன்றும் அங்குதான் சென்றுகொண்டிருந்தார். காலணிகளை கழற்றிவிட்டு,

உள்ளே நுழைய எத்தனித்தபோது... அங்கே மணல் பரப்பில் பழைய நாணயங்கள் சிதறிக் கிடந்தது கண்ணில்பட்டது.

'ஹூம்! செல்லாத நாணயங்கள் கேட்பாரற்று கிடக்கிறது. நானும் இந்தச் செல்லாக் காசுகள் மாதிரிதானே!' – நினைத்துக்கொண்டே கோவிலுக்குள் நுழைந்தார்.

தரிசனம் முடித்து, சந்நிதியில் தூண் அருகே கண் மூடி அமர்ந்தார்.

தன்னுள் இருந்த சுமைகளை மவுனமாக கொட்டித் தீர்த்து கண் விழித்தபோது...

"வணக்கம்" என்று கரம் குவித்தபடி அருகில் அமர்ந்தார் ரெங்கநாதன்.

பதிலுக்கு வணக்கம் சொல்லிவிட்டு, 'என்ன விஷயம்?' என்பது போல் பார்த்தது அவரின் முகம்.

"கோவில் கும்பாபிஷேகம் செய்யணும்னு முடிவு செஞ்சு, நேற்று இங்கே ஒரு கூட்டம் போட்டிருந்தோம். அதற்காக குழு அமைந்தோம். அதுல உங்களையும் போட்டிருக்கோம். நீங்களும் எங்களோடு சேர்ந்து செயல்படணும்னு..."

"அட... என்ன தம்பி! நான் வயசானவன். என்னால் என்ன செய்ய முடியும்?"

"என்னங்க இப்படிச் சொல்லிட்டீங்க...? நல்ல ஆலோசனைகளைச் சொல்ல உங்களைப் போல அனுபவம் உள்ளவங்க அவசியம் வேணும். நீங்க அரசாங்க உத்தியோகத்தில் இருந்தவங்க. உங்க யோசனைகள் பெரிய உதவியா இருக்கும். இது தெய்வ காரியம். மறுப்பேதும் சொல்லக்கூடாது."

இப்படி மிகவும் பரிவாக கேட்டுக்கொள்வதை அவரால் மறுக்க முடியவில்லை.

"சரி, தம்பி! உங்க ஆசை, கடவுள் விருப்பம். என்னால் முடிஞ்சதைச் சொல்றேன்."

"ரொம்ப சந்தோஷங்க..." சொல்லிவிட்டு விடைபெற்றார் ரெங்கநாதன்.

ராமாமிர்தன் எழுந்தார். முருகன் உருவத்தை மீண்டும் உற்றுப் பார்த்தார்.

'என்ன பார்க்கிறாய்... எல்லாம் முடிந்தது என்றாயே...?' ஒரு குறுநகையோடு தன்னை நோக்குவது போல் தோன்றிட, உடல் சிலிர்த்தார் ராமாமிர்தன். ★





இல்ல. எனக்கு இனிமே 'செக்ஸ்' தேவையில்லை. அப்படியே தேவைப்பட்டாலும் அதற்கு அடிமை சாசனம் எழுதிக் குடுத்துட்டுத்தான் அடையணும்னு அவசியமில்ல. இனிமே நான் உங்ககூட வேலை செய்யப் போறதில்லை. ஏன்னா, என்னைப் பார்த்தா உங்களை உறுத்தும். உங்களைப் பார்த்தா எனக்கும் நெருடும். நான் பழைய கம்பெனியில் போய் வேலையில் சேர்ந்துடப்போறேன்.

என் சிரிப்பு ஒண்ணு போதும். எனக்கு வேலை வாங்கித் தர்றதுக்கு. நீங்க வேற ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்குங்க. அவளைக் காதலிங்க. அன்பு செலுத்துங்க. ஆனா, ஆதிக்கம் செலுத்தாதீங்க.

அப்புறம் பாருங்க... அவ தானா உங்க அடிமையா இருப்பா. உங்க பெண்டாட்டியோட சுதந்திரத்துல நீங்க தலையிடாதீங்க. அவளுக்கே அவளுக்கு சொந்தமான அந்தரங்கத்தில நுழையப் பார்க்காதீங்க. உங்க வாழ்க்கை நரகமாயிடும். இவ்வளவு தூரம் எனக்காக அலைஞ்சதுக்கு நான் உங்களுக்கு ஒரே ஒரு முத்தம் தரேன்... கன்னத்தில். அது ஒரு அன்புப் பரிசு. கன்னம் நல்லா மழுமழுன்னு இருக்கு. என்ன 'பிளேடு' உபயோகிக்கிறீங்க? வரட்டுமா? குட் நைட். குட் பை."

## 12

கண்காட்சி ஆர்ப்பாட்டமாய்த் தொடங்கி இருந்தது. 'கவுண்டரில்' நான் நின்றேன். அலங்காரம் இருந்தது. இளைஞர்கள் எங்கள் கம்பெனி கவுண்டர்களைத் தேடி வந்தார்கள். இப்போது நான் விளக்கு. இளைஞர்கள் ஈசல்கள்.

"ஹாய் பியூட்டி. இது என்னம்மா?"

"யெஸ் ஸார். இது காப்பி மேக்கர். உங்களுக்குத் தலைவலி இருந்தா, உங்களுக்கு நெஜமாவே புத்துணர்ச்சியோட

இருக்கணும்னு 'பீல்' பண்ணீங்கன்னா இதுல காப்பி போட்டுக் குடிங்க. உண்மையான காப்பி இதுதான். 'ஸ்டிராங்கா' இருக்கும்."

"ஒன் கையால காப்பி போட்டுத் தர்றியா, குட்டி?"

"யெஸ் ஸார். கண்டிப்பா! இந்த 'காப்பி மேக்கர்' வெறும் ஆயிரம் ரூபாய் மட்டுமே."

வாழ்க்கை அப்படித்தான்!

இதைப் படித்துக்கொண்டிருக்கிற தோழிகளுக்கெல்லாம் ஒன்று சொல்வேன். என் வாழ்க்கையைச் சொன்னேன். நீங்கள் என் மாதிரிதான் இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. குடும்ப பந்தம் கூடாது, குழந்தை கூடாது என்றெல்லாம் உபதேசிக்கவில்லை.

என் சூழ்நிலைக்கேற்ப நான் நடந்துகொண்டேன். நீங்கள் உங்கள் சூழ்நிலைக்கேற்ப நடந்துகொள்ளுங்கள். ஒருபோதும் உங்கள் சுதந்திரம் உங்களிடம் இருந்து விலகிவிட அனுமதிக்காதீர்கள். உங்கள் சுதந்திரத்தை யாரும் பறித்துவிட இடம் கொடுக்காதீர்கள். உங்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்காதீர்கள்.

படித்துவிட்டு ஒரு நிமிடம் கண் மூடி மவுனமாக யோசித்துப் பாருங்கள். என் முடிவின் நியாயம் உங்களுக்குப் புரியும்.

"யெஸ் ஸார். பளீஸ் கம் ஸார். இன்னைக்கு இந்தியாவிலேயே இதான் 'நம்பர் ஒன் வாஷிங்மெஷின்' சார். உங்க மனைவிக்கு ஒரு பெரிய நிம்மதி. அலச வேணாம். தோய்க்க வேணாம். கசக்க வேணாம். பிழிய வேணாம். வெறும் பதினைஞ்சாயிரம் மட்டுமே சார்."

**(முற்றும்)**

---

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.